# கண்ணன் வரும் வேளை...

அமுதவல்லி கல்யாணசுந்தரம்



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : கண்ணன் வரும் வேளை |
| ஆசிரியர் | : [illegible] கல்யாணசுந்தரம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| [illegible] | : [illegible] |
| [illegible] | : [illegible] |
| பைண்டிங் | : [illegible] |
| நூல் வெளியிடுவோர் | : [illegible] 5/3, [illegible] சாலை, இராயப்பேட்டை, |
| [illegible] | : [illegible] |
| [illegible] | : [illegible] சென்னை-14. |

# கண்ணன் வரும் வேளை...



## 1

சென்னை நூறடி சாலையில், காலை பத்து மணி அளவில் பரபரப்பான கோயம்பேடு பேருந்து நிலையத்தின் எதிரே போக்குவரத்து நெரிசலை கடக்க முடியாமல் தவித்த அந்த காவல்துறை ஜீப்பின் ஓட்டுனர் நேசமணி நூறாவது முறையாக உச்சு கொட்டியபோது அவரை திரும்பிப் பார்த்து புன்னகைத்தான் கமலக்கண்ணன்.

''என்ன நேசமணி, நூற்றி எட்டு முறை உச்சு கொட்டினால் போக்குவரத்து நெரிசல் சரியாகும் என்று யாராவது சொன்னாங்களா? எத்தனை பாக்கி என்று சொன்னால் மிச்சத்தை நானும் சேர்ந்து சொல்வேனே?'' என்று

சிரித்தது கமலக்கண்ணன், ஐ.பி.எஸ். டெபுடி கமிஷனர் ஆப் போலீஸ், அம்பத்தூர்.

''போலீஸ் சைரன் போட்டு போனால் ட்ராபிக் கிளியர் ஆகும். அதுக்கு சார் ஒத்துக் கொள்வதில்லை...''

''ஆம்புலன்ஸ், பையர் எஞ்சின் இதுக்கு சைரன் ஓகே மணி. நாம் அவசரமா போகணும் என்றாலும் போடலாம். இப்ப விசாரணை தானே? கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட் தாண்டி விட்டால் அஞ்சு நிமிஷம் கூட ஆகாது. காலை நேரத்தில் டென்ஷன் ஆகாதீங்க. உங்களுக்கு கஷ்டமா இருந்தால் சொல்லுங்க. நான் ஓட்டுகிறேன்...''

''என்ன சார் அப்படிச் சொல்லிட்டீங்க? எனக்கு என்ன கஷ்டம்? வண்டி ஓட்டுவது தான் என் வேலை. உங்களுக்கு ஆயிரம் வேலை. நீங்க நிதானமா இருக்கும் போது எனக்கு என்ன'' என்று நேசமணி சொல்லும் போதே அலைபேசி அழைத்தது.

''குட்மார்னிங்ம்மா! என்ன காலங்கார்த்தால போன்?''

''பத்து மணி உனக்கு காலங்கார்த்தாலவா? சென்னைக்கு போன பிறகு நாங்க இங்கே இருப்பது ஞாபகம் இருக்கா? எப்ப ஊருக்கு வரலாம் என்று இருக்கிறாய்?'' என்று கேட்டது அவனுடைய அருமை அன்னை கலாவதி.

''ஒரு நாளைக்கு மூணு வாட்டி போன் பண்ணி, சாப்பிட்டாயா? குளித்தாயா? சட்டை போட்டாயா என்று கேள்வி கேட்கும் உங்களை போய் மறக்க முடியுமா?'' என்றவன் கண்கள் கைனட்டிக் ஹோண்டாவில் மின்னலென கடந்த பெண்ணை அளவிட்டது.

'இடியட்! என்ன வேகம்? ரெட் சிக்னல் இருப்பது கூட தெரியாமல் எங்கே இவ்வளவு வேகமா போகிறாள்?'



கண்கள் அந்த வாகனத்தின் பதிவு எண்ணை படிக்க முயன்றது.

தெரியவில்லை. வளைந்து நெளிந்து உள்ளே புகுந்து சென்று இருந்தாள். பின் பக்கம் இடை வரை நீண்டு இருந்த அடர்ந்த கருங்கூந்தலில் ஒரே ஒரு ஆரஞ்சு வண்ண ரோஜா பக்கவாட்டில் பளீர் என்று மின்னியது. அவளின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை அம்மாவின் குரல் இடையிட்டது.

''என்ன இடியட்டா? வாய் ரொம்பத்தான் நீளுது. போனில் அம்மா பிள்ளையுடன் பேச நினைத்தது தப்பா?''

''அம்மா, நான் ஒரு முக்கியமான வேலையாக போய்க் கொண்டு இருக்கிறேன். அப்புறமா பேசுறீங்களா?''

''உனக்கு எப்ப வேலை இல்லை? காலை அஞ்சு மணிக்கு ஜாகிங். ஆறு மணிக்கு யோகா, ஏழு மணிக்கு பேப்பர், எட்டு மணிக்கு டி.வி. ஒன்பது மணியில் இருந்து ராத்திரி பத்து மணி வரைக்கும் வேலை! வேலை! வேலை! ராத்திரி பத்து மணிக்கு போன் பண்ணினால் தூங்க விட மாட்டீங்களா என்ற நக்கல். நான் எப்போ பேசணும் என்று அப்பாயின்ட்மென்ட் கொடு. அப்ப பேசுகிறேன்...'' என்று கலாவதி மறுமுனையில் மூச்சு விடாமல் பேச அவருக்கும் சேர்த்து கமலகண்ணன் மூச்சு வாங்கினான்.

''அப்பா! என்ன வேகம்! என்ன வேகம்! எனக்கு மூச்சு முட்டுது...''

''அட பாவி! போனில் பேசுறது அம்மா. அப்பா என்று நினைத்துக் கொண்டு பேசுகிறாயா?''

''அ..ம்..மா..! என்னாலேயே உங்களுக்கு பதில் சொல்ல முடியலையே? பாவம் அப்பா. சரி நான் ஒரு

முக்கியமான விசாரணைக்கு போகிறேன். என்ன விஷயமா போன் பண்ணினீங்க? சுருக்கமா ரெண்டே வரியில சொல்லுங்க பார்ப்போம்.''

''ரெண்டு வரியில விஷயத்தை நறுக்குன்னு சொல்ல நான் என்ன திருவள்ளுவரா? எதையும் விளக்கமா சொன்னாலே உனக்குப் பிடிக்காது. இதுல...''

''இப்ப விரிவா பேச எனக்கு நேரம் இல்லை. முடியாது ராத்திரி பத்து மணிக்கு மேலே போன் பண்ணுங்க. நிதானமா பேசலாம்.''

''இதையே தான் மூணு நாளா சொல்லிட்டு இருக்கிறாய்...''

''அந்த அளவில் சந்தோஷப்படுங்கம்மா. உங்க பையன் நேற்று ஒரு பேச்சு இன்று ஒரு பேச்சு என்று மாறி மாறிப் பேசவில்லை அல்லவா?''

''ஈ ஈ ஈ ... நீ சொன்ன ஜோக்கிற்கு சிரிச்சாச்சு. போதுமா?''

''அம்மா, பீ சீரியஸ். இப்ப நான் ஆபீஸ் வேலையா வெளியே இருக்கிறேன்...''

''சரி நான் சொல்வதைக் கேட்டுக்கோ. நான் பொண்ணு பார்த்தாச்சு. எனக்குப் பிடிச்சு இருக்கு. உடனே கல்யாணம் நடத்த வேண்டும்.''

''வெரி குட். தன் கணவருக்கு தானே முன்னின்று இரண்டாவது திருமணத்திற்கு பெண் பார்க்கும் புரட்சி பெண் வரிசையில் நீங்கதான் முதலில் வருவீங்க. சீக்கிரம் நல்ல நாள் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சுடுங்க. பத்திரிகை அடிக்கலாமா?''



''என்ன நக்கலா? அங்கே வந்தேன், முதுகு தோல் உறிஞ்சிடும் ஜாக்கிரதை...''

''ஓகே, ஓகே, அங்கே அப்பாவைப் போட்டுக் காய்ச்சி எடுத்துடாதீங்க. இப்ப ஒரு மார்டர் கேஸ்ல, ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீம்ல இருக்கேன். கேஸ் முடிஞ்சப்புறம் ரெண்டு மாசம் லீவு போட்டுட்டு மதுராந்தகம் வந்து ஏரி காத்த ராமர் கதை கேட்டபடி, நீங்க கை காட்டும் பெண்ணை எல்லாம் சைட் அடிச்சு...''

''அடி செருப்பால...''

''அச்சோ போலீஸ் ஆபீசருக்கே செருப்படியா? இதுக்கே வன்முறை என்றால் முழுசும் கேட்டால் என்ன சொல்வீங்களோ?''

''சொல்லித்தான் பாரேன்...''

''லீவுல. நீங்க கை காட்டும் பெண்ணை எல்லாம் சைட் அடிச்சு, நாலு பெண்ணுடன் பழகிப் பார்த்து, அதுல இரண்டு பெண்ணை நேர்முக தேர்வு நடத்தி, கடைசியா ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணி, அவளை கூட்டிட்டு சென்னைக்கு வருவேன். போதுமா?''

''நீ ஊருக்கு வந்த அடுத்த நாள் ஈவ் டீசிங் என்று நம்ம ஊர் போலீஸ் ஸ்டேஷனில் நானே போய் அந்த பொண்ணுங்க சார்பில் கம்ப்ளைன்ட் கொடுத்து முட்டிக்கு முட்டி தட்டி உள்ளே வைக்கச் சொல்வேன்'' என்று சொல்லி விட்டு அம்மா போனை வைக்க, 'ஸோ ஸ்வீட்' என்று முனகியவன் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

''சார், டெம்பிள் டவர்ஸ் தாண்டியாச்சு, எங்க போகணும்?'' என்ற நேசமணியின் குரல் இந்த உலகத்திற்கு அழைத்து வந்தது.

''ராகவா எம்போரியம் போகணும். அதோ அந்த நாலு மாடி கட்டிடம். இங்கே வெளியே நிறுத்துங்க. வண்டியிலேயே இருங்க. பத்து நிமிஷத்துல வந்து விடுகிறேன்'' என்று வரவேற்பு அறையை நோக்கிச் சென்றவன் காலடிகளில் கம்பீரம் மிளிர்ந்தது.

வண்டியை வெளியே நிறுத்தி விட்டு தான் காவல் துறை உயர் அதிகாரி என்பது தெரியாமல் இருக்க கருப்பு ஜீன்சும், ஆகாய நீல வண்ண டி ஷர்ட், அதில் செருகி இருந்த கருப்பு குளிர் கண்ணாடி என்று அட்டகாசமாக உள்ளே நுழைந்த கமலக்கண்ணனை பில் கவுண்டரில் இருந்த நடுத்தர வயது மனிதர் புன்னகையுடன் எழுந்து வரவேற்றார்.

''வாங்க சார், என்ன இவ்வளவு தூரம்?'' என்று விசாரித்தவரை கண்ணால் அடக்கி அவரின் இருப்பிடத்தில் அமர வைத்தான்.

''பத்துக்கு பத்து, நல்ல குவாலிட்டி காஷ்மீர கம்பளம் வேண்டும். எங்கே பார்க்கலாம்? எவ்வளவு விலையாகும்?'' என்று பொருள் வாங்க வந்தவன் போல விசாரிக்க அவர் ஒரு நிமிடம் தயங்கி பின், ''முத்து, சார் நமக்குத் தெரிந்தவர். கார்ப்பெட் செக்ஷன் கூட்டிட்டு போய் என்ன வேண்டும் என்று கவனி'' என்று கண்ணில் தெரிந்த பணியாளரை ஏவினார்.

''முத்து! என்ன இங்கே கார்ப்பெட் செக்ஷன் வந்தாச்சா? டைல்ஸ் பற்றி சொல்லிச் சொல்லி போர் அடிச்சுடுச்சா?'' என்று அங்கே இருந்த யாரோ விசாரிக்க அவனுக்கு சில அடிகள் முன்னால் நடந்து கொண்டு இருந்தவன் நின்று திரும்பிப் பார்த்தான்.



இவள் கைனடிக் ஹோண்டாவில் பறந்து வந்தவள் அல்லவா? இங்கே என்ன செய்கிறாள்? ஆரஞ்சு வண்ணமும், பச்சை வண்ணமும் கொடிகளும் பூக்களுமாக பரவி இருந்த காட்டன் சுடிதார் அணிந்து இருந்தாள். தலைக்கு குளித்து இன்னும் காயாததால், சரியாக வாரப்படாமல், கிளிப் போட்டு இருந்தாள்.

, பக்கவாட்டில் ஒற்றை ஆரஞ்சு ரோஜாவை வைத்து தான், இவள் அவள் என்று அடையாளம் காண முடிந்தது. முழு நிலவு போக முகம் பளீர் என்று சிரிப்பில் மின்னியது. கடை பணியாளர் என்ற நிலையை தாண்டி எளிய வனிடம் இயல்பாகப் பேசியது அவனை கவர்ந்தது. காவல் துறையில் இருப்பதனாலேயே, அவனின் அசைவுகள் பெரும்பாலும் யாரின் கவனத்தையும் ஈர்க்காத வகையில் இருக்க பழகி இருந்தவன், தன் கட்டுப்பாட்டை இழந்து, அவளை நேரிடையாக திரும்பிப் பார்த்தது அவளின் கவனத்தை ஈர்த்தது.

''போலீஸ் ஆபீசர் கூட வந்து இருக்கீங்க. போய் அவரை கவனிங்க. சார் கோபித்துக் கொள்ளப் போகிறார்...'' என்றவளின் மை பூசிய கண்கள் மலர்ந்து 'என்னுடன் சேர்ந்து சிரிக்க வா' என்று அழைப்பு விட்டது.

''ஹலோ மேடம், என் தலையில் முடியை க்ளோசா கட் பண்ணி இருக்கிறேனா? இல்லை தமிழ் சினிமாவில் காட்டுவது மாதிரி பெரிசா தொப்பை இருக்கா? எதை வைத்து நான் போலீஸ் என்று சொல்றீங்க? ஐ ஆம் டாக்டர் கமலக்கண்ணன்.''

''ம்ஹூம்! நிஜமாவா...?'' என்றவளின் கண்கள் அவனை சிரிப்போடு ஆராய்ந்தது.

"முதன் முதலில் சந்திக்கும் உங்களிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே? நான் படித்ததைச் சொன்னால் உங்களுக்கு ஏன் சந்தேகம்?''

"ஓகே, நீங்க டாக்டர் என்று சொன்னால் நான் எப்படி மறுக்க முடியும்? சரி ஒத்துக்கொள்கிறேன்'' என்று தோளைக் குலுக்கி வெளியேறியவளை வியப்புடன் பார்த்தான் கமலக்கண்ணன்.



# 2

தன் உத்தியோகத்தை எப்படி கண்டு பிடித்தாள் என்ற சந்தேகம் எழுந்து, தான் அவளை பார்த்த மாதிரி அவளும் தன்னை போலீஸ் ஜீப்பில் பார்த்து இருக்கலாம் என்ற முடிவிற்கு சில நிமிடங்களில் வந்தவன் புன்னகையோடு முத்துவிடம் திரும்பினான்.

''சார், இந்த பக்கம் வெராண்டாவில் போட சணலால் செய்யப்பட்ட மேட் இருக்கு. ஹாலில் போட விலை உயர்ந்த கம்பளங்கள் அந்த பக்கம் இருக்கு. ரூமில் போட, சின்ன சைசில் வலது புறம் இருக்கு. உங்களுக்கு என்ன வேண்டும்?''

''ஹாலில் போடக்கூடிய பெரிய சைஸ் கம்பளங்கள். காஸ்ட்லியா ஐம்பதாயிரம் அல்லது அதுக்கும் மேலே மதிப்பில் வேண்டும்.''

''அதெல்லாம் ஆர்டர் பண்ணி செய்வாங்க சார். வாங்கி வைத்தால் பணம் முடங்கி விடும் இல்லையா?



நாங்க ஏற்கனவே பண்ணித் தந்த கம்பளங்களை போட்டோ பிடித்து ஆல்பம் வைத்து இருப்போம். அதுல உங்களுக்கு என்ன பிடித்து இருக்கு என்று சொன்னால்...''

''ஓகே, காட்டுங்க...'' என்று அவன் பின்னால் செல்லும் போதே மீண்டும் அம்மாவின் போன் குறுக்கிட்டது.

''இதென்ன சின்னக் குழந்தை மாதிரி தொந்தரவு பண்றீங்கம்மா? என்ன ஆச்சு உங்களுக்கு? டோன்ட் டிஸ்டர்ப் மீ'' என்று கண்டிப்புடன் சொல்ல ராமச்சந்திரன் பதறினார்.

''சாரி கண்ணா! டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? நீ இப்ப கோயம்பேடுல இருக்கிறாயா?''

''அப்பா! நீங்களா? ஏன்பா என்ன விஷயம்?''

''ஒரு தகவல் சொல்லப் போன் பண்ணினேன். இரண்டு நிமிஷத்துல சொல்லக் கூடிய விஷயம் இல்லை. அதை கேட்கும் மனநிலையிலும் நீ இல்லை. நான் நைட் பேசுறேன். நீ வேலையைப் பாரு'' என்று அவர் போனை வைக்க அவன் புன்னகைத்தான்.

இது அப்பா! அம்மா சரவெடி என்றால் அப்பா பூவாணம். பெருமிதத்துடன் மொபைலில் குடும்ப போட்டோவை பார்க்கையில் முத்துவின் குரல் இடையிட்டது.

''சார், ஆல்பம் பார்க்கறீங்களா?''

''எஸ் முத்து. கொண்டாங்க'' என்று வேலையில் ஆழ்ந்தான்.

''இந்த செக்ஷனில் எப்போதும் இருப்பது யார்? ஆர்டர் கொடுத்தால் எத்தனை நாளில் கிடைக்கும்? எப்படி

இருக்கு என்று ஏற்கனவே வாங்கியவர்களிடம் கருத்து கேட்க அவர்களின் பட்டியல் கிடைக்குமா?'' என்று விசாரணை நடத்தியபடி ஆல்பத்தைப் புரட்டியவன் கண்கள் ஒரு பக்கத்தில் நிலைத்தது.

''இதே மாதிரி வேண்டும். இது எப்போ யார் வாங்கி னாங்க தெரியுமா?'' என்று கண்களில் தோன்றிய பர பரப்பை அடக்கி விசாரித்தான்.

''போட்டோ பின்னாடி இன்வாய்ஸ் நம்பர் இருக்கும் சார். அதைப் பார்த்துக் கண்டு பிடிக்கலாம்'' என்றதும், அவன் கண்கள் காமராவாக மாறி நம்பரைப் படம் பிடித்தது.

கீழே படிகளில் இறங்குகையில் கண்கள் அவள் இருக்கிறாளா என்று தேடி அலைய, ''என்ன சார், வேறே ஏதாவது பார்க்கணுமா?'' என்று அவன் கண்களில் தேடலை உணர்ந்து விசாரித்தான் முத்து.

''கொஞ்சம் முன்னாடி உங்களோடு ஒரு பெண் பேசிக் கொண்டு இருந்தாங்களே! அவங்க ஆர்க்கிடெக்ட் என்று சொன்னாங்க. அதான் அவர்களிடம் கம்பளத்தின் தரம் பற்றி விசாரிக்க இருக்காங்களா என்று பார்த்தேன்'' என்று புன்னகைத்தான் கமல்.

''அவங்க ஆர்க்கிடெக்ட் இல்லை சார், சிவில் இஞ் சினியர். ஆனால் இன்டீரியர் டெக்கரேஷன்ல ரொம்ப ஆர்வம். எப்படியும் வாரத்துல மூணு நாள் இங்கே வந்துடுவாங்க. அவங்க கம்பெனியில பர்சேஸ் ஆர்டர் போட்டால் எடுத்துட்டுப் பறந்து வந்துடுவாங்க...''

''அதான் பார்த்தேனே...'' என்று கமல் சிரிப்புடன் முணுமுணுக்க, அவன் விழித்தான்.



''என்ன சார் சொல்றீங்க?''

''ஒன்றும் இல்லை முத்து. நீங்க நிறைய தகவல் சொல்லி இருக்கீங்க. நன்றி என்று சொன்னேன்'' என்று அவனிடம் கை குலுக்கி விடை பெற்றவன் கவுண்ட ருக்கு வந்தான்.

''இந்த இன்வாய்ஸ் நம்பரை வச்சு யார் எப்போ வாங்கி னாங்க, என்ன முகவரி? போன் நம்பர் இருக்கா? விபரங் களை குறிச்சுக் கொடுங்க'' என்று சொல்ல, பத்தே நிமிடத்தில், கணினியில் தேடி, அந்த பில் எடுத்து வந்த வரின் முகத்தில் கலவரம் இருந்தது.

''என்ன கண்ணில் கலவரம்? பைனான்ஸ் மினிஸ்டர் வீட்டுக்குப் போய் இருக்கோ?''

''ஆமா... சார்... ஆனால்... இது... நீங்க ஏன்...? வெளியே தெரிந்தால்...''

''கவலைப்படாதீங்க. இப்பதான் கேஸ் நுனி கிடைத்து இருக்கு. என் சந்தேகம் சரி என்றால் இன்னும் இரண்டே நாளில், மேலும் விபரங்களுக்கு மீண்டும் அம்பத்தூர் டீ.சீ.பீ. யா வருவேன்'' என்று புன்னகைத்து விட்டு கம் பீரமாக வெளியேறியவனை, கலவரத்துடன் பார்த்தார் ராமகிருஷ்ணன்.

''மணி, ஆவடி ரோட்டில் ஒரு பொறியியல் கல்லூரி இருக்கு தெரியுமா? அந்த ஏரியா போகணும்'' என்று வேகமாக ஜீப்பில் ஏறியவனின் குரலில் பரபரப்பு இருந்தது.

''பைனான்ஸ் மினிஸ்டர் பீ.ஏ. நடத்தும் அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரி தானே? இருபது நிமிஷத்துல போகலாம் சார்'' என்று அவன் பரபரப்புக்கு

ஈடு கொடுத்து, வாகனத்தை செலுத்தினார் நேசமணி. அவர் பாதையில் கவனமாக இருக்க, அவன் தன் கீழ் பணிபுரியும் மூன்று தேர்ந்தெடுத்த அலுவலர்களுக்குத் தந்தி பாஷையில் போனில் உத்தரவிட்டுக் கொண்டு இருந்தான்.

''ரியாஸ், நீங்க அந்த வளர்மதி வீட்டுக்குப் போன உடனே விசாரணையை ஆரம்பியுங்க. கடந்த மூன்று வாரத்துல அவங்க எங்கெங்கே போனாங்க. அதுல வெளியூர் பிரயாணம் இருந்ததா? குறிப்பா நைட் ஸ்டே இருந்ததா? கடைசியா ராகுல் எப்ப வீட்டுக்கு வந்தான்? எத்தனை நாள் இருந்தான்? என்று விசாரிச்சு வைங்க. வீட்டைச் சுத்தி இன்னொரு முறை பாருங்க. நான் அரை மணி நேரத்துல வரேன்...'' என்று ஒரு போன் கால் முடிவடைந்தது.

''ராஜ், அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரியின் ராகுலின் அட்டெண்டன்ஸ் காப்பி வாங் கிட்டு, உடன் பயிலும் மாணவர்களிடம் விசாரித்து விட்டு வளர்மதி வீட்டுக்கு வந்துடுங்க. நானும் அங்கே வந்து விடுவேன்'' என்று ஒரு போன் கால் முடிந்தது.

''ராபர்ட், அந்த பாலிடெக்னிக் மாணவி மர்டர் கேசில் ஏதாவது கைரேகை கண்டு பிடிக்க முடிந்ததா?'' என்ற கேள்விக்கு வந்த பதில் அவனை உற்சாகப்படுத்தியது.

''கை ரேகை இல்லை சார், ஆனால் அந்த வீட்டில் இருந்த கம்பளத்தில் ஒரு தலை முடி இருக்கு சார். நரைத்த முடி டை அடிக்கப்பட்டு இருக்கு...'' என்ற ராபர்ட்டின் பதிலில் அவன் சீட்டி அடிக்க நேசமணி திரும்பிப் பார்த்தார்.

''ரொம்ப சந்தோஷமா இருக்க மாதிரி இருக்கு. கேஸ் முடிஞ்சுடுச்சா சார்...''



''முடிஞ்ச மாதிரி தான். இப்படி நடந்து இருக்கும் என்று முடிவு பண்ணியாச்சு. அதற்குரிய ஆவணங்கள் சாட்சி ரெடி பண்ணி விட்டால் அவ்வளவுதான்.''

''பெரிய இடத்து விவகாரம் சார். கொஞ்சம் பார்த்து...''

''என்ன மணி பயமுறுத்துறீங்களா? சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம். தப்பு செய்தால் தண் டனை அனுபவிக்க வேண்டாமா?'' என்று அவருக்கு வேகத்துடன் பதில் சொல்ல ஆரம்பித்தவன் பாவனை சற்று தூரத்தில் கல்லூரி மாணவர்கள் கூட்டமாக நின்று இருப்பதை பார்த்த உடனே மாறியது.

''அங்கே என்ன கூட்டம்? ஆக்சிடென்ட் மாதிரி இருக்கு. ஓரமா வண்டியை நிறுத்துங்க...'' என்று இறங்கி கூட்டத்தை விலக்கி உள்ளே சென்றான் கமல்.

நடுவில் கைனடிக் ஹோண்டா சரிந்து கிடக்க, இடது முழங்கையில் ரத்தம் கசிய, அதை பொருட்படுத்தாமல், மார்போடு சேர்த்து வைத்த ஒரு பூனை குட்டியுடன், எதிரே நின்ற கல்லூரி மாணவனை லெப்ட் அண்ட் ரைட் வாங்கிக் கொண்டு இருந்தது. 'அவள்'. ஆரஞ்சு வண்ண ஒற்றை ரோஜாவுடன் அதே பெண்ணை அன் றைய தினம் ஆரம்பித்து ஒன்றரை மணி நேரத்திற்குள் மூன்றாவது முறையாக பார்க்க நேர்ந்தது.



## 3

காலையில் முதல் முறை பார்த்தபோது அவள் தன் கவனத்தை ஈர்த்ததற்கு காரணம் அவளின் வேகம்

மட்டும் இல்லை என்பதை கமலக்கண்ணன் உணர்ந்து இருந்தாலும், பணியில் இருக்கும்போது கவனத்தைச் சிதற விடுவது சரி இல்லை என்று மனதைக் கட்டுப் படுத்தி இருந்தான். இரண்டாவது முறை பார்த்தபோது உள்ளம் துள்ளியது. அவள் சென்று விட்டாளா என்று கடையில் தேடியது உண்மை. சில நிமிடங்களில் மீண்டும் அவள். இது இயல்பான சந்திப்பா? தெய்வ சங்கல்பமா?

''யாருக்காவது அடிபட்டு இருக்கா? என்ன கூட்டம்? போக்குவரத்தை பாதிக்காமல் நகருங்க'' என்று கூட் டத்தைக் கலைக்க நேசமணி சொன்ன வார்த்தைகள் கமலை இங்கே அழைத்து வந்தது.

''மருத்துவமனையில் சேர்க்க வேண்டுமா? ஆம்புலன் சுக்கு சொல்லியாச்சா? நேரத்தை வீணாக்காதீங்க. சம் பந்தமில்லாதவர்கள் நகருங்க'' என்று பொதுவாக விரட் டியவன் பார்வை ஒரு சுழற்சிக்குப் பிறகு அப்போதுதான் அவளைப் பார்த்தது போல விரிந்தது.

''ஹேய்! இங்கே என்ன பண்ணிட்டு இருக்க? ஏதா வது பிரச்னையா?'' என்று அக்கறையாக அவளிடம், விசாரித்த கண்கள் சுற்றுப் புறத்தில் நின்று இருந்தவர் களை அளக்கவும் தவறவில்லை. இருபது மாணவர்கள் இருக்கலாம். இவர்களிடம் என்ன பிரச்னை? இங்கே தான் வராவிட்டால் தேவை இல்லாத சிக்கலில் மாட்டி இருப்பாளோ?

''நான் என்னோட வேலை நடக்கும் இடத்திற்குப் போறேன். நடு ரோட்டில் நின்று நீங்க என்ன பண்றீங்க டா..க்..டர்?'' என்று கேட்டவளின் கண்களில் குறும்பு இருந்தது.



''நடு ரோட்டில் கூட்டமாக இருக்கே? ஒருவேளை யாருக்கேனும் விபத்து என்றால் மருத்துவ உதவி தேவைப்படுமே என்று ஒரு மனிதாபிமானத்தில் இறங் கினேன். தப்பா?''

''மனிதாபிமானத்தில் உதவ இறங்குவதை தப்பு என்று எப்படி சொல்ல முடியும்? ஆனால் மருத்துவர், காவல் துறை அதிகாரி மாதிரி பொது மக்களை அதட்டு வதும், காவல் துறை ஜீப்பில் வருவதும் சரி என்று சொல்ல முடியுமா?''

''சரி தவறு இருக்கட்டும். சட்டத்தின் காவலர்கள் மட்டும் தான் இந்த மாதிரி சின்னச் சின்ன வேலைகளை கூடச் செய்ய வேண்டும் என்று காத்திருப்பது சரி இல்லை. பொது அமைதியைக் காப்பாற்றுவதில் ஒவ் வொரு குடிமகனுக்கும் பங்கு இருக்கு என்று கேள்விப் பட்டதில்லையா? அதெல்லாம் இருக்கட்டும். கையில் காயம் பட்டு இருக்கு. அதற்கு மருந்து போடணும். முதலில் இந்த மாணவர்களுடன் என்ன பிரச்னை?...''

''எனக்கு மருந்து போடுவது அப்புறம். இந்த பூனைக்கு முதலில் கட்டுப் போடுங்க...'' என்று சொன்னவளை வியப்போடு பார்த்தான் கமல்.

''மனித உயிர்களே இங்கே சரியாக மதிக்கப்படுவ தில்லை. நீங்க பூனைக்காக இவ்வளவு தூரம் வாதாடு வது ஆச்சரியமா இருக்கு. நீங்க பூனையை எடுத்துட்டு வண்டிக்கு போங்க. மணி, நீங்க ட்ராபிக் கிளியர் பண்ணுங்க. இரண்டு நிமிஷத்துல கிளம்பிடலாம்'' என்று ஜீப்பை நோக்கி நடக்க அவனைப் பின் தொடர்ந் தாள்.

''இந்த காலேஜ் பசங்க, வேகமா வண்டி ஓட்டியதில், இந்த பூனைக்கு அடிபட்டு விட்டது. இதைக் கேட்ட என்னுடன் சண்டைக்கு வராங்க. நான் ப்ளூ க்ராஸ் உறுப்பினர். இவனை கோர்ட்டில் நிற்க வைத்து பைன் கட்ட வைக்காமல் விட மாட்டேன். கம்ப்ளைன்ட் தரேன். முதலில் கேஸ் போடுங்க'' என்று வேகமாகப் பேச அவன் புன்னகை செய்தான்.

''ப்ளூ க்ராஸ் மெம்பர்? குட். உங்களுக்கும் உங்க செல்லகுட்டி பூனைக்கும் கட்டுப் போட்டு விடுகிறேன். கேஸ் நான் எப்படி போடுவது?'' என்று சொல்லும் போதே போக்குவரத்து காவல் துறையினர் இருவர் பைக்கில் வந்து அவனுக்கு சல்யூட் அடிக்க, அவள் வாயை பொத்திக் கொண்டு சிரிப்பது கண்ணில் பட்டது.

இரண்டு நிமிடத்தில், முதலுதவி பெட்டியில் இருந்த உபகரணங்களைப் பயன்படுத்தி, காயத்தை சுத்தம் செய்து நேர்த்தியாக கட்டுப் போட்டு விட்டு, ''கடைசியா எப்ப டி.டி. போட்டீங்க ஞாபகம் இருக்கா?'' என்று விசாரிக்க அவளிடம் இருந்து பதில் இல்லை.

''ஹலோ மேடம், நான் கேட்டது காதில் விழுந்ததா?'' என்று மீண்டும் அழுத்திக் கேட்க அவள் புன்னகைத்த படி தலை அசைத்தாள்.

''ம்ம்ம், கேட்டது. நி..ஜ..மா..வே நீ..ங்..க டாக்டர் தானா?''

''ஏன் என்னைப் பார்த்தால் டாக்டர் மாதிரி தெரியலையா?''

''இல்லை. முதலில் போலீஸ் ஜீப்பில் பார்த்ததால்... ப்ச்... இப்ப நீங்க கட்டு போட்டதை வைத்து நூறு



சதவிகிதம் நிச்சயமா சொல்லலாம். நீங்க மருத்துவம் பற்றி படித்து இருக்க வேண்டும். முதலில் கேலியாகப் பேசியதற்கு சாரி...''

''சாரி எல்லாம் தேவை இல்லை. என்னை டாக்டர் என்று பெரிய மனசு பண்ணி ஒத்துக் கொண்டதுக்கு தேங்க்ஸ். கால்நடை மருத்துவம் படித்து இருக்கிறேன். காவல் துறையில் வேலை பார்க்கிறேன். சரி காலையில் இருந்து மூன்று தடவை பார்த்தாச்சு. நிறைய பேசியாச்சு. என் பேர் உங்களுக்குத் தெரியும். உங்க பேர் சொல்லவே இல்லையே? உங்க பேர் என்ன?''

''வாட்! என் பேர் உங்களுக்குத் தெரியாதா?''

''உங்க பேர் எனக்கு எப்படித் தெரியும்?''

''இன்னும் கொஞ்ச நேரம் பேசினால் என்னையே யார் என்று தெரியாது என்று சொல்வீங்க போல'' என்றவள் கண்ணில் கோபம் இருந்தது.

''ச்சே! ச்சே! உங்களை தெரியாது என்று சொல்ல எனக்குக் கண் தெரியாமல் இல்லையே? உங்களைத் தெரியும். ஆனால் யார் என்று தெரியவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்...'' என்று சிரிக்க அவள் முறைத்தாள்.

''நல்லா சொல்லிக்கோங்க. ரொம்ப சந்தோஷம். ஒண்ணுமே தெரியாத மாதிரி ஆக்டிங்கை பாரேன்!'' என்று வெடுக் என்று சொன்னவள் வேகமாக விலகி நடக்க அவன் விழித்தான்.

''ஹலோ கோபமா? என்ன கிளம்பிட்டீங்க? பேர் சொல்லலை'' என்று ஒரு எட்டு அவளின் பின்னால் எடுத்து

வைத்தவன், வண்டிக்குள் இருந்து மொபைல் அழைக்கவும் கடமை வீரனாக திரும்பினான். சை! அங்கே ரியாஸும், ராஜும் காத்திருப்பார்களே? எப்படி வேலையை மறந்தான்? ஜீப்பில் ஏறியவன் அவளை திரும்பியும் பார்க்கவில்லை. இந்த விசாரணை முடியும் வரை சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை என்று உறுதியாகச் சொல்லிக் கொண்டான்.

வீட்டில் இறங்கும் போதே வாசலில் காத்திருந்த ராஜ் சல்யூட் அடிக்க, தலை அசைப்பால் பெற்றுக் கொண்டவன் பார்வை, 'போன காரியம் என்ன ஆச்சு?' என்று விசாரித்தது.

''சார், காலேஜைப் பொறுத்தவரை, ராகுல் ரொம்ப ரெகுலர் சார். நன்றாகப் படிக்கும் மாணவன். அதிகம் நண்பர்கள் இல்லை. அவங்க அம்மா இரண்டாவது மனைவி என்ற விஷயம் அவனைப் பொது வாழ்வில் இருந்து தள்ளியே வைத்து இருக்கு சார். ஒரு நாள் கூட கடந்த மூன்றரை ஆண்டுகளில் லீவு எடுக்கவில்லை. இப்போ கடந்த பத்து நாளா கல்லூரிக்கு வரவில்லை என்று சொல்றாங்க சார்...''

''ஓ.கே., ராகுலுக்கும் இந்த பெண்ணுக்கும் பழக்கம் எப்படி...''

''அந்த பொண்ணும் இவனும் ஒரே பஸ்ஸில் போய் வந்து இருக்காங்க சார். ஆனால் இவனின் காதல் பற்றி கல்லூரியில் தெரியவில்லை சார். அவன் இந்த பெண்ணை அழைத்துப் போய் கொன்று இருக்க வாய்ப்பு இல்லை சார்...''

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆனால் இப்போ அவன் எங்கே என்பதைக் கண்டு பிடிக்காத



வரையில், இதை நாம் உறுதியாகச் சொல்ல முடியாதே? நீ அந்த ராகினி இருந்த ஹாஸ்டலுக்குப் போய், ராகுலைப் பற்றி அவங்களுக்கு ஏதாவது தெரிந்து இருக்கா என்ற தகவலை விசாரித்துவிட்டுப் போன் பண்ணு. எனக்குக் கோயம்பேடு அஜந்தா டவர்ஸ்ல ஒரு விசாரணை இருக்கு...''

''அஜந்தா டவர்ஸ்க்கு ஒரு மணிக்கு வந்து விடுகிறேன் சார்'' என்று ராஜ் கிளம்ப, வீட்டினுள் நுழைந்தான் கமலக்கண்ணன்.

''இங்கே பாருங்கம்மா! எனக்குத் தெரியாது என்பதையே விதம் விதமான பாவனையில் சொல்லி பிரயோஜனம் இல்லை. ராகுல் எங்கே இருக்கிறான் என்று சொல்லிடுங்க. இந்த உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும், அவனைக் கண்டு பிடித்து...'' என்று வளர்மதியை மிரட்டிக் கொண்டு இருந்த ரியாஸ், கமலைக் கண்டதும் எழுந்தான்.

''மிசஸ் வளர்மதி என்ன சொல்றாங்க ரியாஸ்?'' என்று கேட்டபடி அருகில் இருந்த ஒற்றை சோபாவில் கால் மேல் கால் போட்டு கம்பீரமாக அமர்ந்தான்.

''ராகுலைப் பார்த்து பத்து நாளாச்சு. அவன் எங்கே இருக்கான் தெரியலை என்று சொல்றாங்க சார்...''

''சொல்லுங்கம்மா. நீங்க கடைசியா ராகுலை எப்போ எங்கே பார்த்தீங்க?''

''பத்து நாள் இருக்கும். அந்த பொண்ணு சாவதற்கு முதல் நாள் காலை பத்து மணிக்கு இவன் காலேஜுக்கு போவதற்கு முன்னால் பார்த்ததுதான். அதன் பிறகு பார்க்கவில்லை...''

''அந்த பொண்ணு சாகும்போது நீங்க எங்கே போய் இருந்தீங்க?''

''ஆற்காடு பக்கத்துல செம்மஞ்சேரி என்று ஒரு கிராமம். அங்கே அந்த பொண்ணு வீடு இருக்கு. அங்கே தான் சம்பந்தம் பேசத்தான் சார் போனேன். அங்கே இருக்கும்போதே அந்த பெண் இறந்த தகவல் வந்து எல்லோரும் ஒன்றாகத்தான் இங்கே வந்தோம்...''

''உங்க வீட்டிலோ, அந்த பொண்ணு வீட்டிலோ, இந்தக் கல்யாணம் நடப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தாங்களா? நல்லா யோசித்துச் சொல்லுங்க...''

''இல்லை சார். ரெண்டு பேருக்கும் படிப்பு முடிந்ததும் திருமணம் செய்யலாம். இப்போதைக்கு நிச்சயம் பண்ணலாம் என்று மோதிரம் வாங்கி வச்சு இருக்கோம். ராகுலுக்கு நான் மட்டும் தான். எனக்கு சம்மதம் சார். வேறே யார் இந்த கல்யாணத்திற்கு எதிர்ப்பு சொல்லப் போறா?''

''ராகுலோட அப்பா...''

''அது என்னோட பெர்சனல் விஷயம். அவர் எங்க குடும்ப விஷயத்துல தலையிடுவதே இல்லை. அதுக்கும் இந்த பொண்ணு மரணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று எத்தனை தடவை சார் திருப்பி திருப்பிச் சொல்வது? ஏன் சார் நம்ப மாட்டேங்கிறீங்க?''

''உங்க பெர்சனல் விஷயம் நான்கு சுவருக்குள் இருக்கும்போது நாங்க தலையிடலை. அது ஒரு கொலையில் முடிந்த பின்பு கேட்காமல் இருக்க முடியாது. மிசஸ் வளர்மதி போலீஸ் விசாரணைக்கு நீங்க முழுமையா ஒத்துழைக்க வேண்டும். இல்லை என்றால்...''



''இல்லை என்றால் என்ன செய்வீங்க சார்? அரஸ்ட் பண்ணுவீங்களா? தாராளமா பண்ணிக்கோங்க. என்னைத் தூக்கில் வேண்டுமானாலும் போடுங்க. நானே பெற்ற பிள்ளையைக் கண்ணால் பார்த்தே பத்து நாளாச்சு என்று புலம்பிட்டு இருக்கேன்'' என்று உணர்ச்சிப் பெருக்கில் புலம்பியவர் கண்ணில் நீர் வழிய அவன் எழுந்தான்.

''நீங்க என்னிடம் உண்மையைச் சொல்லவில்லை என்பதற்கான முதல் சான்று கிடைக்கும் நொடி, அரஸ்ட் பண்ண நீங்க எனக்கு அனுமதி கொடுக்க வேண்டியதில்லை. நானே செய்வேன்'' என்று கடினமான குரலில் சொல்லிவிட்டு வெளியேறிய கமலக்கண்ணன் ரியாஸை கை காட்டி அருகே அழைத்தான்.

''ரியாஸ், நீங்க செம்மஞ்சேரியில் அந்த பெண்ணின் முகவரி வாங்கி நேரிலேயே போங்க. இந்த வளர்மதி சொன்ன விஷயங்களில் ஏதாவது மாறுபாடு இருக்கா என்று விசாரித்து விட்டு, அந்த பெண்ணுக்கு எதிரா அந்தப் பக்கம் யாராவது இருக்காங்களா என்பதை விசாரித்து விட்டு எனக்குச் சொல்லுங்க. இப்ப மணி பதினொன்றரை. மாலை நான்கு மணி அளவில் போன் காலை நான் எதிர்பார்ப்பேன். ஓகே?''

''எஸ் சார், அதற்கு முன்னாலேயே உங்களை அழைக்க முயற்சி செய்கிறேன் சார்'' என்று சொல்லிய அடுத்த நிமிடம் காணாமல் போனான் ரியாஸ்.

திறமையான சகாக்களை ஆளுக்கு ஒரு புறம் அனுப்பி விட்டு அவன் கோயம்பேட்டில் இருந்த அஜந்தா டவர்சை அடுத்த இருபது நிமிடத்தில் அடைந்த போது, வரவேற்பு அறையில் அவனை எதிர்கொண்டு அழைத்தது, அந்த ஆரஞ்சு வண்ண ரோஜாவை ஒரு பக்கம்

செருகி இருந்த, அதே பெண். மீண்டும் இவளா? இங்கே எங்கே வந்தாள்?



# 4

'உங்களை தெரியலை என்று சொல்ல எனக்கு கண் குருடு இல்லை. யார் என்று தெரியலை என்று சொல்வேன்' என்று சாதாரணமாகச் சொன்ன கமலக்கண்ணனைப் பார்க்க ராதிகாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது. இவன் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறான்? இன்று வீட்டிற்கு வருவதாக இவனுடைய பெற்றோர்கள் சொல்லி இருந்தார்கள்.

அந்தத் திட்டம் தள்ளிப் போகிறது என்று காலையில் அவர்கள் வீட்டில் இருந்து தகவல் வந்த போதே ஒரு மாதிரி இருந்தது. ஆனால் வேலைக்குக் கிளம்பிய போது வழியில் அவனைப் பார்க்க நேர்ந்ததில் சற்றே அடங்கி இருந்த உற்சாகம் மீண்டது.

இரண்டாம் முறை ராகவா எம்போரியத்தில் பார்த்த உடனே உற்சாகம் கரை புரண்டது. அவனிடம் பேச வேண்டும், வம்பிழுக்க வேண்டும் என்று பொங்கிய ஆவல் அவன் போனில் அம்மாவைக் கடித்ததைக் கேட்ட நொடியில் காணாமல் போனது.

''யப்பா! இத்தனை ஆண்டுகள் கண்ணும் கருத்துமாக வளர்த்த அம்மாவையே இப்படி வறுத்து எடுக்கிறானே? நாம் பேசினால் என்ன செய்வானோ?'' என்று தயக்கம் தோன்ற அந்த இடத்தில் இருந்து விலகிப் போனாள்.



சில நிமிடங்களில் மீண்டும் சாலையில் அவனைக் கண்டதும், அவன் தன்னை ஆர்வமாகப் பார்த்ததும், அக்கறையுடன் பேசியதும் அவளின் மனதைத் தொட்டது. கடைசியில் சொன்ன வார்த்தை மீண்டும் அவளை விலக்க எரிச்சலோடு திரும்பி நடந்தவளை அவளின் அலைபேசி அழைத்து நிறுத்தியது.

''ஹலோ...! நான் கலாவதி மதுராந்தகத்தில் இருந்து பேசுகிறேன். அது ராதிகாதானே...?'' என்று தயக்கத்துடன் வந்த குரலை அவளால் அடையாளம் காண முடிந்தது.

''ஹலோ ஆன்ட்டி! ராதிகா தான் பேசறேன். நான் சரியா கவனிக்காமல்...'' என்று திணற எதிர் முனையில் கலாவதி ஆதரவாகப் பேசினார்.

''ராதிகா, காலையில் அம்மாவிடம் பேசியபோது நீ குளித்துக் கொண்டு இருந்தாய். அதான் தகவல் சொல்ல போன் பண்ணினேன். இப்ப பேசலாமா? நீ ப்ரீயா இருக்கிறாயா?''

''ப்ரீ தான். சொல்லுங்க ஆன்ட்டி...''

''நான் ரெண்டு மூணு நாளா கண்ணனிடம் பேச முயற்சி செய்தும் பேசவே முடியலை. அவன் ரொம்ப பிசியா இருக்கான். உன்னை எங்களுக்கு ரொம்பப் பிடித்து இருக்கு. அவனுக்கும் உன்னைப் பார்த்தால் பிடிக்கும். முக்கியமான கேஸ் விஷயமா அலையுறான். என்னை தொந்தரவு பண்ணாதீங்க என்று ரொம்ப கண்டிப்பா சொல்லி விட்டதால், வாக்களித்தபடி வர முடியலை. போனில் பேசினால் கூட கடிக்கிறான்...''

''தெரியும் ஆன்ட்டி நானே பார்த்தேனே...''

''நீ பார்த்தாயா? நிஜமாவா? எங்கே? எப்போ? எப்படி?'' என்று அடுக்கடுக்காக கேள்விகள் வர அவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''இப்ப கோயம்பேட்டில் வேலையா போய் இருந்த போது அவரும் அங்கே வந்து இருந்தார்...'' என்று தயக்கத்துடன் இழுக்க அவர் வேகமாக இடையிட்டார்.

''அவன் உன்னைப் பார்த்தானா? பேசினானா? என்ன சொன்னான்?''

''எனக்கு அவரைத் தெரிந்தது. ஆனால் அவருக்கு என்னைத் தெரியலையே ஆன்ட்டி...'' என்று தாங்கலுடன் ராதிகா சொல்ல அவர் சிரித்தார்.

''அவனுக்கு எப்படிம்மா தெரியும்? கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாலே போனில் பேச மாட்டான். மெயில் பார்க்க மாட்டான். தபால் படிக்க மாட்டான். நீ யார் என்று தெரியா விட்டாலும் பரவாயில்லை. உன்னை அவன் பார்த்தானா? அதைச் சொல்லு...''

''ம்ம்ம். பார்த்தார் ஆன்ட்டி...''

''பேசினானா?''

''ம்ம்ம்... பேசினார்...''

''என்ன இழுக்கிற? உங்களுக்கு இடையே சண்டை எதுவும் நடக்கலையே?''

''ம்ஹூம்...! அதெல்லாம் ஒன்றும் இல்லை...''

''அது போதும். திரும்ப அவனைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தால் நீயே அறிமுகம் செய்து கொண்டு பேசு. அப்புறமா கல்யாணம் பற்றிப் பேசிக்கலாம். ஏற்கனவே அறிமுகம் இருந்தால், உன்னை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லும்போது ஏற்றுக் கொள்வான்...''



''ஏன் ஆன்ட்டி, இப்ப அவருக்கு கல்யாணம் பண்ணிக் கொள்வதில் இஷ்டம் இல்லையா?''

''அப்படி இல்லைம்மா. இதை நீ எப்படி எடுத்துக் கொள்வாயோ தெரியலையே?''

''பரவாயில்லை சொல்லுங்கம்மா. இனிப்பான பொய்யை விட கசப்பான உண்மை நல்லது.''

''கொஞ்சம் முன்னாடி நீ சொன்ன ஆன்ட்டியை விட இந்த அம்மா நெருக்கமா இருக்கு. இப்படியே கூப்பிடு. மனசுக்கு நிறைவா இருக்கு...''

''சரிம்மா. ஆனால் நீங்க ஏதோ சொல்ல ஆரம்பிச்சு நிறுத்திட்டீங்க போல?...''

''அவனுக்கு காதலித்துக் கல்யாணம் பண்ண வேண்டும் என்ற ஆசை. அதனால் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறான். யாரையும் விரும்பினால் சொல்லு என்று சொல்லியாச்சு. அப்படி யாரும் இருப்பதாகவும் தெரியலை. ஒரு வருஷமா சொல்லிச் சொல்லி பார்த்துட்டு, இப்ப காத்திருந்தது போதும் என்று முடிவு பண்ணி வரும் தையில் கட்டாயம் கல்யாணம் முடிக்க வேண்டும் என்று வேலையில் இறங்கிட்டோம்...''

''ஓ!...''

''நீ ஒன்றும் மூட் அவுட் ஆகாதே, அவன் உன்னைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம் என்று சொன்ன பிறகுதான் கல்யாணம். பயப்படாதே! உன்னைப் பார்த்து விட்டால், அவனே அதை மனசார சொல்வான். உன்னைப் பார்க்க அழைத்து வரத்தான் இரண்டு வாரமா முயற்சி பண்ணி தள்ளிப் போனது. இனி பாரேன் எல்லாம் வேகமா முடிஞ்சுடும்...''

''அம்மா! நான் ஒன்று சொன்னால் தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?''

''தப்பா எடுத்துக்க என்னம்மா இருக்கு? ஒவ்வொருத் தருக்கும் ஒவ்வொரு சித்தாந்தம். உங்களைக் கையைக் காலை கட்டியா மண மேடையில உட்கார வைக்க முடியும்? மனம் திறந்து என்ன நினைக்கிறாய்? என்று சொல்லு, தப்பில்லை...''

''இப்ப நான் அவரைப் பார்த்தேன் இல்லையா...?''

''உனக்குப் பிடிக்கலையா? தயக்கம் இல்லாமல் சொல்லு...''

''இல்லைம்மா. பிடிச்சு இருக்கு. ஆனால் வேலையில் மூழ்கி சொந்த வாழ்க்கையை தள்ளி வைக்கும் குணம் பிடிக்கலை. சொந்த வாழ்க்கையில் இருக்கும் மனிதர்களும் முக்கியம் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்...''

''நிஜம். அதுக்கு என்ன பண்ணப் போகிறாய்?''

''நீங்க என்னைப் பற்றி அவரிடம் இதுவரை என்ன சொல்லி இருக்கீங்க?''

''நான் எல்லா விபரமும் சொல்லி விட்டேன். ஆனால் சென்னையில் உனக்கு ஒரு பெண் பார்த்து இருக்கு என்ற தகவல் கூட அவனைச் சேர்ந்து இருக்காது. ஏன்மா கேட்கிறாய்?''

''நீங்க நினைத்தது சரி. நீங்க எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமே?''

''என்ன உதவி சொல்லு...''

''நீங்க ஏற்கனவே சொன்ன விபரம் போதும். இனி எதுவும் அவரிடம் சொல்ல வேண்டாம்.''



''ஹய்யோ! ஏன்?''

''பதறாதீங்கம்மா! என்னைக் கல்யாணம் பண்ணிக்க, அவர் யாருடைய சிபாரிசின் பேரிலும் வரக்கூடாது என்பது என் எண்ணம். நீங்க சொல்வதற்காக இல்லாமல், அவருக்கு என்னைப் பிடித்து இருக்கு என்ற திருப்தி வந்த பிறகு நாம் திருமணப் பேச்சை தொடரலாம்மா. ப்ளீஸ், நான் சொல்வதைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்...''

''புரியுது, ராதிகா. எந்த வேலையில் ஈடுபட்டாலும் அதை முழு கவனத்தோடு செய்வான். அவன் ஈடுபாடு, திருமண வாழ்க்கையிலும் நிச்சயம் இருக்கும். எனக்கு என் பையனை தெரியும். அவனைப் பற்றி உனக்கு முழு திருப்தி வந்த பிறகு, நாம் பேச்சு வார்த்தையை தொடரலாம். அந்த நாள் சீக்கிரமே வர என்னுடைய மனமார்ந்த ஆசிகள். அம்மாவை விசாரித்ததா சொல். வச்சுடட்டுமா?'' என்று தொடர்பைத் துண்டித்தார் கலாவதி.

கமலக்கண்ணனுக்கு தன்னை தெரியவில்லை என்ற எரிச்சல் விளைவித்த கோபம், கலாவதி அம்மா பேசிய உடனே மறைந்துவிட, மீண்டும் உற்சாக பந்தாக துள்ள ஆரம்பித்தாள் ராதிகா.

ராகவா எம்போரியத்தில் இருந்து கட்டுமானப் பணிகளுக்காக டைல்ஸ் அனுப்புவதை உறுதி செய்து விட்டு வேலை நடக்கும் இடத்திற்குக் கிளம்பினாள். இடையில் நேர்ந்த சின்ன சாலை விபத்தாலும், கண்ணனைப் பார்த்ததாலும், அங்கே செல்வதை ஒத்தி வைத்துவிட்டு, வேறு வேலையாக இங்கே வந்தால் மீண்டும் இவனே!

''என்ன டீசீ சார் இது? நான் போகும் இடம் எல்லாம் தேடித் தேடி, அடுத்த பதினைந்து நிமிடங்களுக்குள்

பறந்தோடி வந்துடுறீங்க? வாட் இஸ் தி சீக்ரெட் ஆஃப் யுவர் எனர்ஜி?'' என்று கேலி பேசியவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்க கேட்கிற மாதிரி இருக்கே? நானாவது நீங்க போன இடத்துக்கு பதினைந்து நிமிடம் கழித்து வருகிறேன். நீங்க நான் போக நினைக்கும் இடத்திற்கு பதினைந்து நிமிடங்கள் முன்பே வந்து விடுகிறீர்கள். யாருக்கு எனர்ஜி அதிகம்?''

''சூப்பர் ஆர்க்கியூமென்ட். நீங்க என்ன விஷயமா இங்கே வந்தீங்க?''

''அது டிபார்ட்மென்ட் ரகசியம். நீங்க என்ன விஷயமா இங்கே வந்தீங்க?''

''இது எங்க தொழில் ரகசியம். நாங்க மட்டும் உங்களிடம் சொல்ல வேண்டுமா?'' என்று அவளும் முறுக்கிக் கொள்ள அவன் புன்னகைத்தான்.

''என்ன விஷயமா இங்கே வந்து இருக்கீங்க என்பதை நீங்க சொல்லா விட்டாலும் இன்னும் இரண்டே நிமிடத்தில் என்னால் சொல்ல முடியும்...''

''உங்க ஐடி கார்டை காட்டி இங்கே இருக்கும் பணியாளரிடம் விசாரித்தால், அதைக் கண்டு பிடிக்க முடியும் தான். ஆனால் பதவியைப் பயன்படுத்தாமல், நான் யார் என்பதையும், இங்கே என்ன விஷயமாக வந்து இருக்கிறேன் என்பதைக் கண்டு பிடிக்க முடியுமா?''

''ஏன் முடியாது? ஒரு மணி நேரம் போதும் உங்க ஜாதகத்தையே கொண்டு வந்து நிச்சயம் என்னால் தர முடியும்...''



''என்னைப் பின் தொடர்ந்து வந்தால், ஆள் போட்டு கண்காணித்தால், நான் யார், எங்கே வேலை செய்கிறேன். எங்கே தங்கி இருக்கிறேன் என்பதைக் கண்டு பிடிக்க முடியும். நான் அதைச் சொல்லவில்லை. உங்களுடைய முயற்சியில் மட்டும், கண்டு பிடிக்க முடியுமா? மற்றவர்கள் என்றால் ஒரு நாள் கொடுக்கலாம். ஐபீஎஸ் ஆபீசர் ஆச்சே? அதுல பாதி நேரம் போதாது?'' என்று அவள் சவால் விட அவன் கையைத் திருப்பி மணி பார்த்தான்.

''சவால்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். மணி இப்போ பனிரெண்டு. சரியா இன்று நைட் பனிரெண்டு மணிக்கு உன் அறையில் உன்னைச் சந்திக்கிறேன்! போதுமா?''

''உங்க பதவியையும் என்னுடைய போட்டோவையும் பயன்படுத்த மாட்டீர்கள் தானே?''

''உன் போட்டோ என்னிடம் இருக்கா?'' என்று அவன் கேட்டதும் தான் சுதாரித்தாள்.

''நீங்க எந்தக் காலத்தில் இருக்கீங்க டாக்டர்? காலையில் இருந்து நான்கு முறை சந்தித்து விட்டோம். உங்க மொபைலில் படம் எடுத்து இருக்கலாமே?'' என்று அவள் மடக்க, அவன் தன் மொபைலை அவளிடம் நீட்டினான்.

''உங்களின் நேர்மைக்கு நான் தலை வணங்குகிறேன்...'' என்று அதை வாங்காமலேயே குனிந்து மரியாதை செலுத்த, அவன் சிரித்தான்.

''உன் பேரைச் சொல்லலாமா?''

''போல் என்ன இருக்கு டாக்டர் கமலக்கண்ணன்? நீங்களே உங்களுக்குப் பிடிச்ச பேரா ஒண்ணு வச்சுக்கோங்களேன். நானே சொன்னாலும் அது உண்மையான

பேராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே? நான் வந்த வேலையைப் பார்க்கிறேன்'' என்று கை அசைத்துவிட்டுப் போனவளை சிரிப்புடன் பார்த்தான் கமலக்கண்ணன்.

''எனக்குப் பிடித்த பேராக நானே ஒன்றை தேர்வு செய்து விட்டேன். ரா...தா..'' என்று அவன் லேசாக குரல் உயர்த்தி சொல்ல அவள் வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். இவன் தன்னைக் கண்டுபிடித்து விட்டானா? ராதா என்பது ராதிகாவின் சுருக்கமா?

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? பேச்சுக்கு பேச்சு நீங்க என்னை பேர் சொல்லிக் கூப்பிடுறீங்க? நானும் கூப்பிடணும் இல்லையா? அதான் கண்ணனுக்குப் பொருத்தமா ராதா என்று வைத்து விட்டேன். பேர் நல்லா இருக்கா? பனிரெண்டு மணிக்கு சந்திக்கலாம்'' என்று சொல்லிவிட்டு தன் வேலையை கவனிக்க உள்ளே சென்றவனை திகைப்புடன் பார்த்தபடி சிலையாக நின்று இருந்தாள் ராதிகா.



## 5

இன்று இரவு பனிரெண்டு மணிக்கு உன்னை உன் அறையில் சந்திக்கிறேன் என்று சொல்லி விட்டு சில அடிகள் தூரம் நடந்த பின்பே அவன் சொல்லிய வார்த்தைகளின் அர்த்தம் உறைத்தது. அவளைப் பார்த்தால் திருமணம் ஆன மாதிரி தெரியவில்லை. அவளை தனி



அறையில் நள்ளிரவில் சந்திப்பேன் என்று சொன்னது சரி இல்லையோ?

பனிரெண்டு மணிக்கு போனில் பேசலாம். நாளைக் காலை அவள் வீட்டில் தேவைப்பட்டால் சந்திக்கலாம் என்று முடிவு பண்ணிய பிறகே மனம் இலகுவானது. அவளின் அலைபேசி எண் தெரியாது என்பது நினைவு வர புன்னகை மலர்ந்தது. பெயர் தெரியாது. ஊர் தெரியாது. என்ன வேலை செய்கிறாள் என்பது தெரியாது.

எதுவுமே தெரியாமல் அவளைப் பற்றிய தகவல்களை அடுத்த பனிரெண்டு மணி நேரத்திற்குள் கண்டுபிடிப்பதாக சவால் விட்டு இருக்கிறான். ம்ம்ம் பார்க்கலாம். சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே நடந்தவன் எதிரே வந்தவன் மேலே மோதி, ''ஹேய்... சாரி சாரி... நீங்க வந்ததை நான் கவனிக்கவில்லை'' என்று மன்னிப்பு கோரினான் கமலக்கண்ணன்.

''சார், நான் ராகேஷ். இந்த ஹோட்டலின் கான்பரன்ஸ் ஹால் நான் பார்க்கிறேன். நீங்க என்னைப் பார்க்கணும் என்று சொன்னதா மேனேஜர் சொன்னார். அதான் தேடி வந்தேன்'' என்று அவன் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''உங்களை இந்த நேரத்தில் சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் ராகேஷ். உங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகணுமே?''

''காவல் துறைக்கு உதவுவது எங்கள் கடமை சார். நான் என்ன செய்யணும் சொல்லங்க?''

''கடந்த பதினைந்து தினங்களில் இங்கே நடந்த கருத்தரங்குகள் பற்றிய விபரம் தேவை. அது எவ்வளவு

நேரம் நடந்தது, அதில் எத்தனை பேர் பங்கேற்றார்கள், உணவு வழங்கப்பட்டதா? இந்த மாதிரி விபரங்கள் வேண்டும். அது குறித்த பதிவேடுகள் பார்க்க வேண்டும். முடியுமா?''

''வாங்க சார் ரூமிற்குப் போய்விடலாம்'' என்று சென்றவனை தொடர்ந்த கமலகண்ணன் சுற்றுப் புறத்தை நோட்டம் விடத் தவறவில்லை.

''சார், காபி, டீ, ஜூஸ் இது மாதிரி ஏதாவது...'' என்று அறைக்குள் சென்று அமர்ந்த உடனே உபசாரத்தில் இறங்கினான் ராகேஷ்.

''என்ன ராகேஷ் ஜூஸைக் கொடுத்து முடிக்கப் பார்க்கிறீங்க? நான் உங்க ஹோட்டல் லஞ்ச் எப்படி இருக்கு என்று இன்று பார்க்கலாம் என்று நினைத்தேனே?'' என்று கண் சிமிட்ட, ராகேஷ் விழித்தான். இது வெறும் கேலிப் பேச்சா? தன்னை ஆழம் பார்க்கிறானா?

''ஒரு பஃபே லஞ்ச் நானூறு ரூபாய் இருக்குமா ராகேஷ்? என்னோட இன்னொரு கெஸ்ட்டும் வருவாங்க. இரண்டு பேருக்கும் நானே பணம் செலுத்தி விடுகிறேன். பயப்படாதீங்க. இதுக்குப் போய் இவ்வளவு யோசிக்கிறீங்க?''

''சார் உங்களுக்கு இல்லாத லஞ்சா? உங்க குடும்பம் மொத்தமும் வந்தாலும் நாங்களே ஸ்பான்சர் பண்றோம். சார் சாப்பிடுவதற்கும் குடிக்கப் போகும் ஜூசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை சார். உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்க...''

''எனக்கு ஐஸ் இல்லாமல் பைனாப்பிள் ஜூஸ் கொண்டு வரச் சொல்லுங்க. கடந்த பதினைந்து தினங்களில் உங்களின் ஹால் என்னைக்கு எல்லாம் புக் ஆகி இருக்கு. யார் புக் பண்ணி இருந்தாங்க? விபரம் சொல்றீங்களா?''

''இந்த ஹோட்டலில் மூன்று ஹால் இருக்கு சார். பெரிய ஹால் ஐநூறு பேர் அமரக் கூடியது. எப்போதாவது தான் புக் ஆகும். இந்த இரண்டு வாரத்தில் அந்த ஹால் புக் ஆகவில்லை. நூறு பேர் அமரக்கூடியது மூன்று நாட்களிலும், ஐம்பது பேர் அமரக்கூடியது எட்டு நாட்களிலும் புக் ஆகி இருக்கு. அதற்கான பதிவேடு இதோ...'' என்று ஒரு பெரிய மர பதிவேட்டினை நீட்டினான் ராகேஷ்.

''என்ன ராகேஷ்! இவ்வளவு மாடர்ன் ஹோட்டலில் பதிவேடுகள் வச்சு இருக்கீங்க? சிஸ்டம்ல என்ட்ரி போடுவதில்லையா?'' என்று கேட்டபடி கண்களை பதிவேட்டில் பதித்தான் கமலகண்ணன்.

''போன மாசம் ஹோட்டலில் சிஸ்டம் கிராஷ் ஆகிடுச்சு சார். ஒரு பத்து நாள் மட்டும் லெட்ஜரில் பராமரித்தோம்.''

''ராகேஷ், சின்ன ஹால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் புக் ஆகி இருக்கு. சில சமயங்களில் தொடர்ச்சியா கூட ஆகி இருக்கு. ஆனால் இங்கே மட்டும் ஆறு நாட்கள் இடைவெளி இருக்கு. ஏன் ராகேஷ்?'' என்று விசாரித்த கமல் ராகினி கொலை நடைபெற்ற காலத்தை அது உள்ளடக்கி இருந்ததால், அவன் பதிலை அறிய ஆர்வமாக இருந்தான்.

''நடுவில் சனி, ஞாயிறு, ஒரு பப்ளிக் ஹாலிடே வந்து இருக்கு. அதனால் இருக்கலாம்'' என்று ராகேஷ் சொன்ன விளக்கத்தைக் கமலக்கண்ணனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"சிஸ்டம் அப்போது வேலை செய்ததா ராகேஷ்?"

"பதினேழாம் தேதி கணினி வேலை செய்ய ஆரம்பித்து விட்டதே யாரும் ஹால் கேட்டு வந்து இருக்க மாட்டாங்க" என்று உதட்டைப் பிதுக்கினான்.

"இந்த மாதிரி கூட்டங்கள் நடக்கும்போது ஹோட்டலில் இருந்து ஏதாவது உணவு பானங்கள் சப்ளை செய்வது வழக்கம் தானே? அந்த மாதிரி பணிகள் யார் பார்ப்பாங்களோ அவங்களையும் நான் பார்க்க வேண்டும்..."

"ஹால் புக் பண்ணினால் மட்டும் போதாது சார். பானங்கள் தேவை என்றால் அவர்கள் தனியாகச் சொல்ல வேண்டும். எல்லாக் கூட்டங்களுக்கும் கொடுப்பதில்லை. நீங்கள் தேதி சொன்னால் அந்த கூட்டத்திற்குக் கொடுத்தோமா என்று பார்த்துச் சொல்கிறேன்" என்று அவன் விளக்கம் சொல்லும்போதே இன்டர்காம் ஒலி எழுப்பியது.

"நான் இப்போ யாரையும் பார்க்க முடியாது. போலீஸ் என்குயரியில் பிசி" என்று சன்னமான குரலில் கடிந்தான் ராகேஷ். எதிர்முனையில் யார் என்ன சொன்னார்களோ?

"ஓ! ராதிகா.. இதோ... ரெண்டே நிமிஷத்துல வந்து விடுகிறேன். வெயிட் பண்ணச் சொல்லுங்க..." என்றவன் குரலில் ஒரு பரபரப்பு உடனடியாக வந்து ஒட்டிக் கொண்டது.

"எக்ஸ்கியூஸ் மீ சார், ஒரு ஐந்து நிமிடம் நீங்கள் அனுமதி கொடுத்தால்..." என்று இழுக்கும் போதே கமலக்கண்ணனின் பார்வை அவனைக் கூறு போட்டது. ஏனோ, இவன் சொல்லும் ராதிகாவும், சற்று முன்பு தான் ராதா என்று பெயரிட்டவளும் ஒன்றோ என்ற சந்தேகம் தோன்றி இம்சை செய்தது.



"ப்ளீஸ்... சார்... என் கோள் பிரெண்ட் அவளே என்னைத் தேடி இங்கே வந்த பிறகு நான் போகா விட்டால்..." என்றவனின் குரலில் கெஞ்சல் இருக்க, 'அவள் இவனுக்கு கோள் பிரெண்டா' என்று உள்ளுக்குள் பொருமியதை வெளியே காட்டாமல், "போயிட்டு சீக்கிரம் வாங்க" என்று முணுமுணுத்தான்.

ராகேஷ் வெளியேறிய பின்பு கமலுக்கு கண் முன்னால் இருந்த பதிவேடுகளில் கவனம் பதியவில்லை. ராகேஷ் பார்க்கப் போன பெண், சற்று முன்பு தான் பார்த்தவளா என்பதை உறுதி செய்து கொள்ள வெளியே வந்தான் கமல்.

வரவேற்பு மேஜைக்கு எதிரே இருந்த ஒற்றை சோபாவில் அவள் அமர்ந்து இருக்க அருகே இருந்த சோபாவின் நுனியில் அமர்ந்து, எந்த வினாடியிலும் அவள் மடியில் சரிந்து விழத் தயாராக இருப்பவனைப் போல தோன்றிய ராகேஷைப் பார்த்த வினாடியில் கமலக்கண்ணனுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை பற்றி எரிந்தது.

பொங்கிய எரிச்சலோடு அவர்களை நோக்கிச் சென்ற போது, "நீ என்னிடம் கேட்டு நான் இல்லை என்று சொன்னேனா ராது? உன்னை யார் ரிசப்ஷனில் கெஞ்சச் சொன்னது? உனக்கு ஏதாவது வேண்டும் என்றால் என்னிடம் கேட்க வேண்டியது தானே?" என்று வழிவது காதில் விழுந்தது.

"அந்த ஹால் எனக்கு இல்லை. அது பிரெண்டோட பிறந்த நாள் விழா. அது முடிஞ்சு பத்து நாள் ஆச்சு. இப்ப

அதைப் பற்றி என்ன பேச்சு? அடுத்த புதன் கிழமை பெரிய ஹால் எனக்கு வேண்டும். இருநூறு பேர் வரலாம். ப்ரீயா இருக்கா என்று எனக்குத் தெரிய வேண்டும்...''

''என்ன விசேஷம் ராது? என்னிடம் சொல்லக் கூடாதா?''

''கால் மீ ராதிகா. எல்லா பெர்சனல் விஷயங்களையும் உங்களிடம் சொல்ல முடியுமா?''

''பெர்சனலா?... யு மீன்...'' என்று தடுமாறியவன் கண்கள் இருண்டது.

''கடவுளே! காலாண்டு கூட்டம் கம்பெனி சார்பில் நடத்தணும். அதுக்கு நான் தான் பொறுப்பு. நீங்களா கண்டதையும் கற்பனை பண்ணிக்காதீங்க.''

''ஒரு நிமிஷத்துல நான் என்னென்னவோ கற்பனை பண்ணி பயந்து விட்டேன் ராதிகா...''

''நீங்க எதுக்குப் பயப்படணும்? நீங்க என்ன சொல் றீங்க எனக்குப் புரியலை...''

''இது கூடப் புரியாத மாதிரி நடிக்கிறாயா? பெர்சனல் என்று நீ சொன்னதும், உனக்கு நிச்சயதார்த்த விழாவோ என்று எண்ணி ஆடிப் போய் விட்டேன்'' என்று பாவனையாகச் சொல்லி சிலிர்த்தவனை ஓங்கி அறைய கைகள் துடித்தது.

பொங்கிய கோபத்தை அடக்கியபடி, வெறுப்புடன் பார்வையை வேறு திசைக்கு திருப்பிய போது அதே அளவு எரிச்சலோடு, வெகு அருகில் நின்று, முறைப் புடன் தங்களைப் பார்த்துக் கொண்டு இருந்த கமலக் கண்ணன் கண்ணில் பட, அவள் கண்கள் கனிந்து முகம் மலர்ந்தது.



''எனக்கு எங்கேஜ்மென்ட் நடக்கவில்லை என்று யார் சொன்னது? அது முடிந்த மாதிரி தான்'' என்று கண்களை கமலக்கண்ணனிடம் பதித்து, முகம் சிவக்க பெருமையாக அறிவித்தாள் ராதிகா.

''ம்கூம்... ரெண்டு வாரம் முன்பு யாரோ போலீஸ் குடும்பத்தில் இருந்து வந்து கேட்டாங்க என்று சொன் னாயே? அது வேண்டாம் ராதிகா. எல்லாத்தையும் இலகு வாக எடுத்துக் கொள்ளும் உன் காரெக்டருக்கு போலீஸ் மாப்பிள்ளை ஒத்து வராது. என்னை மாதிரி சர்வீஸ் செக்டாரில் இருக்கும்...''

''சர்வீஸ் செக்டார் தானே? டாக்டர் என்றால் சரியா இருக்குமா ராகேஷ்? இப்ப பார்த்து இருக்கும் மாப் பிள்ளை டாக்டர் தான்...'' என்று ராகேஷின் புறம் சரிந்து சிரிப்போடு ராதிகா சொல்ல, கமலக்கண்ணனின் முகத் தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''அலுவலக நேரத்தில் உங்களைப் பார்க்க வரும் விருந்தினர்களுடன் உட்கார்ந்து வெட்டிக் கதை பேசத் தான் உங்கள் அலுவலகத்தில் உங்களுக்கு சம்பளம் கொடுக்கிறாங்களா ராகேஷ்?'' என்று எரிச்சலுடன் விசாரித்தான் கமலக்கண்ணன்.

''சாரி சார்... நீங்க இங்கேயே வந்துட்டீங்களா? இதோ நான்... இவங்க...'' என்று எதையும் முழுசாக முடிக்க முடியாமல் ராகேஷ் திணற, ராதிகா கை கொடுத்தாள்.

''நான் அவரின் விருந்தினரும் இல்லை. அவர் என் னிடம் இங்கே வெட்டிக்கதை பேசவும் இல்லை. அவரைச் சந்தித்து, கூட்ட அரங்கினை முன்பதிவு செய்ய வந்தேன். இது எங்க ரெண்டு பேருக்குமே அலுவலக வேலை தான். விளக்கம் போதுமா டீ.சீ.பீ. சார்?''

''அட! தென்னை மரத்துல தேள் கொட்டினால் பனை மரத்துல நெறி கட்டுதே? ராகேஷ் சார் ரொம்ப வேண்டியவங்களா மிஸ் ராதா? அவரைக் கேட்டால் நீங்க பதில் சொல்றீங்க?'' என்று அந்த ராதாவை அழுத்திக் கேட்க அவள் புன்னகைத்தாள்.

''சார், என் பெயர் ராதா இல்லை, ராதிகா, நீங்க சொல்லும் போது அவர் வெட்டிக்கதைப் பேசுவதாக குற்றம் சொன்னீங்க. அதை ஒரு ஆளால் செய்ய முடியாதே? இதில் நானும் சம்பந்தப்பட்டு இருப்பதால் தான் பதில் சொன்னேன். நான் என் வேலையை மட்டும் தான் பார்க்கிறேன். இன்னும் சில பேர், அலுவலக வேலை செய்யும்போதே, ஒரு கல்லில் ரெண்டு மாங்காய் அடிக்கிறேன் என்று...''

''நானும் உங்களைப் போலவே என் வேலையை மட்டும் பார்க்கணும் என்று தான் நினைக்கிறேன். ஆனால் அதுக்கு ராகேஷ் வந்தாக வேண்டுமே? ஒரே கல்லில் ரெண்டு மாங்காய் அடிப்பது அவரவர் திறமையைப் பொறுத்தது. உங்க சரியான பேர், நான் எந்த முயற்சியும் செய்யாமலே தெரியவில்லையா? கடவுள் அனுகிரகம் இருந்தால் தகவல்கள் தானாக வந்து மடியில் விழாதா?'' என்றவன் குரலில் கேலி இருந்தது.

தன்னை கேலிக்காகக் கூட ராகேஷுடன் இணைத்துப் பேசுவதை அவள் விரும்பவில்லை என்ற அந்த பாவனை அவனின் கோபத்தைப் போக்கி இயல்புக்குக் கொண்டு வந்து இருந்தது.

''தாராளமா உங்கள் ராகேஷை நீங்கள் அழைத்துச் செல்லலாம். நான் ஒன்றும் அவரை பிடித்து வைத்து இருக்கவில்லை...''



''என் ராகேஷா? உங்கள் ராகேஷ் என்று அல்லவா நினைத்தேன்?'' என்று கேலியாக ஆரம்பித்தவன் அவள் கண்களில் தெரிந்த கோப மின்னலைப் பார்த்துப் பேச்சை மாற்றினான்.

''இந்த ஹோட்டலின் நிர்வாக அலுவலர் என் ராகேஷாகவே இருந்து விட்டுப் போகட்டும். நீங்க வந்த வேலை முடிந்ததா?''

''ஹால் காலியா இருக்கா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன். புக்கிங் அப்புறமா என் பிரெண்ட் மூலமா போனில் பண்ணிக் கொள்வேன்...''

''போனில் அந்த உதவி செய்யும் உங்க பிரெண்ட். இந்த உதவியைச் செய்ய மாட்டாரா?''

''ஹலோ சார், இதை நீங்க ஏன் விசாரிக்கிறீங்க?''

''சும்மா பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாமே என்று தான்...'' என்று கேலியாக சிரித்தாலும் பதிலை அறியும் தேடல் இருந்தது.

''அதை ஏன் கேட்கறீங்க? கடந்த பதினேழாம் தேதி இந்த ஹோட்டலின் சின்ன ஹால் என் பிரெண்ட் பிறந்த நாள் விழாவிற்கு புக் பண்ண விசாரித்தபோது காலியா இருக்கு என்று போனில் சொல்லி விட்டு, நேரில் வந்தப்ப தரவில்லை. பிரெண்ட்ஸ் மத்தியில் எனக்கு சங்கடமா போச்சு. ஒரு தப்பு அடுத்த முறை நடக்க விடலாமோ?''

''அதுவும் இந்த மாதிரி ஒரு தப்பு நடக்க ராதிகா விடலாமா?'' என்று கேலியாகச் சொன்னாலும், அவள் பேசியதில் இருந்த, 'ராகினியின் கொலை நடந்ததற்கு

மறுநாளான பதினேழாம் தேதி சின்ன ஹால் காலியாக இருந்தும் அது வழங்கப்படவில்லை' என்ற முக்கியமான குறிப்பினை கவனிக்கத் தவறவில்லை.

கமலக்கண்ணனும் ராதிகாவும் வெகு நாட்கள் பழகியதைப் போல ஒருவரை ஒருவர் மடக்கி கேலியும் கிண்டலுமாகப் பேசிக் கொள்வதோடு தன் தலையையும் உருட்டுவதைப் பார்த்த ராகேஷிற்கு தலை சுற்றியது.

''ராதிகா, உங்களுக்கு சாரை முன்பே தெரியுமா?'' என்று கேட்டவனின் குரலில் மரியாதை பன்மை தானாக வந்து ஒட்டிக் கொண்டது.

''எனக்கு சாரைத் தெரியும் ராகேஷ். ஆனால் சாருக்கு என்னைத் தெரியுமா என்று அவரை தான் கேட்க வேண்டும்..'' என்று சிரிக்க கமலக்கண்ணனின் முகத்தில் முறுவல் விரிந்தது.

''என்ன ராகேஷ் இப்படிக் கேட்டுட்டீங்க? என் சார்பில் மதியம் லஞ்ச் சாப்பிட விருந்தாளி ஒருத்தர் வருவாங்க என்று சொன்னேனே? அது மேடம் தான். அவங்களைத் தெரியாமல் இருக்க முடியுமா?'' என்று இயல்பாகச் சொல்ல ராதிகா திகைத்தாள்.

இவனுடன் மதிய உணவு சாப்பிடுவதாகத்தான் எப்போது சொன்னோம் என்று திகைத்தாலும், அவளுக்கும் உற்சாகமாகவே இருந்தது.

''சார், இவ்வளவு பேசுறீங்க. ஆனால் அவங்க பேர் உங்களுக்கு...'' தெரியலை என்று சுட்டிக் காட்ட விரும்பாமல் கேள்வியாக பாதியில் நிறுத்தினான் ராகேஷ்.



''அது சும்மா... எங்களுக்குள் ஒரு சின்னச் செல்லச் சண்டை ராகேஷ். கண்டுக்காதீங்க?'' என்று கண் சிமிட்டிக் குறும்பாக கமலக்கண்ணன் சொல்ல ராதிகா புன்னகைத்தாள்.

இதே பாணியில், சற்று முன்பு உரிமை எடுத்துப் பேசிய ராகேஷின் மீது ஓங்கி அறைய வேண்டும் போல பொங்கிய கோபம் இப்போது இப்போது எட்டியும் பார்க்கவில்லை.



# 6

'எங்களுக்குள் எப்போதும் நடக்கும் செல்லச் சண்டை' என்று உரிமையாகச் சொன்ன கமலக்கண்ணனையும் அந்த உரிமை மீறலை ரசித்த ராதிகாவையும் ஆற்றாமையுடன் பார்த்த ராகேஷ் தொண்டையைக் கனைத்து, தான் இருப்பதை நினைவு படுத்தினான்.

''சரி ராகேஷ், நீங்க அவர் கூட போய் வேலையைப் பாருங்க, நான் அப்புறமா அட்வான்ஸ் கட்டி ஹால் புக் பண்ணிக்கறேன். கிளம்புகிறேன்'' என்று ராகேஷிடம் வார்த்தைகளாலும், கமலிடம் கண்களாலும் விடைபெற்றுக் கிளம்ப முற்பட்டாள் ராதிகா.

''ஒரு நிமிஷம் ராதிகா! ஏற்கனவே உங்களுக்கு ஒரு மோசமான அனுபவம் இருக்கு. மீண்டும் அது மாதிரி நடந்து விடக் கூடாது என்ற அக்கறையில் சொல்கிறேன். அதுவும் இது அலுவலகக் கூட்டம் வேறு. ஹால் புக்கிங்

இப்போதே உடனே பண்ணி விடலாமே? அப்புறம் வேறே யாராவது வந்து கேட்டால் கொடுத்து விடப் போறாங்க. அட்வான்ஸ் இல்லாமல் ப்ளாக் பண்ண முடியாது...''

''என்னிடம் அவ்வளவு பணம் இல்லை ராகேஷ்...''

''இருக்கும் பணத்தை கட்டி...'' என்ற ராகேஷை கை காட்டி நிறுத்தினான் கமல்.

''அட்வான்ஸ் நான் கொடுக்கிறேன் ராகேஷ். ஹால் ப்ளாக் பண்ணிடுங்க. அப்பறம் நான் வாங்கிக் கொள் கிறேன்...'' என்று ஆரம்பித்த கமலை, ''நீங்க ஏன் என் அலுவலக வேலைக்குப் பணம் கொடுக்க வேண்டும்? நானே பார்த்துக் கொள்வேன்...'' என்று இடையிட்டாள் ராதிகா.

''இது இலவச சேவை இல்லை மிஸ் ராதிகா. கவலையே படாதீங்க. இந்தப் பணத்தை நான் உங்களிடம் இருந்து வாங்கிக் கொள்வேன். நீங்க ஆசைப் பட்டால் வட்டி சேர்த்து கூட கொடுக்கலாம். வாங்கிக் கொள்ள எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை...''

''அப்படி அவசரமா நீங்க பணம் கட்டி, அதுக்கு நான் உங்களுக்கு வட்டி கட்டுவதற்கு பதில், நானே என் கிரெடிட் கார்டில் கட்டி விட்டு, அலுவலகத்தில் பணம் பெற்றுக் கொள்வேன். எப்படியும் உங்கள் உதவி எனக்குத் தேவை இல்லை. போதுமா?''

''என் உதவி உங்களுக்கு இல்லை என்றாலும் உங்களின் உதவி எனக்குத் தேவை. மணி ஒன்றாகப் போகிறதே! இங்கே லஞ்ச் சொல்லி இருக்கு. பதினைந்து



நிமிடத்தில் நான் வந்து விடுகிறேன். எனக்கு மதிய உணவிற்கு கம்பெனி கொடுக்க முடியுமா?''

''உங்களுக்கு இங்கே செலவு பண்ண நேரம் இருக்கு. என் வேலை முடிந்து விட்டதே? நான் கிளம்ப வேண்டும். உங்களுக்கு கம்பெனி கொடுத்து உதவி செய்ய முடியாத நிலையில் இருப்பதற்கு உண்மையிலேயே மிகவும் வருந்துகிறேன் டாக்டர். நான் கிளம்புகிறேன். உங்களுக்கு கம்பெனி கொடுக்கும் சந்தர்ப்பம் இன்னொரு நாள் கிடைக்க அந்த ஆண்டவன் அருள் புரியட்டும்'' என்று அவள் சொன்ன பாவனையில் சிரித்தான் கமல்.

''ஆஹா! என் மேல் எவ்வளவு கருணை! போகிற போக்கில் வேலையை மறந்து விடாதீங்க. ஹால் புக் பண்ணிவிட்டு போங்க. பை பை'' என்று கை அசைத்து அனுப்பி விட்டு ராகேஷின் புறம் திரும்பினான்.

''ராகேஷ், இந்த மாசத்தில் சின்ன ஹால் புக் ஆன தினங்களில் அந்த ஹாலுக்கு உணவு பொருட்கள் சப்ளை நடந்ததா? அதை கண்காணித்தவர்களைப் பார்க்க வேண்டும். தனியாக நிற்க வைத்து கேள்வி கேட்பதை விட, சாப்பிடும் நேரத்தில் பேச்சு வாக்கில் விசாரிப்பது விசாரணைக்கு உதவியா இருக்கும்'' என்று உடன் நடந்தான் கமலக்கண்ணன்.

அடுத்த அரை மணி நேரம், ராகேஷின் அறையில் கணினியில் பதிவான விபரங்களை ஒருமுறைக்கு இருமுறை சரி பார்த்து, சின்ன ஹால் குறிப்பிட்ட 'ராகினி', கொலை செய்யப்பட்ட தினத்திற்கு முன்பு ஒரு நாள், பின்னால் ஐந்து நாட்கள் வேறு யாருக்கும் கொடுக்கப் படவில்லை என்பதை உறுதி செய்து கொண்டான். இதே

தகவலை உணவு பொருட்கள் சப்ளை செய்யும் கண் காணிப்பாளரிடம் இருந்து பெற்றபோது அவனின் அலைபேசி அழைத்தது.

''சொல்லுங்க ராஜ், ஹாஸ்டல் விசாரணை முடிந்து விட்டதா? எங்கே இருக்கீங்க?''

''அஜந்தா டவர்ஸ் வாசலில் இருக்கிறேன் சார். உங்கள் வார்த்தைக்காக காத்திருக்கிறேன்.''

''நானும் உள்ளே தான் இருக்கேன். நேரில் பேசலாம். சாப்பிட்டாச்சா?'' என்று கேட்டபடி ராகேஷின் அறையில் இருந்து வந்தவன், ரிசப்ஷனில் பதிவேட்டில் கையெழுத் திட்டு கொண்டு இருந்த ராதிகாவைப் பார்த்து விழி விரித்தான். இவள் கிளம்பி இருபது நிமிடமாவது ஆகி இருக்க வேண்டுமே?

''இன்னும் இல்லை சார், உங்களிடம் விபரம் சொல்லி விட்டு...'' என்ற ராஜ்மோகனின் குரல் அவனை வேலைக்கு இழுத்து வந்தது.

''ரிசப்ஷனுக்கு வாங்க ராஜ்'' என்று சொல்லிவிட்டு அவளிடம் திரும்பினான்.

''ஹலோ மேடம், உங்களின் இளகிய மனசு எனக்கு முன்பே தெரியாமல் போய் விட்டதே! கடைசியில் கொஞ்ச நேரம் ஆனாலும் பரவாயில்லை, என்று எனக்கு உதவி செய்யலாம் என்று முடிவு பண்ணிட்டீங்க தானே?'' என்று ஒலித்த உற்சாகக் குரலில் திடுக்கிட்டு திரும்பிய ராதிகா அவனைக் கண்டதும் முறைத்தாள்.

''நீங்களா? எல்லாம் உங்களால் வந்தது...''

''நான் உங்களுக்கு பை சொல்லி வழி அனுப்பி விட்டு தானே கிளம்பினேன். நான் உங்களை இங்கே கட்டிப் போட்டு வைக்கவில்லையே?''



''என்ன கிண்டலா? நீங்கதானே ஹால் புக் பண்ணி விட்டு போ என்று சொன்னீங்க?''

''ஆமா! ஆனால் அது உங்க வேலை தானே? என் வேலையை நீங்க செய்தது மாதிரி என்ன குறை சொல் றீங்க? அது சரி, ஹால் புக் பண்ண இவ்வளவு நேரமா?''

''கேட்டீங்களே ஒரு கேள்வி? ஒரு மாசமா இங்கே என்னவோ சரியாவே இல்லை. சிஸ்டம் கிராஷ். பவர் கட். இன்னிக்கு கிரெடிட் கார்ட் மெஷின் ரிப்பேர். இப்பதான் சரி பண்ணினாங்க. அதான் லேட் ஆகிடுச்சு. முதலில் எம் டீயை பார்த்துச் சொல்லணும்...'' என்று சலிப்பாகச் சொன்னவள், ராஜ் அருகே வர பேச்சை பாதியில் நிறுத்தினாள்.

''நடப்பது எல்லாம் நன்மைக்கு என்று நினைத்துக் கொள்ளுங்க. மணி ஒண்ணு ஆச்சு. சாப்பிட்டுட்டுப் போக லாம். ராஜிடம் பேசி விட்டு வந்து விடுகிறேன். மறுக்க வேண்டாம். ப்ளீஸ்...'' என்று முடித்து விட்டு பதிலுக்குக் காத்திராமல் பூக்கடைக்கு நகர்ந்தான்.

''ராஜ், என்ன தகவல் சொல்லுங்க.''

''ராகினி அறையில் தங்கி இருந்த பெண்ணுக்கு ராகினி ராகுலை லவ் பண்ணும் விஷயம் தெரிந்து இருக்கு. அதுவும் ராகினியின் மரணம் நிகழ்வதற்கு முதல் நாள் ராகினி அவளின் அம்மாவிற்கு ராகுலின் போட்டோவை இணைத்து தன் காதல் குறித்து கடிதம் எழுதுவதைப் பார்த்து இருக்கிறாள். அதன் பிறகு துருவி விசாரித்த பிறகு சொல்லி இருக்கிறாள். ராகுல் வேலை செய்து கொண்டே பார்ட் டைம் பீ ஈ படிப்பது. அவனின் அம்மா தனியாக இருப்பது, தன் படிப்பு முடிந்த பிறகு தன் பெற்றோரிடம் சம்மதம் பேச ஒத்துக் கொண்டது...''

''என்ன சொன்னாய்? திருப்பிச் சொல்லு...'' என்றவன் குரலில் பரபரப்பு கூடியது மட்டும் இல்லாமல் மரியாதை பன்மை காணாமல் போய் இருந்தது.

''இது புது தகவல் தான் சார். படிப்பு முடிந்த பிறகு பெண் கேட்டு வருவதாகச் சொன்னதாகத்தான் சொன்னாள். ஆனால் மரணம் நடந்த போது ராகுலின் அம்மா உள்ளூரில் இல்லை என்பதும், அவர் பெண் வீட்டுக்குப் போய் இருந்ததாக ரியாஸ் விசாரணை சொல்கிறது...''

''ஆற்காட்டில் ரியாசுக்கு நிறைய வேலை என்று சொல்லுங்க'' என்ற கமலக்கண்ணனின் குரலில் யோசனை இருந்தது.

''அங்கே ராகுல் அம்மா போனது உண்மைதான். ஆனால் எப்படி யார் சொல்லிப் போனாங்க என்று நாம் விசாரிக்க வேண்டும். இங்கே தான் நிறைய வேலை இருக்கு...''

''ஓ.கே. ரியாஸ் ஆற்காட்டில் இருந்து பேசட்டும். அதை அப்புறம் முடிவு பண்ணிக்கலாம். அடுத்ததா அந்த ஜே.பீ. ஜுவல்லரி பார்த்துடீங்களா ராஜ்?'' என்று தாழ்ந்த குரலில் விசாரித்தான்.

''சார், நீங்க போறதா...''

''சொன்னேன். எனக்கு ஒரு அரை மணி நேரம் பொர்சனல் வேலை ஒன்று இருக்கு'' என்றவன் பார்வை அருகே வந்து நின்ற ராதிகாவின் மேல் படிந்த விதத்தை அரை கணத்தில் படித்த ராஜ், ''எஸ் சார்'' என்று விடை பெற்றான்.

''நீங்க முன்னால் போங்க. ஒரு மணி நேரத்தில், அங்கே வந்து விடுவேன்'' என்று உறுதி அளித்த கமலக்கண்ணன் கண்ணில் பாராட்டு இருந்தது. ராஜை அனுப்பி விட்டு ராதிகாவிடம் திரும்பியபோது அவள் கண்ணில் கேலிச் சிரிப்பு இருந்தது.



''இந்த மாதிரி நாலு பேரை நாலு இடத்துக்கு அனுப்பி தகவல் விசாரிக்க வசதி இருக்கும்போது புலன் விசாரணை முடிப்பதில் என்ன சிரமம் இருக்கப் போகுது? ஓடி ஓடி விசாரிப்பது எல்லாம் கீழ் மட்ட அதிகாரிகள். அவார்ட் வாங்குவது, போட்டோவுக்கு போஸ் கொடுப்பது மட்டும் நீங்களா?'' என்ற அவளின் கேள்வியில் ஒரு கணம் திகைத்து, ''பசிக்குது, சாப்பிடப் போகலாமா?'' என்று கேலியாகப் பேச்சை மாற்றினான்.

''தினமும் இது மாதிரி ஸ்டார் ஹோட்டலில் தான் மதிய உணவா? கொடுத்து வச்சவர்...''

''கொடுத்து வச்சவர் என்பது ஓ.கே. ஆனால் சாப்பாடு எவ்வளவு பிரமாதமாக இருந்தாலும், சாப்பிடும் போது உடன் மனதிற்கு பிடித்தவர் இருக்க வேண்டும். அல்லது எளிமையான உணவாக இருந்தாலும் மிகுந்த அன்போடு அம்மா ஊட்டி விடுற கொடுப்பினை இருக்க வேண்டும். எனக்கு இரண்டுமே இருக்கு...'' என்றவன் அருகில் வந்து நின்ற பேரரைக் கண்டதும் திரும்பினான்.

''ஹலோ விஸ்வநாதனா உங்க பேர்? என் அப்பா பேர் கூட விஸ்வநாதன்தான்...'' என்று கை குலுக்க அந்த பேரர் விழுந்தே விட்டான்.

''சார், நீங்க இரண்டு பேரும் இதே மாதிரி ஜோடியா தினம் தினம் எங்க ஹோட்டலுக்கு சாப்பிட வரவேண்டும் சார்...''

''நல்ல பிசினெஸ் டெக்னிக் மேன். எங்களை வாழ்த்திய மாதிரியும் ஆச்சு. உங்க ஹோட்டலுக்கு வாடிக்கையாளர் பிடிச்ச மாதிரியும் ஆச்சு. உங்க எம்.டி. கிட்டே பேசி பதவி உயர்வு கொடுக்கச் சொல்கிறேன்'' என்று அருகே இருந்த மேஜையில் அமர்ந்தான்.

சூப்பைக் கொண்டு வந்து வைத்த பின் ஆர்டருக்காக காத்திருந்தவனிடம், ''உங்க வேலை ரொம்ப உன்னதமான வேலை. மக்களை வயிறு நிறைந்த பின்பு திருப்தியா மனசு நிறைந்து வாழ்த்த வைக்கும் வேலை. எனக்கு கூட இந்த மாதிரி ஹோட்டல் வேலைக்கு வரலாமா என்று ஆசை...'' என்ற கமலக்கண்ணனைப் பார்த்து புன்னகைத்தான்.

''சார் இக்கரைக்கு அக்கரை பச்சை சார். எங்க கஷ்டம் எங்களுக்கு தான் தெரியும்...''

''ஏன் விஸ்வநாதன் இப்படி சலிச்சுக்கறீங்க?''

''எல்லோரும் உங்களை மாதிரி பரிமாறுபவர்களை நல்ல விதமா நடத்தி சமமா பேசுபவர்களா இருக்க மாட்டாங்க சார். ஒரு ஜூஸ் டம்ளரை தட்டி விட்டுட்டு, அந்த பழியை பேரர் மேலே போட்டு, ப்ச்! அந்த கதை எல்லாம் உங்களுக்கு எதுக்கு? சாப்பாடு பஃபேல எடுத்துக்கறீங்களா? இங்கே கொண்டு வந்து தரட்டுமா சார்?''

''நாங்களே வந்து எடுத்துக்கறோம். நீங்க வந்து எது நல்லா இருக்கும் என்று சொல்லுங்க'' என்று எழுந்து உடன் நடந்தவனை பின் தொடர்ந்தவள்,

''சாரி டாக்டர், நீங்க கேஸ் விஷயமா ஏதோ விசாரிக்கிறீங்க போல. நான் கிளம்பட்டுமா? என்னால் உங்களுக்கு ஏன் வீண் தொந்தரவு...''



''ஏன் அப்படிக் கேட்கிறாய்? எதுக்கு முதலில் சாரி?''

''உங்களை தினமும் ஹோட்டலில் ஓசி சாப்பாடு சாப்பிடுற மாதிரி கமண்ட் சொன்னதுக்கு இங்கே சாப்பாட்டைக் காட்டிலும் வேறே ஏதோ ஒரு முக்கியமான விசாரணை போற மாதிரி இருக்கு. நான் இருப்பது உங்களுக்கு...''

''நீ இருப்பது எனக்கு சாதகம். தனியாக வருபவர்களை விட, குடும்பமாக வருபவர்களிடம் பணியாளர்கள் இயல்பாகப் பேசுவார்கள். நீ எனக்கு விசாரணையில் உதவுகிறாய். ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் தனியாக என்னிடம் சொல்லு. நீ இங்கே இருப்பது ரொம்ப அவசியம்'' என்று சொல்லிவிட்டு பேரரிடம் அவன் விசாரணையை தொடர, அவள் விழி விரித்தாள்.

''விஸ்வா, உங்களுக்கு எப்போ ஆஃப் கிடைக்கும். இந்த விடுமுறை நாளில் வேலை செய்தால் ஓவர் டைம் அலவன்ஸ் இருக்கும் இல்லையா?''

''இதை எல்லாம் ஏன் சார் நீங்க கேட்கறீங்க?''

''நாங்க ஒரு ஹோட்டல் ஆரம்பிக்கலாம் என்று ப்ளான் பண்றோம். அதுக்கான விசாரணை இது. சொல்லுங்க...'' என்று ராதிகா சொல்ல கமலக்கண்ணன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''இந்த உலகம் இருக்கும் வரைக்கும் நிரந்தரமா இருக்கக் கூடிய ஒரே தொழில் இதுதான். நல்ல முடிவு. இதுல நஷ்டம் வர வாய்ப்பு இல்லை. ஆனால் வேலை பார்க்கும் பணியாட்கள் மேலே அதை சுமத்தி விடாமல் தொழில் பண்ணினால் நல்லா இருக்கும்...''

''விஸ்வா, சும்மா சொல்லணுமே என்று எதையாவது சொல்லக்கூடாது. தொழிலில் வரும் லாப நஷ்டம் முதலாளிக்கு தானே? வேலை பார்ப்பவர்களுக்கு எப்படி வரும்?''

''வரும். முதலாளி மனசுல முடிவு பண்ணி விட்டால் நிச்சயம் வரும். எனக்கு சாட்சி இங்கேயே இருக்கு. இரண்டாயிரம் ரூபாய் ஓவர் டைம் பணத்திற்கு ஆசைப் பட்டு, வேலை செய்யப் போய், ஐம்பதாயிரம் ரூபாய் கார்ப்பெட் வீணானதாக பழி போட்டு வேலையை விட்டு தூக்கியதோடு மட்டும் இல்லாமல் அந்தப் பணத் தையும் அவரோட கிராஜுட்டியில் இருந்து பிடித்த கதை இந்த ஹோட்டலில் மட்டும் தான் நடக்கும்...''

''என்ன சொல்றீங்க விஸ்வநாதன்? ஒரு தப்புக்கு எப்படி இரண்டு தண்டனை கொடுக்க முடியும்? பணம் பிடிப்பதே அதிகப்படி. ஆனால் வேலையை விட்டு தூக்குவது...'' என்று கோபத்துடன் இடையிட்ட ராதி காவை கண்ணால் அடக்கினான் கமலக்கண்ணன்.

''அவர் மேலே வேறென்ன தப்பு இருந்ததோ? நமக்கு எப்படித் தெரியும்?'' என்று சாதாரணமாகச் சொன்னது அவன் பல நாள் குமுறலை வெடிக்க வைத்தது.

''என்ன சார் நீங்களும் போகிற போக்கில் அவர் மேலே வேறென்ன தப்போ என்று சொல்லிட்டீங்க? நீங்க இப்படிச் சொல்வீங்க என்று நான் எதிர்பார்க்கவே இல்லை சார். தயவு செஞ்சு நீங்களும் இந்த மாதிரி வேலை பார்க்கிறவங்களைப் போட்டு படுத்தாதீங்க. கணக்கில் வராமல் ரூமை கூடுதல் நாட்களுக்கு விருந் தினர்களுக்கு ஒதுக்கீடு செய்வது, ஆர்டர் செய்த உணவு வகைகளை விடக் கூடுதலாக சப்ளை செய்ய வைப்பது, ஆட்கள் இருப்பதை கணக்கில் காட்டாமலே மறைப்பது, இப்படிச் செய்கிற தப்பை எல்லாம் பெரிய பெரிய பதவியில் இருக்கவங்க செய்து விட்டு கடைசியில் அப் பாவி பேர்களை பைசா பெறாத ஜூஸ் ஜார் உடைஞ் சதுக்காக வேலையை விட்டுத் தூக்குவாங்களா?'' என்று படபடவென்று பொரிந்தவனை கை பற்றி ஓரமாக அழைத்துச் சென்றான் கமலக்கண்ணன்.

''ஷ்! மெல்ல பேசுங்க விஸ்வநாதன், உங்க வேலைக்கு ஏதாவது பிரச்னை வரப் போகுது. இப்படி எல்லாம் கூட நடக்குமா என்ன?''

''நடக்குமா என்று சந்தேகமே உங்களுக்கு வேண டாம். நடக்கும். நடந்தது. இங்கேயே இதே ஹோட்ட லில், மாரியப்பன் என்ற சர்வருக்கு போன பதினேழாம் தேதி நடந்தது'' என்று அழுத்தம் திருத்தமாக அவன் சொல்ல இருவருமே திகைத்தனர்.

அவன் சொன்ன நாள் அந்த ராகினியின் உடல் கண்டு பிடிக்கப்பட்டதற்கு முந்தைய நாள் என்பதால் கமலக் கண்ணனும், ராதிகா தன்னுடைய தோழிக்கு பிறந்த நாள் விழா கொண்டாட ஹால் கேட்டு, முதலில் காலியாக இருந்ததாகச் சொல்லப்பட்டு பின்பு மறுக்கப்பட்ட நாள் என்பதால் ராதிகாவும் பேச்சிழந்து திகைத்து நின்றனர்.



# 7

ஹோட்டலில் கடந்த பதினேழாம் தேதி நடை பெற்ற சம்பவம் குறித்து ஆவேசமாக விஸ்வநாதன்

சொன்ன செய்தி அவர்கள் இருவரையும் ஒரு கணம் அதிர வைத்தது. இதை ஏற்கனவே ஊகமாக அறிந்து இருந்ததாலும் ஒவ்வொரு விசாரணையின் போதும் இது போன்ற தகவல்கள் வருவது சகஜமே என்பதாலும் முதலில் சுதாரித்து கமலக்கண்ணன்.

''விஸ்வநாதன், பொறுமையா இருங்க. செய்கிற வேலையை நேர்மையா செய்யுங்க. உங்களுக்குக் கிடைக்க வேண்டிய நல்ல விஷயங்கள் நிச்சயமா கிடைத்தே தீரும்'' என்று அவன் தோளில் தட்டி சமாதானமாகச் சொன்னான் கமலக்கண்ணன்.

''நீங்க சந்தோஷமா சாப்பிட வந்த இடத்துல என் ஆதங்கத்தை உங்களிடம் காட்டி விட்டேன். சாரி மேடம். சாரி சார்'' என்று அந்த இடத்தில் இருந்து நகர்ந்து விட்டான்.

தங்களுக்கு வேண்டியதை தட்டில் எடுத்துக் கொண்டு வந்த அமர ஐந்து நிமிடங்கள் ஆன பிறகும் ராதிகா அமைதியாக இருப்பதைப் பார்த்த கமல், ''ராதிகா ஆர் யு ஓகே?...'' என்று விசாரித்தான்.

''எனக்கென்ன! நான் நல்லா இருக்கிறேன். அந்த பேரர் சொன்ன தகவல்களை ஜீரணிக்க முயன்று கொண்டு இருக்கிறேன்...''

''அதை விட்டு தள்ளு ராதிகா. வேறே ஏதாவது நல்லதா நம்மைப் பற்றிப் பேசலாம். என்ன படித்து இருக்கிறாய்? எங்கே வேலை செய்கிறாய்?'' என்று கமல் சகஜமாக பேச ஆரம்பித்த உடனே அவள் நிமிர்ந்து புன்னகையுடன் கண்களை உருட்டி ஆராய்ந்தாள்.



''எ..ன்..ன! நான் ஏதாவது தப்பா கேட்டு விட்டேனா? இப்படி பார்க்கிறாய்?''

''இந்த விபரங்களை எல்லாம் நீங்களாகவே துப்பறிந்து அதுவும் போலீஸ் பதவியை பயன்படுத்தாமல், அரை நாளில் கண்டு பிடிப்பதாக என்னிடம் இரண்டு மணி நேரம் முன்பு சொன்ன ஞாபகம்...''

''ஓ! நான் இந்த கேஸ் விசாரணையில் மூழ்கியதில், அந்த சவால் பின்னால் போய் விட்டது. அதோடு உன்னை புதிதாக பார்ப்பது மாதிரியும் இல்லை. ஏதோ... ரொம்ப நாள்...'' என்று ஆரம்பித்தவன் பேச்சை நிறுத்தி, ''கமல், இருபது வயசு பையன் மாதிரி கன்னா பின்னாவென்று உளறுவதை நிறுத்து'' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

''என்ன டாக்டர், அந்த பக்கம் திரும்பி யாரிடமோ பேசிக் கொண்டு இருக்கீங்க?'' என்ற ராதிகாவின் குரல் அவனை திரும்பிப் பார்க்க வைத்த இடைவெளியில் ஒரிஜினல் கம்பீரம் மீண்டு இருந்தது.

''ஓகே, சவால் சவாலாகவே இருக்கட்டும். சும்மா பிடிக்கும் பிடிக்காது பற்றி பேசலாமா?''

''பேசலாம். நீங்கள் உங்களைப் பற்றிச் சொல்லுங்க. என்னைப் பற்றிக் கேட்காதீங்க?''

''பயங்கர உஷார் பேர்வழி தான். நான் பிறந்தது மதுராந்தகம் பக்கத்துல சின்ன கிராமம். ப்ளஸ் டூ வரை மதுராந்தகத்துல படித்தேன். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலா இங்கே சென்னை வாசம் தான். காலேஜில் படிக்கும்போதே சிவில் சர்வீஸ் போக வேண்டும் என்ற ஆசையில் படித்து, இப்ப சர்வீசுக்கு வந்து ஐந்து

ஆண்டுகள் ஆகி விட்டது. வீடு கீழ்ப்பாக்கம் போலீஸ் குவார்ட்டர்ஸ். அம்மா அப்பா மாசத்துக்கு ஒரு தடவை வருவாங்க. ரெண்டு மூணு நாள் இருப்பாங்க. ஒரே பையன். என்னை குடும்பஸ்தனா ஆக்கிப் பார்க்கணும் என்று மூணு வருஷமா பிரம்ம பிரயத்தனம் பண்ணிட்டு இருக்காங்க...''

''ஏன், உங்களுக்குக் கல்யாணம் பண்ணிக் கொள் வதில் இஷ்டம் இல்லையா?''

''இஷ்டம் இல்லாமல் என்ன? மனசுக்குப் பிடித்த மாதிரி பொண்ணு அமைய வேண்டாமா...''

''நீங்களே ஏதாவது பார்த்து முடிவு பண்ணலாம் என்று இருக்கீங்களா?''

''ஆசைதான். ஏதாவது புது கேஸ் வரும். இதை முடித்த உடனே என்று ஒவ்வொரு முறையும் முடிவு பண்ணு வேன். அப்புறம் ஏதாவது காரணம், அப்படியே தள்ளிப் போகும்...''

''உங்களுக்கு செட் ஆகலை என்றால் உங்க அம்மா அப்பாவிடம் பொறுப்பை விடலாமே?''

''அதைத்தான் அவங்களும் இத்தனை நாளா சொல் லிட்டே இருந்தாங்க. நான் பிடி கொடுக்கவில்லை. இந்த கேஸ் முடிந்த உடனே ஒரு வழி பிறக்கலாம்...'' என்றவன் கண்கள் அவளின் முகத்தை ஆர்வத்துடன் எடை போட்டது.

''உங்க மனசுக்குப் பிடித்த மாதிரி பெண்ணைக் கண்டு பிடித்து விட்டீர்களா?'' என்று கேட்கும் போதே குரல் குழைந்து கன்னங்கள் சிவந்து சூடாவதை அவ ளால் உணர முடிந்தது.



''எனக்கு பிடித்தால் போதுமா? அந்தப் பெண்ணுக் குப் பிடிக்க வேண்டும். அப்புறம் என் பெற்றோருக்குப் பிடிக்க வேண்டும்...'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, சற்று முன்பு ராதிகா ஹாலை முன் பதிவு செய்ய பணம் கட்டியதற்கான ரசீதைக் கொண்டு வந்து பணியாள் வைக்க, அதை உணவுக்கான பில் என்ற எண்ணத்தில் வேகமாக எடுத்த கமலக்கண்ணன், அதை படித்த பின்பு அவளிடம் திருப்பி நீட்டினான்.

''என்ன சிரிப்பு?'' என்று ரசீதை வாங்கி பத்திரப் படுத்தியவள் குறுகுறுப்புடன் கேட்டாள்.

''நான் என் பதவியை எந்த விதத்திலும் பயன்படுத்தி, கேள்விகள் கேட்காமலே அடுத்த இரண்டு தகவல்கள் தானாக வந்து விட்டது. ஒன்று நீ பணி புரியும் இடம், இரண்டாவது உன் மொபைல் நம்பர்'' என்று புன்னகை செய்ய அவளின் முகம் சிவந்தது.

''பேரர் என்னிடம் தானே கொடுக்க வந்தார். அவசரக் குடுக்கை மாதிரி வேண்டும் என்றே முந்திக் கொண்டு எடுத்தால் என்ன அர்த்தம்?''

''இது அபாண்டம். நான் அதை பில் என்று நினைத் தேன். உன்னை மதிய உணவுக்கு வரச்சொல்லி அழைத் தது நான். பில்லை உன்னைக் கொடுக்கச் சொல்வது எந்த விதத்தில் நியாயம்? அதனால் தான் முந்திக் கொண்டு எடுத்தேன்.''

''ஸ்டார் ஹோட்டலில் பில்லை வெறும் பேப்பராக கொண்டு வந்து கொடுப்பார்கள் என்று நீங்க நினைத் தீர்கள். இதை நான் நம்பணுமா?''

''ஓ.கே. நான் அந்த பில்லை பார்க்கவில்லை. அந்த போன் நம்பர் எனக்குத் தெரியாது. என்றாலும் இரண்டே நிமிடத்தில் இதே இடத்தில் இருந்து உன் மொபைல் நம்பரை என்னால் காவல் துறை அதிகாரி என்று சொல்லாமலே வாங்க முடியும். பார்க்கிறாயா?''

''ம்ம்ம், அதென்ன பெரிய விஷயமா?''

''பெரிய விஷயம் இல்லை என்று தான் சொல் கிறேன். உன் அலுவலக பெயரை ஹால் புக் பண்ணும் போது ரிசப்ஷனில் சொன்னது தெரியும். அது ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம். அந்த நிறுவனத்தின் தொலை பேசி எண்ணைக் கண்டு பிடிப்பதோ, அதில் பணி புரியும் எஞ்சினியர் ராதிகாவை தொழில் நிமித்தமா அனுப்புங்க, ஒரு ப்ராஜெக்ட் பற்றி பேச வேண்டும் என்று சொல்லி அலைபேசி எண் வாங்குவதோ பெரிய விஷயம் இல்லை.''

''ஓ!...''

''ஒரு பெண்ணை நேரில் பார்த்த பிறகு, அவளைப் பற்றிய தகவல் கண்டு பிடிப்பது போலீஸ் அதிகாரியாக இல்லாவிட்டாலும் பெரிய விஷயம் இல்லை. ரொம்ப பிகு பண்ணாமல் உன்னைப் பற்றிய தகவல்களைச் சொல்லு. உன்னைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. இன்று மட்டுமில்லை, என்றுமே...'' என்று பேசிக் கொண்டே போனவன், தன் பேச்சின் போக்கில் அதிர்ந்து பாதியில் நிறுத்தினான்.

பார்த்து நாலு மணி நேரம் மட்டுமே ஆகி இருக்கக் கூடிய ஒரு பெண்ணிடம் என்ன உளறிக் கொண்டு இருக்கிறான்? தற்செயலா ஒரு இளம் பெண்ணை, அவள் எத்தனை அழகா இருந்தாலும், இரண்டு முறை பார்த்து விட்டால் இப்படி வரை முறை இல்லாமல் பேசலாமா? அவனுடைய ஒழுங்கு, பண்பாடு எல்லாம் எங்கே போய் விட்டது?



அவசரமாக எழுந்தவன், ஒரு கையை உயர்த்தி, பில் கொண்டு வரச் சொல்லி ஜாடை செய்தபடி ராதிகா விடம் திரும்பி, ''ஓகே மிஸ் ராதிகா, உங்களுடன் இந்த மதிய உணவு சாப்பிட்டது. ஒரு இனிமையான அனுபவ மாக இருந்தது. நான் வெளியே ஒரு முக்கியமான வேலையாகக் கிளம்ப வேண்டி உள்ளது. மீண்டும் சந்திக்கலாம்'' என்று கரம் குவித்து விடை பெற்றான் கமலக் கண்ணன்.

''கிளம்பியாச்சா? என்ன திடீர் என்று பாதி பேச்சில்...''

''மணி ஆகி விட்டது. பை...'' என்று முடித்தவன், பில் வரும் வரை கூட காத்திருக்காமல் கேஷ் கவுண்ட ருக்கே நகர்ந்து விட, அவளும் வாசலுக்கு நகர்ந்தாள்.

காலையில் இருந்து இதுவரைக்கும், மூன்று வேலை செய்ய ஆரம்பித்து, மூன்றுமே நினைத்தது நடக்காமல் மாறி இருக்கிறது. இதற்கு மேல் அலுவலகத்திற்கு செல்ல விருப்பம் இல்லை. போனில் சொல்லி விட்டு வீட்டுக்குப் போக முடிவெடுத்தாள் ராதிகா.

* * *

ஜே.பீ. ஜுவல்லரியின் வாசலில் ஜீப்பை நிறுத்தி இறங்கிய கமலக்கண்ணன் இப்போது சீருடையில் இருக்க ராஜ் வாசலுக்கே வந்து விபரம் சொன்னான்.

''குற்றம் நடந்த தினத்திற்கு முதல் நாள் மாலை நாலு மணிக்கு இரண்டு திருமண மோதிரங்கள் வாங்கப்பட்டு

இருக்கிறது. விலை இங்கே செலுத்தப்படவில்லை. சொந்த உபயோகத்திற்கு என்று மேலாளர் கையொப்ப மிட்டு எடுத்து இருக்கும் துண்டு சீட்டு உள்ளது. ராகுல், ராகினி, வளர்மதி, இன்னும் ஒருவர் அந்த முக்கிய நபரின் பிரதிநிதியாக உடன் வந்துள்ளார். பதிவேடுகள் பார்த்தாகி விட்டது சார்...'' என்று ராஜ் விசாரணை குறித்த விபரம் சொல்லிக் கொண்டு இருக்கும் போது கடையின் முதலாளி ஓடி வந்தார்.

''ஆயியே டீ.சீ.பீ. சாஹப். நம்ம கடைக்கு சார் வந்தது சந்தோஷம்...'' என்று வரவேற்க அவன் தலை அசைத் தான்.

''ராஜ், வந்த நபர்கள் அவர்கள் தான் என்பதை போட்டோ காட்டி உறுதி செய்தாச்சா?''

''எஸ். சார். சூபர்வைசர், விற்பனையாளர் இருவரிட முமே கன்பார்ம் பண்ணியாச்சு சார்.''

''கடைக்கு எத்தனையோ பேர் வருவாங்க. இது தனியா எப்படி நினைவில் இருக்கு?''

''என்ன சார், எத்தனை கூட்டம் வந்தாலும் முக்கிய மான ஆள் வந்தால் அது தனியா தெரியாதா? சார் நம்ப கடைக்கு வந்தது, இன்னும் ரெண்டு வருஷம் ஆனாலும் மறக்க முடியுமா?'' என்ற கடைக்காரரின் ஜூஸ் விற்க முயலும் பதிலை ஒதுக்கி ராஜின் தொழில் ரீதியான பதிலுக்காக பார்வையைத் திருப்பினான்.

''பணம் கொடுக்கப்படாமல் நகை எடுத்துப் போன தாலும், இரண்டு மோதிரங்கள், ஒரு நெக்லஸ் செட் எடுத்துப் போய், மோதிரங்களை மட்டும் வைத்துக் கொண்டு நெக்லஸ் திரும்பி வந்தது என்பதாலும்,





அவர்களால் தனியாக அடையாளம் சொல்ல முடியுது சார். வி.ஐ.பி. வரவு என்பதும் முக்கியமான காரணம் சார். அதையும் மறுப்பதற்கில்லை.''

''ராகினி விரலில் இருந்த மோதிரமும், இங்கே வாங்கியதும் ஒன்றுதான் என்பதை உறுதி செய்தாச்சா ராஜ்?''

''எடை, கடை முத்திரை, எல்லாம் ஒத்துப் போகிறது சார்.''

''ஓகே, மேனேஜர், சூபர்வைசர், சேல்ஸ்மேன் ஸ்டேட்மென்ட், எல்லாம் பதிவு பண்ணிட்டு நீங்க கிளம் புங்க. நான் ரியாஸ் பேசின பிறகு மேலே என்ன செய்ய ணும் என்று சொல்றேன்'' என்று கிளம்ப முயன்றான் கமலக்கண்ணன்.

''என்ன சார் அதுக்குள்ளே கிளம்பிட்டீங்க? வராத ஆள் வந்து இருக்கீங்க. வீட்டம்மாக்கு ஏதாவது நகை பார்த்தால் சாருக்கு கம்மி விலையில் தரேன்...''

''உங்க ஆஃபருக்கு நன்றி. ஆனால் எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை...''

''அட! கடைக்கு வந்த முகூர்த்தம் சீக்கிரமே சார் கல்யாணச் சேதி சொல்வீங்க பாருங்க...'' என்று அவர் வாழ்த்த அவனுக்கு ராதிகாவின் முகம் மின்னி மறைந்து, அதுவரை இருந்த விசாரணை மூட் மாறி சாதாரண மானது. அவனின் முகத்தில் மலர்ந்த லேசான புன்னகை அவரின் பேச்சை மேலும் தொடர வைத்தது.

''சார் நம்ப கடைக்கு விசாரணை சம்பந்தமா வராமல் நம்ம கல்யாணத்துக்கு நகை வாங்க வந்து இருந்தால்

சந்தோஷமா இருந்து இருக்கும். ரிங் செக்ஷன் பார்க்கலாமே? இரண்டாயிரம் ரூபாயில் இருந்து ஒரு லட்சம் வரை விலையில் மோதிரம் இருக்கு சார். சும்மா பாருங்க...'' என்று வற்புறுத்த, அவன் உள்ளே சென்றான்.

''சார் மோதிரம், செயின், நெக்லஸ், வளையல், என்ன பார்க்கறீங்க சார்?''

''ஜாஸ்தி விலை இல்லாமல்... மோதிரம் மாதிரி...'' என்று இழுத்தான்.

''இது லேட்டஸ்ட் டிசைன் சார், பிளாட்டினம். நாற்பத்தி ஏழாயிரம் தான்...''

''மாச சம்பளக்காரனுக்கு நாற்பத்தி ஏழாயிரம் ரொம்ப ஜாஸ்தி. சும்மா பரிசளிக்க இவ்வளவு செலவு பண்ண முடியுமா? கல்யாணம் நிச்சயம் என்றால் பரவாயில்லை...'' என்று மனசுக்குள் நினைத்தவன், ''வேறே சிம்பிளா காட்டுங்க...'' என்று சொன்னான்.

''யோசிக்காதீங்க சார், நேற்றுதான் ஷோரூமுக்கே வந்தது. இரண்டு மோதிரம் ஜோடிகள் போடுவது மாதிரி செட்டா இருக்கு. சைஸ் பாருங்க'' என்று அந்தப் பெட்டியை அவன் கையில் திணிக்க, 'சைஸ்' என்ற வார்த்தையில் விழித்தான்.

இப்போது எதற்காக மோதிரம் பற்றி அதுவும் கல்யாணம், நிச்சயம் என்று யோசித்தான்? திருமணப் பரிசாக என்றால், பெண்ணின் அளவு தெரிய வேண்டாமா என்ற கேள்வி அவன் மனதில் தோன்றி மறையும் வேளையில்...

சந்தன வண்ணத்தில் அடர் சிவப்பில், கொடிகள் பிரிண்டட் சில்க் புடவையும் தளர பின்னிய ஒற்றைப் பின்னலும், மலராத மொட்டுக்களாக அடர்த்தியாய் கட்டி இருந்த மல்லிகைச் சரமுமாக கடை வாசல் படிகளில் ஏறிக் கொண்டு இருந்தது அவளேதான்.





# 8

வருவது ராதிகா தானா என்று கண்களை ஒரு முறை சிமிட்டிப் பார்த்த பின்பும் நம்புவதற்கு கமலக்கண்ணனுக்கு சிரமமாக இருந்தது. அவனின் திகைத்தப் பார்வையையும் அது சென்ற திசையும் கவனித்த கடைக்காரர் வினாடியில் வாசலுக்கு விரைந்தார்.

''நீங்க வருவீங்க என்று இப்போ சார் சொல்லிட்டே இருந்தாங்க. உங்களுக்கு ஆயுசு நூறு'' என்று எதிர்கொண்டழைக்க ராதிகாவிற்கு உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை ஒரு பரவசம் வினாடியில் ஓடி மறைந்தது.

''நான் வருவது அவருக்குத் தெரிய வாய்ப்பே இல்லையே?'' என்று மறுப்பாக முனகினாலும், அவர் சொன்னது உபசாரமான பொய் என்பது நன்றாகவே புரிந்தாலும், அந்த பொய் இனிப்பாக நெஞ்சை நனைத்தது. ராதிகா தன்னை நோக்கி நடந்து வருவதைப் பார்த்து ரசித்த கமலக்கண்ணன், அவள் அருகே வந்ததும் கம்பீரத்தை சிரமப்பட்டு மீட்டுக் கொண்டான்.

''வெல்கம், இந்த நகை கடையிலும் உங்க அலுவலக கன்சல்டன்சி சர்வீஸ் தொடருதா?'' என்று பாதி கேலியாகவும் மீதி ஆர்வமாகவும் கேட்டான்.

''இது ஆபீஸ் வேலை இல்லை. நானாகவே அலுவலகத்தில் அனுமதி பெற்று என் சொந்த வேலையாக இங்கே வர முடிவு பண்ணியதை யூகித்துக் கண்டறியும் திறமை வாய்ந்த போலீஸ் ஆபீசரை இங்கேதான் பார்க்கிறேன்'' என்று பாராட்டைத் தெரிவிக்க அவன் வியப்பைக் காண்பித்தான்.

''நீ இங்கே வருவது எனக்கு எப்படித் தெரியும்? இது என்ன புதுக் கதை?'' என்றவன் பார்வை கடைக்காரரின் புறம் பாய்ந்தது.

''சார் ரிங் பார்த்துட்டு இருக்கும்போது மேடம் வருவதைப் பார்த்து சந்தோஷப்பட்டதால், நான் தான் மேடம் வரவை நீங்க எதிர்பார்த்து இருந்தீங்க என்று சொன்னேன்...'' என்ற கடைக்காரரின் விளக்கத்தில் கமல் அசையவில்லை.

''பரவாயில்லை. நீங்க உங்க வேலையைப் பாருங்க. நா..ங்..க..ளே...'' என்று 'நீ கிளம்பு' என்று சொல்லாமல் சொல்ல அவர் சில கணம் விழித்து விட்டு நகர்ந்தார்.

''போலீஸ் டிபார்ட்மெண்டில் இல்லாவிட்டாலும், ஒரு போலீஸ் ஆபீசர் எங்கே போகிறார் என்று துப்பறியாமலே கண்டு பிடித்து, அந்த இடத்திற்கு சரியா வந்து சேர்ந்த ராதிகாவை நான் என்ன சொல்லி பாராட்டுவது?''

''நான் உங்களைத் தேடி வந்தேன் என்று சொன்னதா எனக்கு ஞாபகம் இல்லையே?''

''பெர்சனல் வேலையா வந்தேன் என்று சொன்னது எனக்குக் கேட்டதே?''



''பெர்சனல் வேலை என்றால் அது உங்களைப் பார்க்க என்று நீங்களாக நினைத்துக் கொண்டால் எப்படி? நான் இங்கே நகை வாங்க வந்து இருக்கலாமே?'' என்று மடக்கிய ராதிகாவிற்கு விடாமல் கண்ணனுடன் சரிக்கு சரி வாய் அடிப்பது பிடித்து இருந்தது.

''இங்கே என்னைப் பார்க்க வரவில்லை என்று என் கண்ணைப் பார்த்துச் சொல்லு...''

''இதென்ன விதண்டா வாதம்? நான் எங்கே எதற்குப் போகிறேன் என்று விசாரிப்பதுதான் உங்கள் வேலையா? நீங்க ஆபீஸ் வேலையா தானே வந்தீங்க. முதலில் அதைப் பாருங்க...''

''நான் இங்கே ஆபீஸ் வேலையா வந்தேன் என்று யார் சொன்னா? நானும் பெர்சனல் வேலையாக வந்தேன்...''

''ம்... இதை காலையில் சிவில் டிரேசில் இருக்கும்போது சொல்லி இருந்தால் ஒரு வேளை நம்பி இருக்கலாம். இப்போது யூனிபார்மில், கம்பீரமா நிற்கும் போது நம்ப சான்ஸ் இல்லையே டீ.சீ.பீ. சார்...'' என்று அவள் கேலியாகச் சொல்ல முறுவல் மலர்ந்தது.

அவள் உடை மாற்றியதை தான் கவனித்து ரசித்ததைப் போலவே அவளும் தன் உடை மாற்றத்தை கவனித்து இருக்கிறாள் என்ற எண்ணம் பெருமிதத்தைத் தோற்றுவிக்க ''சாப்பாட்டு நேரம் வரை, டாக்டர் என்று சொன்ன ஞாபகம். இப்ப ஏன் மாறி விட்டது?'' என்று விசாரித்தான்.

''அந்த உடைக்கு அது பொருத்தம். இந்த உடைக்கு இதுதான் பொருத்தம். எதைச் செய்தாலும் பொருத்தமா செய்வதுதான் ராதிகா ஸ்டைல்'' என்று முடித்தவள்

அவன் சற்று முன்பு வைத்து இருந்த பெட்டியை எடுத்து, அதில் இருந்த மோதிரத்தை தன் விரலில் போட்டு சற்று தூரத்தில் வைத்து அழகு பார்த்தவள், ''டிசைன் அழகா இருந்தாலும், டைட்டா இருக்கு இல்ல'' என்று அவனிடம் அபிப்ராயம் கேட்க அவன் புன்னகைத்தான். சற்று முன்பு நினைத்தது ஒரு வார்த்தை கூட பேசாமல் தானாக நடக்கிறதே! இவள் வருகையே தான் எதிர் பார்க்கவில்லை என்றால், இங்கே வந்து அவளே போட்டுப் பார்த்து அளவினைச் சொல்லும் விந்தையை என்ன சொல்வது?

''ம்ம்ம், நீ மோதிரம் வாங்கவா வந்தாய்?''

''ஆமா!''

''யாருக்கு?''

''ம்ம்ம், நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள போகிற வருக்கு...'' என்று புன்னகையுடன் அவன் கண்களை நேராகப் பார்த்து ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்ல அவளைப் பார்த்த வினாடியில் இருந்து மலர்ந்து புன்னகையுடன் இருந்த அவன் முகம் சட்டென்று களை இழந்தது. அவனின் திடீர் மௌனத்தை ஒதுக்கிப் பேச்சைத் தொடர்ந்தாள்.

''அதை ஏன் நீங்க கேட்கறீங்க? இதுவும் உங்க புலன் விசாரணையில் சேர்த்தியா?''

''ம்ம்ம்... இல்லை... சும்மாதான் கேட்டேன்...''

''நீங்க உங்க வருங்கால மனைவிக்கும், உங்களுக்கும் ஒரே மாதிரி மோதிரம் வாங்கப் போறீங்க. சரியா?''

''பாதி சரி...'' என்று முணுமுணுப்பாகச் சொன்னான் கமலக்கண்ணன்.



''எந்த பாதி சரி? வருங்கால மனைவிக்கு என்பதா? மோதிரம் என்பதா?'' விடாமல் துருவியவளுக்கு அவன் முக வாட்டத்தின் காரணம், 'தன் திருமணச் செய்தி' என்பது புரிந்ததாலேயே குரலில் துள்ளல் கூடியது.

''வருங்கால மனைவிக்கு என்பதுதான் சரி...'' என்று சொன்ன போது அவனின் குரல் இயல்புக்கு மீண்டு இருந்தது. அவளுக்கு திருமணம் ஏறகனவே நிச்சயம் ஆகி இருந்தால், அதுவும் அவள் விருப்பத்துடன் நடந்து இருக்கும் பட்சத்தில், தான் வருத்தப்பட ஒன்றும் இல்லை என்று மூளை சுட்டிக்காட்ட, புன்னகையை முயன்று வரவழைத்து இருந்தான்.

''வருங்கால மனைவி என்று சொல்றீங்க. அவங்க இங்கே இருக்காங்களா?'' என்று கேட்டவளின் கண்கள் அவனை குறுகுறுப்புடன் ஆராய்ந்தது.

''ம்ம்ம்... தெரியலை...''

''தெரியலையா? இதென்ன பதில்? சரி அவங்க விரல் அளவாவது வச்சுருக்கீங்களா?''

''இல்லை. ஆனால்... அது சரி, நீங்க வச்சு இருக் கீங்களா?'' அவள் மடக்கி மடக்கி கேள்வி கேட்க, தான் பதில் சொல்ல திணறுவது புரிந்ததால், சமாளித்து அவளை மடக்கினான்.

''இல்லை. ஆனால் தனியா கடைக்குப் போய், இதுவா அதுவா என்று குழம்பும் ஆள் நான் இல்லை. சம்பந்தப்பட்ட ஆளையே கூட்டிட்டுப் போய் அளவு பார்த்து வாங்கி விடுவேன் என்பதால் அந்த பிரச்னை எனக்கு இல்லை. இந்த டிசைன் உங்களுக்கு பிடிச்சு இருக்கா? அளவு சரியா இருக்குமா பாருங்க'' என்று

நான்கைந்து மோதிரங்களை தனியாக எடுத்து வைக்க அவன் திணறினான்.

''எ..ன்..னை..யா பார்க்கச் சொல்றீங்க?''

''ம்ம்ம், உங்களைத்தான். காவல் துறை உங்கள் நண்பன் என்று போர்ட் வச்சு இருக்கீங்க. இந்த சின்ன விஷயத்திற்கு அபிப்ராயம் சொல்ல மாட்டீங்களா? ஒரு வேளை சர்வீஸ் சார்ஜ் கேட்பீங்களா?''

''அதெல்லாம் இல்லை...'' என்று தயக்கத்துடன் சொன்னவன், ஒன்றிரண்டை விரலில் போட்டும் பார்க்க அவள் ஓரக்கண்ணால் அவனின் முக பாவனைகளில் இருந்து விருப்பு வெறுப்புகளை கணிக்க முயன்றாள். அவன் முக வாட்டத்தை மறைக்க அரும்பாடு படுவதைக் கண்டவளுக்கு ஒரு மாதிரி ஆகி விட்டது.

''உங்க ஆலோசனைகளுக்கு நன்றி டீசீ சார். விண்டோ ஷாப்பிங் எனக்குப் பிடிக்கும். பைசா காசு செலவில்லை பாருங்க. உண்மையில் நான் மோதிரம் வாங்க வர வில்லை...''

''அப்புறம் பெர்சனல் வேலை என்று சொன்னது, என்னைப் பார்க்க இல்லை என்று சமாளித்தது எல்லாமே பொய்யா?'' என்றவன் குரலில் குதூகலம் இருந்தது. அது வரை மூச்சடைத்தாற் போல இருந்தவனுக்கு உலகமே அழகாக மாறிப் போனது.

''நான் சில உண்மைகளைச் சொல்லாமல் இருக் கலாம். ஆனால் நான் எப்போதுமே பொய் சொல்வ தில்லை. இன்று மாலை என் பிரெண்ட் ஒருத்திக்கு திருமண வரவேற்பு. அதற்கு அலுவலகம் சார்பாக ஒரு



வெள்ளிக் குத்து விளக்கு வாங்கச் சொல்லி இருந் தாங்க...''

''ஓஹோ! அப்ப கொஞ்சம் நேரம் முன்னாடி தனியா கடைக்குப் போவதில்லை என்று சொன்னது உண்மை யில் சேர்த்தி இல்லையோ?''

''அடடா! என்ன அவசரம் உங்களுக்கு? என்னைக் கொஞ்சம் முழுசா பேச விட மாட்டீங்களா? நேற்று மாலையே வந்து செலக்ட் பண்ணி வச்சாச்சு. இன்று பணம் கொடுத்து வாங்கி வரும் பொறுப்பு என் னுடையது. நான் அந்த வேலை பார்க்கிறேன். நீங்க உங்க வேலை பாருங்க'' என்று அருகில் நின்ற ராஜை கண்ணால் காட்டி அவள் சொல்ல, திரும்பினான் கமலக் கண்ணன்.

கையில் கோப்புடன் ராஜ்மோகன் இருக்க அவன் தலையை உலுக்கிக் கொண்டான். இந்த சின்னப் பெண் என்ன பாடு படுத்துகிறாள்? இன்று இரவு அம்மாவிடம் நிச்சயம் இவளைப் பற்றிப் பேச வேண்டும். அதற்கு முன்பு இவளின் வீடு, உறவினர் போன்ற அடிப்படை விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

''இங்கே ஸ்டேட்மெண்ட் வாங்கியாச்சு சார், அதோடு ஒரு சின்ன கூடுதல் தகவல் சார், அந்த ராகினி முதல் நாள் மோதிரம் வாங்க ராகுல் அவங்க அம்மாவோடு வந்தது மட்டும் இல்லாமல் அன்றே ராகுலோடு ஒரு முறையும், மறுநாள் தனியா ஒரு முறையும் இந்த கடைக்கு வந்து இருக்காங்க...''

''ஓ! எதுக்கு...?''

''முதல் நாள் வந்தது மோதிரம் அளவு சரியாக இல்லை, அடுத்த சைஸ் வாங்க வந்ததா சொல்றாங்க. அடுத்த நாள் அவங்க மட்டும் எதுக்கு வந்தாங்க என்று தெரியலை சார். கொஞ்ச நேரம் காத்திருந்து விட்டுக் கிளம்பிட்டாங்க போல. கூட பைனான்ஸ் மினிஸ்டர் பீ.ஏ. இருந்து பேசிட்டு இருந்தார். கூல் ட்ரிங்க்ஸ் கொடுத்தார் என்று சொல்றாங்க. அது பத்தி இன்னும் கொஞ்சம் விசாரிக்கணும். ரியாஸ் தகவல் சொன்னால் தான், மேற்கொண்டு விசாரணையைத் தொடர முடியும். அதுக்கு நாலு மணியாகி விடும்'' என்று ராஜ் சொல்ல கை திருப்பி மணியைப் பார்த்தான் கமல்.

''மணி மூன்றாகிறது. கமிஷனர் ஆபீஸ் வரை போக வேண்டும். அங்கே ராபர்ட் சொன்ன அந்த நரை முடி சம்பந்தமா மேற்கொண்டு விசாரிக்கணும். பைக்கை நேசமணியை எடுத்து வரச் சொல்லிடுங்க. நாம் ஜீப்பில் போகலாம்'' என்றவன் பார்வை உள்ளே அலைபாய அவனின் தேடல் புரிந்தது.

''நான் ஜீப் அருகே நிற்கிறேன் சார், நீங்க வாங்க...'' என்று அவன் நகர, ஐந்து நிமிடங்களில் ஜீப்பில் மலர்ந்த சிரிப்போடு வந்து ஏறிய கமலக்கண்ணனைப் பார்த்ததும் ராஜ்மோகனிற்கும் புன்னகை மலர்ந்தது. அவன் ஏறிய அடுத்த வினாடி ஜீப்பைக் கிளப்பி, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதத்தில் சாலையை தேர்ந்தெடுத்து மிதமான வேகத்தில் பயணம் தொடர, கமலக்கண்ணன் பேச்சை ஆரம்பித்தான்.

''கடந்த பத்து நாட்களில் நடந்த விசாரணையின் அடிப்படையில் நான் கேட்கும் கேள்விகளுக்கு மனதில்



தோன்றும் பதிலை லாஜிக் பார்க்காமல் சொல்லுங்க ராஜ். முதலில் ராகினியை ஏன் கொலை செய்யணும்?''

''சொத்து இழப்பு, கற்பழித்தல், இந்த இரண்டு குற்றங்களுமே நடக்கவில்லை சார். அப்படி என்றால், காதலிப்பது பிடிக்காமல் இருப்பவர்களால் மரணம் நடந்து இருக்கலாம்...''

''இது ஏன் தற்கொலையாக இருக்கக் கூடாது?''

''போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் மரணம் விஷத்தினால் என்று சொல்கிறதே?''

''எஸ் ராஜ், ஆனால் அது எப்படி உள்ளே போனது என்பது பற்றி எந்த தகவலும் இல்லையே? கொலையாக இருக்கும் பட்சத்தில், அதை யாராவது வலுக்கட்டாயமாக புகட்டி இருக்க வேண்டும் அல்லவா? அதுக்கு சாட்சி இல்லையே?''

''சார், அந்த கார்ப்பெட் மேட்டர் மறந்துட்டீங்களா?''

''மறக்கலை ராஜ்! அதில் இருந்த ஜூஸ் கறை. அதில் இருந்த ஹோட்டல் பேர், அது எப்படி ராகுலின் வீட்டுக்கு வந்தது, எதையுமே நான் மறக்கவில்லை. ராகினி இறந்த தினத்திற்கும் முன்பு இரண்டு நாட்களும், மூன்று நாட்கள் பின்னாலும், அந்த ஹோட்டலின் மினி கான்பரன்ஸ் ஹால் யாருக்கும் கொடுக்கவில்லை...''

''அதுல என்ன சார் ஆச்சரியம்? ஹால் கேட்டு யாராவது வந்தால் தானே கொடுப்பாங்க?''

''கேட்டும் கொடுக்கவில்லை என்பது தானே அங்கே முக்கியமான விஷயம்...''

''இது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''ராதிகா தன் பிரண்டோட பிறந்த நாள் விழாவுக்குக் கேட்டு, ஹோட்டலில் ஓகே சொல்லி, பிறகு கான்சல் பண்ணி இருக்காங்க. ஹால் கொடுக்காமல் இருப்ப தற்கு என்ன காரணமா இருக்கும் என்று யோசித்தாயா ராஜ்?''

''மறைக்க வேண்டிய பொருள் ஏதாவது உள்ளே இருந்து இருக்கலாம்...''

''மறைக்கப்பட வேண்டிய பொருள் என்றால்...''

''யாரையாவது மிரட்ட ஒளித்து கட்டி வைத்து... ஆயுதம்... சாட்சிகள்... உடல்... எதாக வேண்டுமானாலும் இருக்கலாம்.''

''ராஜ், அந்த ஹோட்டலில் வேலை செய்த மாரி யப்பன் என்ற சர்வரை கடந்த பத்து நாட்களாக யாரும் பார்க்கவில்லை. கார்ப்பெட்டில் ஜூஸ் கொட்டியதால் அவரை வேலையை விட்டு நீக்கிட்டாங்க என்று சொல்லப்படும் காரணம் ரொம்ப சில்லியா இருக்கு. என்னால் நம்ப முடியவில்லை...'' என்று கமல் சொல்ல அதை கேட்டவன் கால்கள் பிரேக்கை வேகமாக அழுத்த வேண்டி க்ரீச் என்ற சப்தத்துடன் நின்றது.

''ஹேய்! பார்த்து பார்த்து, என்ன இவ்வளவு ஷாக்?''

''சார், உங்களுக்கு ஸ்ட்ரைக் ஆகவில்லையா? நாலு நாளா ஜி.ஹெச்சுல அடையாளம் தெரியாமல் ஒரு பாடி இருக்கே?''

''என்ன ராஜ் சொல்றீங்க?''

''ஆமா, சார், முகம் அடையாளம் தெரியாமல் லாரி ஆக்சிடெண்டில் மாட்டிய பாடி, அவரா இருக்கலாம் என்று எனக்குத் தோணுது சார்...''



''மை காட்! இப்ப மாடர் ஒன்று இல்லை. இரண்டு. இப்ப கமிஷனர் ஆபீசுக்கு போவதை விட ஜி.ஹெச் போவதுதான் முக்கியம். ஹோட்டலுக்கு தகவல் சொல்லி, யாரையாவது அடையாளம் காட்ட வரச் சொல்லலாம். எப்படி இத்தனை நாள் உரிமை கோரி வராமல் இருந்தாங்க? உறவு நட்பு யாருமே இல்லையா? நாலு நாளா ஒரு ஆள் வரவில்லை என்றால் தேட மாட்டார்களா?'' என்று தனக்குள் கடிந்தவன் அடுத் தடுத்து பிறப்பித்த உத்தரவுகளில், பல வேலைகள் நடந்தது.

ஜி.ஹெச்சில் பிணவறையில் இருந்த உடல் வெளியே எடுத்து வைக்கப்பட்டது. சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஆள் வேலைக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை என்று பத்து நாட்களுக்கு முன்பே பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை, அலுவலகப் பதிவேடுகள் என்ற புதை மணலில் காணாமல் போய் இருந்தது தோண்டி எடுக்கப் பட்டது.

ஹோட்டலில் இருந்து வரவழைக்கப்பட்ட விஸ்வ நாதன் பிணத்தின் வலது கையில் இருந்த பளிங்கினால் செய்த விநாயகர் மோதிரத்தை வைத்து இறந்தவரை அடையாளம் காட்டியதும், 'கேட்க ஆள் இல்லை என்று லாரி வச்சு அடிச்சுக் கொன்றே விட்டார்களா?' என்று முறையிட திரும்பி, அங்கே காக்கி சீருடையில் நின்ற கமலக்கண்ணனை கண்டு, ''சார் நீங்களா?'' என்று அதிர்ந்து நின்றதும் நடந்தது.



# 9

தன்னுடன் பத்து நாட்களுக்கு முன்பு வரை இணைந்து பணி புரிந்த ஒரு மனிதர், பெண்ணுக்குக் கல்யாணம் முடிக்க வேண்டிய வயது வந்து விட்டது என்று கூடுதல் சம்பாத்தியத்திற்காக சிரமப்பட்டு ஓவர் டைம் பார்த்த ஒரு நல்ல மனிதர், இன்று பிணமாகக் கிடப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாத விஸ்வ நாதன் ஆத்திரத்துடன் சண்டை போடத் திரும்பி, அங்கே நின்ற கமலக்கண்ணனைப் பார்த்து அதிர்ந்தான்.

''சார், நீங்க போலீசா? மதியம் நீங்க யார் என்று தெரியாமல்... சாரி சார் மன்னிச்சுக்கோங்க...'' என்று திணறலாகச் சொன்னான்.

''மதியம் நீங்க எதுவும் தப்பா சொல்லலை. அவங்க வீட்டு நம்பர் ஏதாவது உங்களுக்கு தெரிஞ்சால் சாரிடம் கொடுங்க. அவர் தகவல் சொல்லிடுவார். ஏற்கனவே உங்களுக்கு தெரிஞ்சு, மதியம் சொல்லாமல் விட்ட விஷயங்கள் ஏதாவது இருந்தால் இப்ப சொல்லிடுங்க. இந்த கேஸ் விசாரணைக்கு பிரயோஜனமா இருக்கட்டும்'' என்று தட்டி கொடுக்க அவன் முகத்தில் தெரிந்த அதிர்ச்சி கொஞ்சம் விலகியது.

''சொல்லுங்க, நீங்க கடைசியா மாரியப்பனை எப்போ பார்த்தீங்க? அவர் ஏதாவது உங்களிடம் சொன்னாரா?''



''பார்த்துப் பத்து நாளைக்கு மேலே இருக்கும் சார். சாதாரண ஹோட்டல் பார்த்துப் பேசியதுதான். வேறே ஒண்ணும் இல்லை சார்...'' என்றவன் கண்களில் பயம் இருந்தது.

''தைரியமா உண்மையைச் சொல்லுங்க விஸ்வா. போலீஸ் கிட்டே பொய் சொல்லக் கூடாது. நீங்க சொன் னீங்க என்ற தகவல் வெளியே வராமல் நான் பார்த்துக் கொள்வேன்...''

''அதெப்படி சார் பார்த்துக் கொள்வீங்க? நீங்க சாட்சி சொல்ல கோர்ட்டுக்குக் கூப்பிட்டால் வராமல் இருக்க முடியுமா? எங்க வீட்டுல இருக்க ஆட்களுக்கு இருபத்தி நாலு மணி நேரமும் உங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியுமா? கூட வேலை செய்த ஒரு அப்பாவிக்கு என்ன ஆச்சு என்று பார்த்துட்டு எப்படி சார் தைரியமா சொல்லச் சொல்றீங்க?''

''விஸ்வா, இருபத்தி நாலு மணி நேரமும் தனி மனித பாதுகாப்புக்கு காவல் துறையை அனுப்ப முடியாதுதான். நீங்க கோர்ட்டுக்கு வரத் தேவை இல்லை. கேசை முடிக்க எனக்கு நிறைய சாட்சிகள் இருக்கு. உங்களுக்குத் தெரிஞ்ச விஷயங்களைச் சொல்லுங்க.''

''சார், நீங்க என்னை கோர்ட்டுக்குக் கூப்பிட மாட்டேன் என்று சொன்னதை நம்பி இதைச் சொல்றேன் சார். திரும்பித் திரும்பி விசாரணை என்று என்னைக் கூப்பிடக் கூடாது ப்ளீஸ் சார்...'' என்று கும்பிட, அவனுக்கு டென்ஷனை மீறி சின்ன புன்னகை எட்டிப் பார்த்தது.

''சரி சொல்லுங்க...''

''அன்னிக்கு எங்க ஹோட்டலில் ஒரு பேங்க்ல இன்ஷூரன்ஸ் ஸ்கீம் அறிமுகப்படுத்த நிதி அமைச்சரைக் கூப்பிட்டு இருந்தாங்க. அந்த விழா நடைபெற்ற அன்று மாலை கடைசியா மாரியப்பனைப் பார்த்தேன். அன்றே ரொம்ப கவலையா இருந்தார். வீட்டுக்குப் போகலையா என்று கேட்டபோது, நைட் டியூட்டி இருக்கு என்று சொன்னார். ஆனால் அவருக்கு டியூட்டி கொடுத்ததா ஆபீஸ் பதிவேடுகளில் இல்லை. அப்புறம் தான் தெரியும்...''

''அன்று நடந்த விழாவின்போது அமைச்சருக்கு தங்குவதற்காக தனியாக ரூம் எதுவும் புக் பண்ணினாங்களா தெரியுமா விஸ்வா?''

''அவருக்கு ரூம் எதுவும் புக் பண்ணவில்லை. அது முப்பது நிமிஷ விழா மட்டும் தான். அவர் ஒன்பது மணிக்கு வருவதற்கு முன்னாடியே கான்பரன்ஸ் ஹாலில் பேங்க், ப்ரெஸ், என்று நிறைய பேர் வந்து விட்டதால் அவரைப் பார்க்க வந்த விசிட்டர்களை சின்ன கான்பரன்ஸ் ஹாலில் வைத்து சந்தித்தார். அப்போ அவங்களுக்கு ட்ரிங்க்ஸ் கொண்டு போய்க் கொடுத்த போது பிரச்னை ஆகி விட்டது என்று மாரியப்பன் சொன்னார்...''

''வந்தது யார்? என்ன பிரச்னை என்று தெரியுமா?''

''தெரியாது சார், நான் பார்க்கலையே?''

''விஸ்வா, இது ரொம்ப முக்கியமான விசாரணை. நல்லா ஞாபகப்படுத்திச் சொல்லுங்க. எத்தனை பேர் வந்தாங்க? எவ்வளவு நேரம் இருந்தாங்க? என்ன சாப்பிட்டாங்க? இதைப் பற்றி அவர் என்ன சொன்னார்?''



''அன்று பார்த்தது நிறைய பேர் இருப்பாங்க சார். அதைப் பற்றிச் சொல்லலை. ஜூஸ் கொண்டு போகும் போது ஏழெட்டு பேர் இருந்தாங்க என்று சொன்னார்...!''

''அதுல லேடீஸ் யாராவது...''

''ஜூஸ் கொடுத்த போது இரண்டு பேர் இருந்தாங்க என்று சொன்னாங்க சார்...'' என்று அவன் சொல்லி முடிக்கும்போது தன்னுடைய மொபைலில் பதிவு பண்ணி இருந்த வளர்மதி, ராகினி ஆகிய இருவரின் புகைப்படங்களை எடுத்துக் காட்டி, ''அது இவங்களா?'' என்று விசாரித்தான் கமலக்கண்ணன்.

''எனக்குத் தெரியாது சார், அன்று எனக்கு மாலை டியூட்டி தான். பகலில் நான் இல்லையே?''

''ம்ம்ம், சரி, மாரியப்பனை தேடி ஏன் யாருமே வரவில்லை? புகார் கூட லாட்ஜில் கூட வசிப்பவர்தான் கொடுத்து இருக்கார். ஏன்?''

''இங்கே எல்லோருமே சின்ன வயசுப் பசங்க தான். அவர் மட்டும் ஐம்பதைத் தாண்டியவர். அவர் அப்பப்போ தான் இங்கே வருவார். இன்னொரு ஹார்ட்வேர் கடையிலயும் வேலை செய்கிறார். அதனால் பிரெண்ட்ஸ் யாரும் இல்லை சார்...''

''மாரியப்பன் எப்போ வீட்டுக்கு போவார்? மனைவி குழந்தைகள் இல்லையா?''

''இருக்காங்க சார், வேலூர் தாண்டி சின்ன கிராமம் சொந்த ஊர். மாசத்துக்கு ஒரு தடவை போவார். சில மாசம் போக மாட்டார். ஒரு பொண்ணு படிச்சுட்டு இருக்கு...''

''பொண்ணா? பேர் தெரியுமா? எங்கே இருக்காங்க?''

''பேர் தெரியாது சார். இங்கேதான் சென்னையில் எங்கேயோ படிக்குது. ஒரே பொண்ணை பெரிய எஞ்சினியர் ஆக்கணும் என்று பணம் சேர்த்து வைப்பார். நல்ல மனுஷன் சார், அவருக்கு போய் இப்படி? தன்னோட கனவு எல்லாம் வீணா போகிடுச்சு என்று புலம்பினார் சார். என் பொண்ணோட வாழ்க்கை இப்படி ஆகும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை என்று வருத்தப்பட்டார்...''

''அன்று நைட் டியூட்டி பார்த்த போது அவரைச் சந்திக்கவில்லையா? அன்று ஹோட்டலில் வேறு யார் இருந்தாங்க? குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி முக்கியமான நபர்கள்... அரசியல்வாதிகள்...''

''இல்லை சார், ராத்திரி யாரும் வந்த மாதிரி தெரியலை. ஏற்கனவே காலையில் வந்தவங்க, தங்கி இருந்தால் எனக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. அதை மாரியப்பன் கவனித்து இருக்கலாம். என்னிடம் சொல்லவில்லை சார். இந்த வேலை இருந்தால் என்ன போனால் என்ன என்பது மாதிரி என்னிடம் புலம்பினார் சார்...''

''அதற்குப் பிறகு பார்த்தீங்களா? அவர் வேலை போனது. உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அவர் ரெண்டு மூணு நாளா கண்ணிலே படவில்லை என்று ஹோட்டலில் விசாரித்த போது வேலையை விட்டு நீக்கிட்டதா சொன்னாங்க. அதற்குப் பிறகு அவரைப் பார்க்கலை சார். சக ஊழியர் என்று முறையில் எனக்கு அனுதாபம் மட்டும் தான் சார்...''



''பீ எப்-ல பிடிச்சதா சொன்னது...''

''ஆர்டர் எதுவும் நான் கண்ணால் பார்க்கவில்லை சார். எல்லாமே காதில் விழுந்த பேச்சுக்கள் தான். சத்தியமா எனக்கு இதுக்கு மேலே எதுவுமே தெரியாது சார். என்னை விட்டுடுங்க சார்'' என்று கெஞ்சலாகக் கேட்க, 'சரி, கிளம்பு' என்று அனுமதி கொடுத்தவன் அவன் வெளியேறியதும் ராஜ்மோகனை அழைத்து, ''ராஜ், மாரியப்பன் வீட்டுக்குத் தகவல் சொல்லியாச்சா?'' என்று விசாரித்தான்.

''இல்லை சார், போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளைன்ட் கொடுத்தது லாட்ஜ் முகவரி. லாட்ஜில் இருப்பது ஹோட்டல் முகவரி, அதனால் மேற்கொண்டு ப்ரோசீட் பண்ண முடியலை சார், இவருக்கு மொபைல் இருந்ததா சொல்றாங்க. அந்த பில்லை அதில் அடிக்கடி பேசிய எண்கள் அதன் முகவரி என்று ட்ரேஸ் பண்ணிட்டு இருக்கேன் சார், பத்து பதினைஞ்சு நிமிஷத்துல முடிஞ்சுடும் சார்...''

''நீங்க ஹாஸ்பிடல் பார்மாலிட்டி பார்த்துக்கோங்க. அண்ணா நகர் போகிறேன். எனக்கு ஒரு மணி நேரம் ப்ரேக் வேண்டும்'' என்றவன் முகம் இறுக்கமாக இருந்தது.

''எஸ் சார், இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன் சார், ராபர்ட்டை வரச் சொல்லட்டுமா சார்?'' என்றவன் குரலில் கனிவும் அக்கறையும் இருந்தது. ''தேவை இல்லை ராஜ், நான் தனியா யோசிக்கணும்'' என்றவன் அரசு மருத்துவமனையில் இருந்து வெளியேறினான்.

இதுவரை ராகினி கொலை வழக்கில், சந்தித்த நபர்கள், விசாரணை விபரங்கள், சம்பந்தப்பட்ட

இடங்கள், என்று மனதிற்குள்ளேயே வரைபடம் அமைத்து, ஒன்றுக்கொன்று தொடர்பு உருவாக்கிக் கொண்டு இருந்த கமலக்கண்ணனின் சிந்தனை தொடரை, 'க்ரீச்' என்ற சப்தத்துடன் குலுங்கி நின்ற ஜீப் அறுத்தது.

''என்ன ஆச்சு மணி...?'' என்ற கேள்வியுடன் நனவிற்கு வந்தான்.

''என்ன ஆச்சு என்று தெரியலை. இதோ பார்த்துட றேன் சார். பக்கத்துக்கு ஸ்டேஷனுக்கு சொல்லி வேறே வண்டி கொண்டு வரச் சொல்லட்டுமா சார்?''

''நீங்களே மெக்கானிக் வரச் சொல்லிப் பாருங்க. சரியாகாது என்று தெரிந்தால் வேறே வண்டி சொல்லிக் கலாம். முதலில் எனக்கு ஒரு காபி வாங்கிட்டு வாங்க'' என்றவன் சீட்டை பின்னுக்குத் தள்ளி, வசதியாக அமர்ந் தான். கண்ணாடி ஜன்னலை இறக்கி விட்டு, இதுவரை யோசித்த விபரங்களை கையேட்டில் குறித்தவன் சுற்றுப் புறத்தை கவனிக்கவில்லை.

''ஹாய் கண்ணன், என்ன நடு ரோட்டில் ஜீப்பை நிறுத்திட்டு, பேப்பர்ல பாண்டி ஆடிட்டு இருக்கீங்க? இதுக்கு தான் டிபார்ட்மெண்ட்டில் உங்களுக்கு சம்பளம் கொடுக்கிறாங்களா?'' என்று உற்சாகத்துடன் ஒலித்த குரல் ராதிகாவினுடையது என்பது அவளைக் கண்ணால் காண்பதற்கு முன்னாலேயே மூளை அறிவித்து, செல்களில் புத்துணர்வு பரவச் செய்தது.

''முக்கியமான கேஸ் விஷயமா சம்பந்தப்பட்ட நபர்கள், இடங்கள், விஷயங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து தொடர்பு படுத்த முயன்று கொண்டு



இருக்கும் என்னை பார்த்தால் பேப்பரில் பாண்டி ஆடுவது மாதிரியா இருக்கு?'' என்று உற்சாகத்துடன் கேட்க, அவள் தலையை மறுப்பாக அசைத்துப் புன்னகை செய்தாள்.

''இந்த கட்டம் கட்டமா இருப்பதைப் பார்த்தால் ஜாதகம் பார்க்கும் ஜோசியர் மாதிரி இருக்கு'' என்று அவள் கண் சிமிட்ட, அவன் சிரித்தான்.

''முதலில் விளையாடினேன். இப்ப ஜோசியம் பார்க்கிறேன். ஆக மொத்தம் விசாரணை பண்ணலை...''

''விசாரணையா..? இதுவா..? ஒரே நிமிஷம் இருங்க. ஆட்டோவை அனுப்பிட்டு வந்து கேட்கிறேன்'' என்று ஜீப் கதவை திறந்து ஏறி அமர்ந்து, ''நீங்க அப்போ என்ன பண்ணிட்டு இருந்தீங்க என்று இப்போ சொல்லுங்க'' என்று கதை கேட்கத் தயாரானாள்.

''நீங்க என்ன என் மேல் அதிகாரியா? நான் என்ன வேலை செய்தேன் என்று உங்களிடம் ஏன் சொல்ல ணும்?''

''மேல் அதிகாரியிடம் மட்டும் தான் சொல்லணும் என்று அவசியம் இல்லை. சில சமயத்தில் உடன் வேலை செய்பவர்களிடமும், சில சமயத்தில் உங் களுக்கு சம்பந்தம் இல்லாதவர்களிடமும் சொல்லலாம். அது உங்களுக்கே கோணத்தை அறிமுகப்படுத்தும். உங்களுக்குத் தோன்றாத முக்கியமான க்ளூ எனக்குத் தோன்றலாமே?'' என்று அவள் வற்புறுத்த, அவள் சொன்ன கருத்தில் அவனுக்கும் உடன்பாடு வந்தது.

''இது ஒரு பெண்ணின் கொலை வழக்கு சம்பந்தமான விசாரணை. இது அந்த பொண்ணு தங்கி இருந்த

ஹாஸ்டல், இது அந்த பொண்ணு படித்த பாலிடெக்னிக், இது அவள் காதலித்த பையன் படித்த இஞ்சினியரிங் காலேஜ், இது அவன் தங்கி இருந்த வீடு, இது பெண்ணின் உடல் கண்டு பிடித்த இடம், இது அவங்க கடைசியா சேர்ந்து போன ஹோட்டல், இது அந்த பெண்ணின் சொந்த ஊர்...''

''ஒரு நிமிஷம், அந்த பெண்ணோட பாடி, ஏன், அவள் படித்த பாலிடெக்னிக், தங்கி இருந்த ஹாஸ்டல் இரண்டுக்கும் அருகில் இல்லாமல், அந்த பையனின் வீட்டுக்கு அருகில் இருந்தது?''

''அவள் அந்தப் பையனை சந்திக்க வந்திருக்க லாமே?''

''வ..ந்..தி..ரு..க்..க..லா..ம். அந்த பெண்ணோட பாடி கண்டு பிடித்த நேரம் பகலா இரவா?''

''அதிகாலை ஆறு மணி இருக்கலாம். ஏன் அதில் என்ன?''

''அந்த பெண் ப..லா..த்..கா..ர..ம் செய்யப்பட்டதா...''

''அப்படி எதுவும் அடையாளம் இல்லை...''

''ஓகே, அப்ப அவள் அங்கே ஏன் இப்படிச் சென்றாள்? உங்க விசாரணை என்ன சொல்கிறது?''

''ராகினியின் மரணத்திற்கு காதலிப்பது பிடிக்கவில்லை என்று உயர்ந்த நிலையில் இருக்கும் வி.ஐ.பி. பெற்றோர்கள் கொன்று இருக்கலாம்.''

''காதலிப்பது பிடிக்கவில்லை என்றால் சம்பந்தப்பட்ட வர்களை கொலை செய்வாங்களா? இதென்ன காட்டு



மிராண்டித்தனம்?'' என்று ஆத்திரமாகப் பொரிந்த போது கமலக்கண்ணனின் அலைபேசி அழைத்தது.

''ராஜ், மாரியப்பன் பேமிலி டீடைல்ஸ் க்ண்டு பிடிச்சாச்சா?''

''எஸ் சார், அது ராகினியின் அப்பா!'' என்ற ஒற்றை வாக்கியத்தில், ''வாட்?'' என்று கமலக்கண்ணன் அதிர ''ஓகே சார், நான் மாரியப்பன் பாடி டிஸ்போஸ் பண்ண நடவடிக்கை எடுக்கிறேன்'' என்று ராஜ் இணைப்பைத் துண்டித்த பின்பு, அந்த அதிர்ச்சியில் இருந்து மீள கமலக்கண்ணனுக்கு மேலும் சில வினாடிகள் பிடித்தது.



# 10

போன் இணைப்பு துண்டிக்கப்பட்டதை பின் சீட்டில் இருந்த ராதிகா உணர்ந்த போதும், கமலக்கண் ணனின் முகத்தில் தெரிந்த திகைப்பு மறையவில்லை.

''ஏதாவது கெட்ட செய்தியா கண்ணன்?'' என்ற ராதிகாவின் குரல் அவனை இந்த உலகத்திற்கு மீட்டது.

''ம்ம்ம். ஆமா! ஒரு விதத்தில் எதிர்பார்த்தது தான். ஆனாலும் ஊகிக்கும்போது இருப்பதை விட, உண்மை அறியும்போது அதிக தாக்கம் ஏற்படுகிறது'' என்று பெருமூச்சு விட்டான்.

''வேலை சம்பந்தப்பட்ட செய்திக்கு ஏன் இவ்வளவு அப்செட் ஆறீங்க? உங்க டிரைவர் சூடா காபி வைத்துக்

கொண்டு காத்திருக்கிறார். அதைக் குடித்தால், பிரெஷா பீல் பண்ணுவீங்க'' என்று அவள் ஜீப்பிற்கு வெளியே கை காட்டினாள்.

''காபி இரண்டு பேருக்கு இருக்கா மணி? மேடத்திற்கும் கொடுங்க'' என்று சொல்லும் போதே இயல்பிற்கு மீண்டு இருந்தான். ''பிடிக்காத காதலுக்காக கொலை செய்வாங்களா என்று சற்று முன்பு கேட்டாயே! பெண்ணைக் கொன்றதே அதிகப்படி என்றால் அந்த பெண்ணின் தந்தையும் கொலை செய்தார்கள் என்றால் என்ன சொல்வாயோ?''

''இப்படி எல்லாம் கூட நடக்குமா? இவங்களை தட்டிக் கேட்க ஆளே இல்லையா? பெண்ணைத்தான் கொலை செய்தார்கள் என்றால் அவங்க அப்பாவை ஏன் கொலை செய்யணும்? அவர் என்ன பாவம் பண்ணினார்?''

''இந்தப் படத்தைப் பாரு, உடல் கிடைத்த இடம் இது. விஷம் அருந்தியதால் பெண்ணின் மரணம் நிகழ்ந்தது. இந்த இடத்தில் இருந்து பத்து கிலோ மீட்டர் தள்ளி அவளின் தந்தை லாரி விபத்தில் இறந்து இருக்கிறார்...''

''உங்க விசாரணையில் குற்றம் சொல்கிறேன் என்று தப்பா எடுத்துக் கொள்ளா விட்டால் நான் ஒன்று கேட்கலாமா?''

''தாராளமா கேட்கலாம். இந்த மாதிரி விவாதிக்கும் போது தெளிவான பாதை புலப்படும். இங்கே பேசப்படும் விஷயங்களை வெளியே சொல்லாமல் இருந்தால் சரிதான்...''

''நீங்க எவ்வளவு விபரமா, ஒரு பொண்ணு, அவங்க அப்பா, மரணம், விபத்து என்று சாமர்த்தியமா



பேசுறீங்க? இதுல நான் எந்த விஷயத்தை வெளியே எடுத்துட்டுப் போய் யாரிடம் சொல்லப் போகிறேன். அவ்வளவு நம்பிக்கை இல்லாவிட்டால்...''

''ராதிகா. விஷயத்திற்கு வா, நீ ஏதோ ரிசப்ஷனுக்குப் போக கிளம்பி வந்த மாதிரி தெரியுது. அங்கே போகும் உத்தேசம் இருக்கா இல்லையா?''

''நான் ரிசப்ஷன் போகிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''துப்பு துலக்குவதையே வேலையா வைத்து இருக்கும் ஒரு போலீஸ் ஆபீசரால் இதைக் கூட கண்டு பிடிக்க முடியாதா?''

''இந்தக் கதை எல்லாம் என்னிடம் வேண்டாம். நான் மதியம் அந்த நகைக் கடையில் பரிசு வாங்க வந்தபோது சொன்னதை வைத்து ஊகித்தீங்க. எனக்குத் தெரியாதா?''

''ம். இன்று ஒரே நாளில் மூன்றாவது முறையாக மாற்றப்பட்ட உடையும் அதுக்கு சாட்சி.''

''இதெல்லாம் உங்கள் கண்ணில் படாது என்று நினைத்தேனே?''

''போலீஸ்காரன் கண்ணில் இருந்து எதுவும் தப்பாது. தெரியும் என்பதை வெளியே சொல்லாமல் இருக்கலாம்...'' என்றவன் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

''இன்று காலையில் பார்த்தபோது, என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாது, உன் பேர் என்ன? ஊர் என்ன என்று கதை அளந்த மாதிரிதானே?'' என்று கேலியாகக் கேட்டாள் ராதிகா.

''நீ என்ன சொல்ற? உன் பேர் எனக்கு முன்பே தெரிய வாய்ப்பு இருக்கா? நாம் இதற்கு முன்னால் சந்தித்து இருக்கோமா?''

'என்னைப் பற்றி எந்த விபரமும் சொல்லாதே' என்று இவனின் அம்மாவிற்கு உத்தரவு போட்டுவிட்டு இவள் என்ன செய்து கொண்டு இருக்கிறாள்? 'உளறலை நிறுத்து' என்று தனக்குத் தானே கட்டளையிட்டவள் பேச்சை மாற்றினாள்.

''உங்க கேஸ் பற்றிய விஷயம் ரகசியம். அதைப் பற்றி விபரமாகக் காலையில் தான் சந்தித்த உன்னிடம் சொல்ல முடியாது என்பதைச் சொல்ல பேச்சை மாத்துறீங்க! எனக்குத் தோன்றியதைச் சொல்லி விடுகிறேன். நீங்க சொன்ன இரண்டு மரணங்களும் நிகழ்ந்த இடங்கள், நடந்த விதம், நேரம் எல்லாமே வேறு வேறு. இரண்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எப்படி இதுக்கு அடிப்படை காரணம் அந்தப் பெண்ணின் காதல் என்ற முடிவிற்கு வந்தீங்க என்பது தான் என் கேள்வி...''

''நடந்த இடம், விதம் வேறாக இருந்தாலும், நடந்த மரணம் வெளியே தெரியாமல் இருக்க முயற்சி நடந்து இருக்கிறது. முகம் அடையாளம் தெரியாத அளவிற்கு சிதைக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பெண்ணின் மரணம் நிகழ்வதற்கு முன்பு இவர் வேலை செய்த இடத்தில், இரு தரப்பினருக்கும் இடையேயான ஒரு சந்திப்பு, நடந்து இருக்கிறது. அதோடு அந்த கான்பரன்ஸ் ஹால் மற்றவருக்குக் கொடுக்கப்படவில்லை...''

''இருக்கட்டுமே! ஆனால் இரண்டு மரணம் நிகழ என்ன காரணம்? அந்தப் பெண்ணின் மரணம் தற்கொலை என்று வைத்துக் கொண்டால், லாரி



விபத்திற்கு அர்த்தமே இல்லை. கொலை என்றால், அதோடு தொடர்புடைய ஆளையே இன்னொரு கொலை செய்வது லாஜிக் இடிக்கிறது...'' என்று அவள் பேச, கமலக்கண்ணனின் கண்களில் பாராட்டும், இதழ்களில் புன்னகையும் மலர்ந்தது.

''என்ன...! நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா? அப்படியே தப்பா சொல்லி இருந்தாலும் தான் என்ன? கேஸ் சம்பந்தப்பட்ட எல்லா விபரமும் எனக்குத் தெரியாது இல்லையா?''

''கேஸ் முழு விபரமும் தெரியாத போதே இந்த போடு போடுகிறாய். நீ போலீஸ் டிபார்ட்மெண்டில் இருந்து இருந்தால் என்னையே வீட்டுக்கு அனுப்பி இருப்பாய்'' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டவன், ''நீ தப்பா எதுவும் சொல்லலை. இது இரண்டுக்கும் நடுவில் வேறு ஒரு குற்றம் நடந்து இருக்க வேண்டும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பு. அதை நீ சரியாக ஊகிக்கவே ஒரு சந்தோஷம் அவ்வளவுதான்...''

இவளிடம் ஏன் இதை எல்லாம் விவாதிக்க வேண்டும் என்ற கேள்வியை மூளை எழுப்ப முயல, 'மதியம் ராஜிடம் பேசவில்லையா' என்ற பதிலும் தோன்றி மூளையை ஓரம் கட்டி அமர வைத்ததால் விவாதம் தடங்கலின்றி தொடர்ந்தது.

''கடவுளே! நீங்க சொல்வது... பழிக்குப் பழி என்று... அந்த இன்னொரு மரணம்... அது... அந்த பெண்ணைக் காதலித்த பையனா!'' என்று கேட்டவள் முகம் அதிர்ச்சியில் உறைந்தது.

''ஏதோ ஒரு கேசில் நடந்த ஒரு மரணத்திற்கு எதற்கு இவ்வளவு அதிர்ச்சி? காபி குடி. ரிலாக்ஸ்'' என்று அவள்

சொன்னதையே திருப்பிப் படிக்க அவள் புன்னகை செய்தாள்.

''அந்தப் பையன்.. இப்போ இருக்கானா? இல்லை...''

''கடந்த பத்து நாட்களில் அவனைப் பார்த்த மாதிரி தகவல் இல்லை. வீட்டுக்கும் போகலை. காலேஜிற்கும் போகவில்லை. அந்தப் பெண்ணின் ஊருக்கும் போகலை...'' என்று கையில் இருந்த படத்தில் ஒவ்வொரு இடமாக சுட்டிக் காட்டி சொல்ல அதைப் பார்த்தவளின் கண்கள் விரிந்தது.

''எம்.ஜி.ஆர். நகரா? இன்று காலையில் அந்த ஏரியா போகக் கிளம்பினேன். மூன்றாவது குறுக்கு தெருவில் ஒரு வீட்டில் எங்க ஆபீஸ் பில் ஒண்ணு வசூல் பண்ணச் சொன்னாங்க. அந்த பசங்க கலாட்டாவில் நாளைக்குப் போகலாம் என்று திரும்பி வந்துட்டேன்...''

''மூன்றாவது குறுக்கு தெருவா? டோர் நம்பர் என்ன?''

''பதினைந்து. ஏன் கேட்கறீங்க? நீங்க எனக்காக போய் வசூல் பண்ணப் போறீங்களா?''

''என்ன வேலை, எவ்வளவு பில். என்று எனக்கு ஒரு காப்பி கொடுத்தால் வசூல் பண்ணித் தருகிறேன். உனக் காக இதைச் கூடச் செய்ய மாட்டேனா? அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? வேலை செய்கிறேன் என்று வாக்குக் கொடுத்த பின் வேலை பற்றி விபரம் சொல்ல யோசிக்கும் பாஸை இங்கே தான் பார்க்கிறேன்.''

''இதோ இருக்கு பில். இதுல என்ன விபரம் உங் களுக்குத் தெரியணும்?'' என்று அவள் எடுத்து நீட்டிய



பேப்பரை கண்ணால் படம் பிடித்தான். ஒரு கணம் சந்தேக மின்னல் தோன்றி மறைந்தது.

''இங்கே இருந்து கேஸ் பத்தி பேசிக் கொண்டு இருந்தால், ரிசப்ஷன் போகிற ஐடியா இல்லையா?'' என்றவனை வியப்புடன் பார்த்தாள் ராதிகா.

''நீங்க எதுக்கு என்னைக் கழட்டி விடப் பார்க்கறீங்க? எந்த ரிசப்ஷனும் ஆறு மணிக்கு முன்னால் ஆரம்பிக் காது. மணி இப்போ நாலரை. கொஞ்ச நேரம் பேசிட்டு, நீங்க...''

''சார், வேறே வண்டி வந்தாச்சு. நீங்க அதுல கிளம் புங்க. நான் இதை சரி பண்ணிட்டு எடுத்துட்டு வரேன்'' என்று வந்தார் நேசமணி.

''தேங்க்ஸ் மணி...'' என்று சிரித்தவன், ''வந்த ஆட்டோவை அனுப்பியாச்சு. ரிசப்ஷன் எங்கே? என்ன ப்ளான்?'' என்று அவள் புறம் திரும்பி விசாரித்தான்.

''நீங்க எனக்காக பார்க்காதீங்க. ஆபீசில் இருந்து வேன் வைத்து எல்லோரும் போறோம். இங்கிருந்து ஆபீஸ் பக்கம் தான். நான் ஆட்டோ பிடித்துப் போய்க் கொள் வேன். நீங்க கிளம்புங்க'' என்று கீழே இறங்கினாள்.

''நான் இப்போ மதுரவாயல் போகிறேன். உங்க ஆபீஸ் தாண்டி தான் போகணும். இது போலீஸ் வாகனம் இல்லை. ஆபீசில் விடுகிறேன். என் மேல் நம்பிக்கை இருந்தால் வா'' என்று சொல்லிவிட்டு, காரில் ஏறி கதவை மூடும் முன்பே, அவள் அருகே இருந்தாள்.

''மதுரவாயலில் எங்கே போறீங்க?'' என்று ஆரம் பித்து விட்டு, அவன் கண்கள் டிரைவரின் மேல் பதிந்து

திரும்பியதைப் பார்த்து சுதாரித்து, ''ரகசியமா இருந்தால் சொல்ல வேண்டாம். நான் போகிற ரிசப்ஷன் அங்கே பக்கத்தில் திருவேற்காட்டில் நடக்குது. சும்மாதான் கேட்டேன்'' என்று தாழ்ந்த குரலில் சொல்ல அவன் புன்னகைத்தான்.

'சொல்லாமலேயே புரிந்து கொண்டாயே!' என்று சொன்ன அவன் கண்களில் அதுவரை இருந்த ஒரு அந்நியத் தன்மை விலகி, நெருக்கம் தோன்றியது.

''ஆபீசுக்கு வழி சொல்லணுமா? உங்களுக்கு... ஐ மீன் உங்க டிரைவருக்கு வழி தெரியுமா?''

''ஆபீஸ் பேர் தெரியும். நீ வழி சொன்னாலும் சொல்லா விட்டாலும் உன்னைக் கொண்டு போய் ஆபீசில் சேர்த்து விட என்னால் முடியும். எத்தனை மணிக்குக் கிளம்பு வீங்க?''

''அது எதுக்கு உங்களுக்கு?''

''உன்னை விட்டு விட்டு அவர்கள் கிளம்பி விட்டால், உனக்கு திருவேற்காடு வரை லிப்ட் தேவைப்படுமா என்று கேட்க தான்'' என்று மடக்கும் போது போனிற்கு மெயில் வந்து சேர்ந்த மெசேஜ் ஒளிர்ந்தது.

''எக்ஸ்கியூஸ் மீ...'' என்ற வார்த்தையுடன் அவன் போனில் கவனம் செலுத்த, அவன் மெயில் வாசித்து முடித்த போது அவள் இறங்கும் இடம் வந்து இருந்தது.

அவள் இறங்கிய அடுத்த நொடி, ''உனக்கு ஹிந்தி தெரியுமா?'' என்று ஓட்டுனரை விசாரித்து, மறுப்பான பதிலைப் பெற்ற பின், ராஜ்மோஹனை அழைத்தவன் சரளமான ஹிந்தியில் பேச ஆரம்பித்தான்.



''ராஜ், மாரியப்பன் வீட்டுக்குத் தகவல் சொல்லி யாச்சா?''

''ஆற்காடு போலீஸ் ஸ்டேஷன் சொல்லி அங்கிருந்து கூடவே அழைச்சுட்டு வரச் சொல்லி இருக்கேன். ஏதா வது புது நியூஸா சார்? ரொம்ப பரபரப்பா இருக்கிற மாதிரி இருக்கு?''

''ம். இரண்டு செய்தி ராஜ். ஒன்று ராகுலின் வீட்டில் பதினெட்டாம் தேதி, சிவில் வொர்க் பண்ணியதா இருபதாயிரம் ரூபாய்க்கு ஒரு பில் பார்த்தேன். இரண் டாவது, ராகினி தன் அம்மாவிற்கு எழுதிய கடிதத்தில் நிதி அமைச்சர் தான் ராகுலின் அப்பா என்ற தகவலை அவருடைய பி.ஏ. சொன்னதாகவும், மறுநாள் அவரைச் சந்திக்கும்போது இதைப் பற்றி விசாரிக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறாள்...''

''கார்ப்பெட் தான் பதுசா வந்ததா ராகுலின் அம்மா சொன்னாங்க. அதில் இருந்து ஹோட்டல் தொடர்பு கண்டு பிடித்தோம். வேறே எதுவும் நினைவில்லையே? மை காட்! ராகுல் அங்கே...''

''எஸ் ராஜ், அந்த கார்ப்பெட் அடியில் கிடைக்கலாம் என்பது என் சந்தேகம். நான் அங்கே தான் போய் கொண்டு இருக்கிறேன். நீங்க ஒரு சிவில் சர்ஜனோடு அங்கே சீக்கிரம் வாங்க. ஸ்பாட் போஸ்ட் மார்ட்டம் பண்ண வேண்டி இருக்கலாம்.''

''சார், டாக்டர் அப்புறமா சொல்லலாமே...''

''இல்லை ராஜ், எனக்கு நிச்சயமா தெரியும். ராகினி அவங்க அம்மாவுக்கு ஒரு லெட்டர் எழுதியதா சொன் னீங்க இல்லையா? அதோட காப்பியை ஸ்கேன் பண்ணி

ரியாஸ் அனுப்பி இருக்கான். அதை வச்சுச் சொல்றேன். டாக்டரோடு அரை மணி நேரத்தில வாங்க'' என்றவன் குரலில் இந்த கேஸ் முடிவிற்கு வந்து விட்டது என்ற நம்பிக்கை இருந்தது.



# 11

கமலக்கண்ணன் தொலைபேசியில் தகவல் சொன்ன அடுத்த அரை மணி நேரத்தில், அரசு மருத்துவர் குழுவோடு, ராஜ் ராகுலின் வீட்டை அடைந்த போது அங்கே ஏற்கனவே அந்த பகுதிக்கான காவல் துறையினர் மோப்ப நாயோடு வந்து சேர்ந்து இருக்க, ஒரு புறம் வேலையாட்கள் நடு ஹாலைத் தோண்டிக் கொண்டு இருக்க, மறு பக்கம் வளர்மதி, கோபத்துடன் கத்திக் கொண்டு இருக்க, அந்த இடம் பரபரப்பாக இருந்தது.

''நீங்க இவ்வளவு சீக்கிரம், இவ்வளவு உறுதியா இப்படி வீட்டைத் தோண்டும் அளவுக்குச் செல்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ராகினி எழுதிய கடிதத்தில் அப்படி என்ன சார் இருந்தது?'' என்று வேகமாக உள்ளே வந்து விசாரித்தான் ராஜ்.

''கடிதத்தில் என்ன க்ளூ என்பது இருக்கட்டும். எப்படி இருந்த இடத்தை நாம் மோப்ப நாய் கொண்டு சோதனை செய்ய மறந்தோம்?'' என்றவன் குரலில் எரிச்சல் இருந்தது.

''இங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தள்ளி ராகினியின் உடல் கிடைத்தது. அங்கே மோப்ப நாய்களைப்





பயன்படுத்தினோம். நாய்கள் அப்போது இந்தப் பக்கம் வரவில்லை. ராகினியின் உடலைக் கொண்டு வந்து போட்ட பாதை என்ற ரீதியில் கார் டயர் மார்க் வைத்து ஆவடி ரோட்டில் கொஞ்ச தூரமும் சென்றது. இங்கே வரவில்லையே? அதனால் இங்கே சோதனை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. வெறும் வாய் வழியாக விசாரணை மேற்கொள்ள எவ்வளவு சிரமப்பட்டோம் என்று உங்களுக்கே தெரியுமே சார்...'' என்ற ராஜின் குரலில் விளக்கம் மட்டும் இல்லாமல், அது தேவை இல்லை என்ற உறுதியும் இருந்தது.

''மாரியப்பன் பாடி டிஸ்போஸ் பண்ண என்ன ஏற்பாடு பண்ணி இருக்கீங்க?''

''அடையாளம் காட்டும் உறவினர்கள் வந்த உடனே பாடியைக் கொடுக்கவும், அதை வேலூரில் சொந்த ஊருக்குக் கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் வசதியும் ஏற்பாடு பண்ணியாச்சு. சா.....ர்! அங்கே பாருங்க...'' என்று கை நீட்டிய திசையில் பணியாட்கள் ஒரு இருபத்தி ஐந்து வயது மதிக்கத் தக்க உடலை தோண்டித் தூக்கி வெளியே கிடத்திக் கொண்டு இருந்தனர்.

''இந்த மனுஷன் ஏன் இப்படிப் போன் எடுக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறாரு? அந்த மனுஷன் தான் கட்சிகாரங்க, ஆபீசர் என்று அல்லாடினாலும், கூடவே இருந்து பிரியாணியும் குவார்ட்டருமா கொட்டிக் கிடுற காக்கா கூட்டத்துக்கு என்ன ஆச்சு? அவங்களும் போனை எடுக்க மாட்டாங்களா?''

''போலீஸ் பதவியில் இருக்கோம் என்ற தெனாவட்டா உங்களுக்கு? ரொம்ப ஆடாதீங்க! பொழுது

விடியும் போது ஒருத்தரும் வேலையில் இருக்க முடியாது. ஞாபகம் வச்சுக்கோங்க. காக்கி சட்டையைக் கழட்டி வைத்து வீட்டுக்கு போக வேண்டியதுதான். ஒருத்தர் கூட திரும்ப சர்வீசுக்கே வர முடியாமல் உங்க பெண்டாட்டி பிள்ளைகள் சோறு தண்ணி இல்லாமல் திண்டாட வைக்கலை என்றால் என் பேரை மாத்திக் கிறேன்...'' என்ற ரீதியில் ஆவேசமாக அங்கிருந்த காவல் துறை பணியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மூச்சு விடாமல் சாபம் கொடுத்துக் கொண்டு இருந்த வளர் மதியின் பேச்சு, தோண்டிய பள்ளத்தில் இருந்த உடலைத் தூக்க முயன்ற வினாடி அடியோடு நின்றது.

அடுத்த வினாடி வேகமாக ஓடி வந்து அந்த உடலின் அருகே சரிந்து புலம்ப ஆரம்பித்தார்.

''அட பாவி! நான் பெத்த ரத்தினத்தை இப்படி பூமிக்கு அடியில புதைச்சு வைக்கவா பிறந்தேன்? என் வாழ்க்கை வீணாப் போய் விட்டது என்றாலும் என் பிள்ளைக்காவது ஒரு நல்ல வாழ்க்கை அவன் ஆசைப் பட்ட மாதிரி அமைச்சுக் கொடுக்கணும் என்று தானே உன் வாசல் தேடி வந்து நின்னு அவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டேன்?

அன்னிக்கே முடியாது என்று சொல்லி இருந்தால் நானும் என் பையனும் எங்கேயாவது அந்தப் பிள் ளையைக் கூட்டிட்டு கண் காணாத தேசம் போய் உசுரோடவாவது இருந்து இருப்போமே? சாக்கரை மாதிரி பேசி, என்னை அந்தப் பக்கம் பொண்ணு வீட்டுக்குப் பேச அனுப்பிட்டு பெண்ணைத்தான் போட்டுத் தள்ளி விட்டாய் என்று பார்த்தால் இப்போ என் பிள்ளையைக் கொல்ல உனக்கு எப்படி மனசு வந்தது?



அவன் கேட்டதெல்லாம் நீங்கதான் அப்பா என்று வெளி உலகத்துக்கு இல்லாவிட்டாலும் அவனிடமாவது நேரே ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்பது தானே? அதைக் கூட கடைசி வரை சொல்லாமலே சாதித்து நீ போகும் போது என்ன அள்ளிட்டுப் போகப் போற? என் பிள்ளையை இப்படி அல்ப ஆயுசுல அனுப் பிட்டு நான் இன்னும் உசுரோட இருக்கேனே? ஆற்ற மாட்டாமல் புலம்பிய வளர்மதியின் குரல் கல்லையும் கரைய வைக்கும் என்றால் காக்கி சட்டை அணிந்தவர் களையும் லேசாக அசைத்துப் பார்த்தது.

கண் ஓரம் கசிந்த நீரைத் துடைத்துக் கொண்ட பெண் காவலர் அருகில் அமர்ந்து குடிக்க நீர் கொடுத்து, ஓரளவிற்கு நிதானப்படுத்தி, கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும் அளவிற்குக் கொண்டு வந்து கமலக்கண்ண னின் அருகில் அமர வைத்தனர்.

''உங்க பையனை இப்படி உங்க வீட்டுலேயே பிணமா தோண்டி எடுப்போம் என்று எதிர்பார்க்கவில்லை. இனியாவது உங்களுக்குத் தெரிஞ்ச விஷயத்தை மறைக் காமல் சொல்லுங்க...'' என்று தன்மையாக விசாரணையை ஆரம்பித்தான். காலையில் இருந்த அதிகாரத் தோர ணையோ, மிரட்டலோ, இல்லை.

''துள்ளத் துடிக்க படிக்கிற பிள்ளையை இப்படிப் பறி கொடுத்துட்டு நிக்கிறேனே? இனிமேல் நீங்க என்ன பண்ணி என்ன பிரயோஜனம்?''

''உங்க பிள்ளை இப்படி ஆனதுக்கு யார் காரணம் என்று பார்த்து அவங்களுக்கு உரிய தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டாமா? உங்க பிள்ளை மட்டுமில்லை.

அவனை விட சின்னப் பொண்ணு. உங்க பையனைக் காதலித்த குற்றத்திற்காக உயிரை இழந்து நிக்குது. இந்த ஒரே கேசில் மூன்று கொலைகள் இதுவரைக்கும் நடந்து இருக்கு. இதுல உங்க வீட்டுல இருக்கவங்க பங்கு என்ன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டாமா?''

''அல்ப ஆயுசுல ஒண்ணுக்கு ரெண்டா உசுரு போயாச்சு. எனக்குத் தெரிஞ்சது எல்லாம் சொல்றேன். இனிமேல் நான் யாருக்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. கேளுங்க...'' என்று உறுதியான குரலில் சொன்ன வளர் மதி, புடவை முந்தானையால் முகத்தையும் அழுந்தத் துடைத்துக் கொள்ள, அதுவரை வடிந்த கண்ணீரும் நின்றது.

அவனின் ஒரு ஜாடையில் பேச்சினை பதிவு பண்ண டேப் ரெகார்டருடன் வந்து நின்ற ராஜினை அருகில் அமரச் சொல்லி விட்டு வளர்மதியிடம் விசாரணையைத் துவக்கினான்.

''ராகுலை கடைசியா எங்கே எப்போ பார்த்தீங்க? மறைக்காமல் சொல்லுங்க...''

''மறைக்க ஒண்ணும் இல்லை. ஏற்கனவே சொன்னது தான். பதினேழாம் தேதி காலையில் நான் ராகுல், ராகினி மூன்று பேரும் அந்த ஹோட்டலுக்குப் போனோம்...'' என்றவர் கண்ணில் கண்ணீர் சுரந்தது.

''அங்கே எவ்வளவு நேரம் இருந்தீங்க? யாரைப் பார்த்தீங்க? என்ன நடந்தது?''

''ராகுல் அப்பாவைப் பார்க்கப் போனேன். அங்கே நான் ஒரு மணி நேரம் இருந்தேன். அப்புறம் என்னை



வேலூருக்கு அந்த பொண்ணு வீட்டுல போய் சம்பந்தம் பேசி முடிச்சுட்டு வா, என்று அனுப்பி வைத்தார்...''

''ராகுல் அப்பா யார்?''

''நான் சொல்வதை நீங்க நம்புவீங்களா என்று எனக்குத் தெரியாது. இது வெளியே தெரிஞ்சா, என்னுடைய நடத்தை பற்றி கேவலமா பேச வாய்ப்பு இருக்கு. இதுநாள் வரைக்கும் என் பையனோட ஆசை, கௌரவம், மரியாதை என்று பார்த்தேன். இனிமேல் எனக்கு எதைப் பற்றியும் கவலை இல்லை. நிதி மந்திரி மகாதேவன்தான் அவனோட அப்பா...'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

''நீங்க வேலூருக்கு தனியா போனீங்களா? கூட துணைக்கு யாராவது வந்தாங்களா?''

''எப்பவும் நான் கால் டாக்சியில் செல்வதுதான் வழக்கம். தனியா தான் போனேன். ராகுலும் ராகினியும் அவங்கவங்க காலேஜுக்குப் போக போறதா சொன்னதால் நான் ஹோட்டலில் இருந்து பத்து மணிக்குக் கிளம்பிட்டேன். அன்று இரவு அங்கிருந்து, திருப்பதி போயிட்டு வா என்று சொன்னதால் அங்கேயே போய் சாமி தரிசனம் முடித்து விட்டு, ஒரு நாள் விட்டு மறுநாள் மாலை மூணு மணிக்கு இங்கே வந்து சேர்ந்தேன்...''

''திருப்பதிக்கு போ என்று சொன்னது யார்?''

''ராகுல் அப்பா சொன்னதா அவரோட அசிஸ்டெண்ட் கதிரவன் சொன்னார். இதுக்கு முன்னாடி நான் நிறைய முறை சொல்லி இருக்கேன். அதனால சொல்றார் என்று நினைத்துப் போனேன். ஆனால் இங்கே... என் வீட்டில்... என் பிள்ளையை ஊருக்குத் தெரியாமல் புதைக்க என்று

தெரிந்து இருந்தால்...'' என்று திணறியவருக்கு விசும்பலும் கண்ணீரும் கட்டுக்கடங்காமல் பெருகி வந்தது.

''இரண்டு நாள் இரவு நீங்க இங்கே இல்லை. சரியா?''

''வியாழக்கிழமை மதியம் நகை கடைக்குப் போய் மோதிரம் எடுத்துட்டு வந்தேன். வெள்ளி காலை ஹோட்டலுக்கு போயிட்டு, வேலூர் போனேன். அங்கிருந்து திருப்பதி போயிட்டு ஞாயிறு மதியம் வந்து சேர்ந்தேன். ஞாயிறு மதிய சாப்பாட்டுக்கு ஹாஸ்டலில் இருந்து ராகுல் வருவான். அதனால் அன்று காலையில் இருந்து அவனுக்கு போன் பண்ணித் தகவல் சொல்ல முயற்சி பண்ணினேன். போன் எடுக்கலை. அதுக்குக் காரணம் இப்படி இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையே?''

''நகை கடைக்கும் மூன்று பேரும் தான் போனீங்களா?''

''எங்க மூன்று பேருடன் கதிரவனைக் கூட அனுப்பி இருந்தார். இதை எல்லாம் பார்த்து நம்பிதானே என் பிள்ளைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய அவரும் சாதகமா இருக்கார் என்று எண்ணி ஏமாந்து போனேன்...''

''கண்ட்ரோல் பண்ணிக்கோங்கம்மா. இதுக்கு முன்னாடி அவர் உங்களோட நேரில் எங்கேயாவது வந்து இருக்காரா?''

''ம்ஹூம்! அவர் இந்த இருபத்தி ஏழு வருஷத்தில என்னோட தனியா எங்கேயுமே வந்ததில்லை. நான் அவர் சொல்ற இடத்துக்குப் போய் பார்ப்பேன். கடையில் பொருள் வாங்க கூட அனுப்புவார். அந்த மோதிரத்தை என் பிள்ளை எவ்வளவு ஆசை ஆசையா வாங்கினான். வாழ்நாள் முழுக்க போட்டு இருப்போம் என்று எத்தனை கனவு கண்டு இருக்கும் அந்த சின்னஞ் சிறுசுங்க...'' என்று கண்களைத் துடைத்துக் கொள்ள, மேற்கொண்டு விசாரணையைத் தொடர கமலக்கண்ணனுக்கே ஒரு மாதிரி இருந்தது.

இன்று மகனின் உடலைக் கண்ட வினாடியில், பொங்கி எழும் ஆத்திரத்தில் உண்மையை சொல்லத் தயாராக இருக்கும் இந்த அம்மாவை இப்போது விட்டு விட்டால், இரண்டு தினங்கள் கழித்து இதே வாக்கு மூலத்தைச் சொல்வாரா? மனசு மாற வைத்து விடுவார்களா என்று சொல்ல முடியாது என்று மனதைக் கடினப் படுத்திக் கொண்டு விசாரணையை தொடர்ந்தான்.

''உங்களை அவர் எப்படி தொடர்பு கொள்வார்? அவருடைய எண்ணிலா? நீங்க அவருடன் எப்படிப் பேசுவீங்க?''

''அவர் பேசுவது என்றாலும், நான் பேசுவது என்றாலும், கதிரவன் மொபைல் போன் மூலமா பேசுவோம்.''

''ஹோட்டலில் என்ன நடந்தது? எதுக்காக வீட்டுக்கோ ஆபீசுக்கோ போகாமல் பொது இடத்துக்குப் போய் சண்டை போட்டீங்க?''

''நானா சண்டை போட்டேன்? அந்த சின்ன பொண்ணு தான் ஒரு வார்த்தை சொல்லுச்சு. அதுவும் இவன் பொழுதுக்கும் என்னிடம் சொல்லிட்டே இருந்ததை தான் கேட்டுச்சு. அது ஒரு தப்பா? அப்படியே தப்பா

இருந்தாலும், பதிலுக்குப் பதில் பேசி இருக்கலாம். ரெண்டு அடி அடிச்சு இருக்கலாம். அதுக்காக ஒரு வாழ வந்த குருத்தை பலி கொடுக்கலாமா? இந்தப் பாவம் ஏழேழு ஜென்மத்துக்கும் தொடராதா? அப்படி என்ன பெருசா கேட்டாள்? எங்க கல்யாண பத்திரிகையில் உங்க பேரைப் போடணும். முடியுமா அப்படின்னு எடுத்த எடுப்பில தேங்காய் உடைச்ச மாதிரி பளிச்சுன்னு கேட்டுச்சு...''

''சுற்றிலும் ஆட்கள் இருந்தாங்களா?''

''நெருக்கத்துல யாரும் இல்லை. ஆனால் பத்திரிகை காரங்க, கட்சிக்காரங்க என்று அங்கங்கே ஆட்கள் இருந்தாங்க. அதான் மனுசனுக்கு ரோஷம் வந்துடுச்சு போல...''

''இதுக்கு முன்னாடி, ராகினி உங்களிடம் இதைப் பற்றி பேசி இருந்தாங்களா?''

''இல்லை, அப்படி இருந்தால் தான் அவளைப் பேச விடாமல் செஞ்சு இருப்பேனே! அங்கே கூட்டிட்டுப் போய் இருக்க மாட்டேனே! பாவி மக வாய்க்கு வந்ததைக் கேட்டு இப்படி வாழ வேண்டிய வயசுல கேட்க நாதி இல்லாமல் வானம் பாக்க போயிட்டாளே! நான் அந்த அம்மாவுக்கு என்ன சொல்வேன்? யாரை கேட்பேன்?''

''திடீர்னு அப்படி எப்படி கேட்க முடியும்? ஒரு வேளை ராகுல் சொல்லி...''

''ராகுல் சொல்லி இருக்கவே மாட்டான். அவன் ரோஷக்காரன். என்னிடம் கோபத்தில் சொல்வானே தவிர அவரை முகத்துக்கு நேரா நிமிர்ந்து பார்த்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டானே? எனக்காக வாயை மூடிட்டு வருவான். ஒரு வார்த்தை பேசாமல் கிளம்பி விடுவான். அதனால் தானே இங்கிருந்து காலேஜ் நாலு கிலோ



மீட்டர் தூரத்தில் இருக்கும்போதும் வீட்டில் தங்காமல் ஹாஸ்டலில் தங்கிப் படித்தான். அதுவும் அவன் செலவுக்கு அவனே சம்பாதிப்பானே?''

''அவரே சம்பாதிப்பார் என்றால் எப்படி...?''

''ஏற்கனவே எலெக்ட்ரிக் வேலை பார்த்துட்டு இருந்தவன். அங்கே நகைக் கடையில் கூட மோதிரத்துக்கு நான் பணம் கொடுக்கிறேன் என்று சொன்னவன். அப்பா கூட அந்த பொண்ணு தான் பெரியவங்களை நாளைக்கு பார்க்கப் போறோம். பதிலுக்கு பதில் பேசாமல் இருங்க என்று அடக்கினாளே? அதுக்கு அப்புறம் எப்படி இப்படி ஒரு கேள்வி கேட்டாள் என்று தெரியலையே? நான் யாரைக் குற்றம் சொல்வேன்? எல்லாம் என் தலை எழுத்து...''

''ராகினிக்கு இந்த உண்மை வேறே யாராவது சொல்வது என்றால் யார் சொல்லி இருக்கக் கூடும் என்று உங்களுக்கு சந்தேகம் இருக்கா?''

''எங்களுக்கும் அவருக்கும் இருக்கும் தொடர்பு பற்றி தெரிந்த ஆள் என்றால் அவங்க பி.ஏ. கதிரவன்தான். வேறே யாருக்கும் விஷயமே தெரியாதே?''

ஓ! என்று ஆச்சரியமாக விழி விரித்தவன், ''எங்கே வைத்து அவரைப் பார்க்கப் போகிறோம் என்று ராகினிக்கு முன்பே தெரியுமா?'' என்று மேலும் துருவினான்.

''எனக்கேத் தெரியாதே? அப்புறம் எப்படி அவளுக்குத் தெரியும்? மறுநாள் நிகழ்ச்சி எல்லாம் முதல் நாள் ராத்திரி ஏழு மணிக்கு அவரும் பி.ஏ.வும் முடிவு பண்ணுவாங்க. அதுக்கப்புறம் பத்து மணிக்கு மேலே தான் எனக்கு போன் பண்ணிச் சொன்னாங்க. நான் காலையில் ராகுலுக்கு போன் பண்ணிச் சொன்னேன். அவன் அவ

ளிடம் சொன்னாளா இல்லையா என்று எனக்குத் தெரியாது. நான் சொல்லவில்லை...''

''ஒருவேளை அந்த ஹோட்டலில் ராகினி எதிர்பாராமல் யாரையாவது சந்தித்து... ஏதாவது நிர்பந்தத்தால்... அப்படி கேட்டு இருக்கலாமோ?''

''நான் இந்த மாதிரி யோசிக்கவே இல்லை. அந்த பெண் அப்படிக் கேட்டபோது கூட அதை பத்திரிகை அடிக்கும்போது பார்த்துக் கொள்கிறேன். நீ படிப்பை முடிக்கும் வேலையைப் பாரு என்று சொன்னாரே? அப்போ ஜூஸ் கொண்டு வந்து சர்வர், ஜூஸ் ட்ரேயைப் போட்டு உடைத்தபோது கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. பார்த்து க்ளீன் பண்ணுப்பா. கையில் கண்ணாடி குத்திடப் போகுது என்று தானே சொன்னார். அந்த ஜூஸ் சிந்திய கார்ப்பெட் கூட ஹோட்டலுக்குள் இருக்க வேண்டாம் என்று உடனேயே ராகவா எம்போரியத்தில் ஆர்டர் கொடுத்து ஐம்பதாயிரம் செலவு பண்ணி மூன்றே நாளில் இன்னொரு புது கார்ப்பெட் வாங்கித் தந்தவராச்சே!...''

''அந்த ஜூஸ் ட்ரே கீழே தவறியதற்குக் காரணம் அந்த சர்வரா இல்லை ராகினியா என்று உங்களால் சொல்ல முடியுமா?''

''இதை ஏன் கேட்கறீங்க? அது அவ்வளவு முக்கியமான விஷயமா?''

''அந்த சர்வர் இப்ப உயிரோடு இல்லை. அவர் ராகினியின் அப்பா என்றால் இந்த விஷயம் முக்கியமா?'' என்று கேட்ட கமலக்கண்ணனுக்கு பதில் சொல்ல வாய் இன்றி அதிர்ந்து நின்றார் வளர்மதி.





# 12

ராகினியின் அப்பா அந்த சர்வர், அவர் இப்போது உயிரோடு இல்லை என்ற செய்தி வளர்மதியை அதிர வைத்தது. ராகுலிடம் விசாரித்தபோது, அவர் சர்வராக இருப்பது மாதிரி சொல்லவில்லையே? ஹார்ட்வேர் ஸ்டோர்ஸில் வேலை செய்வதாகச் சொன்னார்கள். அவர் வீட்டில் இந்த விஷயத்தைச் சொல்லவில்லையா?

''என்னம்மா அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியா இருக்கா? இன்னும் சில அதிர்ச்சிகளுக்கு உங்களைத் தயார் படுத்திக்கோங்க. இந்த கொலைகளை எல்லாம் செய்தது...'' என்று ஆரம்பித்த கமலக்கண்ணன், மொபைலில், 'நிதி மந்திரி திடீர் ராஜினாமா' என்ற கண்ட்ரோல் ரூமில் இருந்து செய்து அனுப்பி இருக்க அவன் வியப்படைந்தான்.

அவன் சில அடி தூரம் நகர, பின்னாலேயே ராஜும் எழுந்து வந்தான். ''சார், எப்.எம். இப்ப ரிசைன் பண்ணிட்டதா நியூஸ் பார்த்தேன். இன்னும் காவல் துறைக்கு அறிக்கை அனுப்பவில்லை. இந்த வீட்டுக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கு என்பதை நிரூபிக்கவே சிரமப்பட வேண்டும். இதில்...'' என்று வியப்புடன் இழுத்தான் ராஜ்மோகன்.

''நானும் இதை எதிர்பார்க்கவில்லை. கொலைகளில் அவருக்கு தொடர்பு இருப்பதை நம்ப வைக்க தலை கீழா

நின்று தண்ணி குடிக்க வேண்டும். அப்படி இருக்கையில் இவர் ஏன் **ராஜினாமா** செய்ய வேண்டும்? அரசியலில் நெருக்கடி...''

''இல்லை சார், **அரசியல்** எதிரிகளால் அவருக்கு நெருக்கடி என்று சொல்ல முடியாது. பொது வாழ்வில் கறை படியாத கரங்களுக்கு சொந்தமானவர் என்று அவருக்கு பேர்...''

''ம். நான் கூட முதலில் இந்த குற்ற வழக்கில் அவருக்குத் தொடர்பு இருக்கும் என்பதை நம்பினேன் ராஜ். ஆனால் இப்போ எனக்கே சந்தேகம் வந்துடுச்சு. எல்லா விசாரணை பாதைகளும் ஒரே ஒரு ஆளிடமே சென்று முடிகிறது. அது அவருடைய பீ.ஏ...''

''சார் எந்த நிமிஷமும் அவர் இங்கே வருவதற்கு சான்ஸ் இருக்கு. அதனால் அவங்களிடம் சீக்கிரம் விசாரணை முடிச்சுடலாம்...''

''எனக்கென்னவோ இவங்களுக்கு இதுக்கு மேலே எதுவும் தெரியும் என்று தோணலை ராஜ். அமைச்சர் பேரையே மிஸ்யூஸ் பண்ணி இருப்பாங்களோ என்பது தான் இப்போ என் சந்தேகம். நீங்க ரியாஸ் மாரியப்பன் பாடியை அடையாளம் காட்டி எடுக்க அவங்க உறவினர்களோடு ஜி.ஹெச். வந்துட்டாரா என்று பார்த்துடுங்க...'' என்று அவனை அனுப்பி விட்டு கையில் டேப்ரிகார்டருடன் மீண்டும் வளர்மதியின் அருகில் வந்தான்.

''ராகினி அப்பா அம்மா பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்று சொல்றீங்களா?''

''அவங்க அம்மா வீட்டுல தான் இருக்காங்க. பெண்ணைப் படிக்க வைக்க நிறைய சம்பாதிக்கணும் என்று அவங்க அப்பா சென்னைக்கு வந்ததாகவும் ஹார்ட்வேர் கடையில் வேலை செய்வதா சொன்னாங்க. அப்படி ராகுல் சொன்னது உண்மையா பொய்யா என்று சொல்ல வர முடியாத இடத்துக்குப் போயிட்டானே?''

''ஒரே ஒரு கேள்வி. ராகினி ஹோட்டலுக்கு உங்களோடு வருவதற்கு முன்னால் அவங்க அம்மாவுக்கு லெட்டர் எழுதி இருந்தாங்க. அதுல அமைச்சரைப் பற்றி எழுதி இருக்காங்க. அவங்களுக்கு ராகுலோட அப்பா யார் என்பது அதற்கு முன்னாடியே தெரியுமா?''

''அவங்க அப்பா யார் என்ற விஷயத்தை நாங்க வெளியில் சொல்வதே இல்லை...''

''பின்னே எப்படி அவங்களுக்குத் தெரியும்? ஒரு வேளை ராகுல் சொல்லி இருக்கலாமோ?''

''இல்லை நிச்சயமா இல்லை. அவரா மனசு வந்து இவன்தான் என் பையன் என்று சொல்லும் வரைக்கும் நானா சொல்ல மாட்டேன் என்பதுதான் அவனுடைய நிலை. கடைசி வரை அவன் மாத்திக்கவே இல்லை. ஹோட்டலுக்குப் போவதற்குக் கூட முக்கியமான ஆளைப் பார்க்கணும் என்று சொல்லி அழைத்துப் போனான். அவன் நிச்சயம் சொல்லி இருக்க மாட்டான்...'' என்று அழுகையும் ஆத்திரமும் பொங்க அவர் சொன்னபோது வாசலில் நின்ற காரில் இருந்து இறங்கி உள்ளே வந்த முன்னாள் நிதி அமைச்சரைக் கண்டதும் அங்கே மயான அமைதி நிலவியது.

வாசலில் நின்ற காரில் இருந்து இறங்கி உள்ளே வந்த மகாதேவனைப் பார்த்த உடனே மயான அமைதி ஒரு

கணம் நிலவினாலும், அடுத்த கணமே மீண்ட வளர்மதி, பாய்ந்து சென்று அவரின் சட்டையைப் பற்றி உலுக்கி புலம்ப ஆரம்பித்தார்.

''இப்பதான் இந்த வீட்டுக்கு வர வழி தெரிஞ்சதா? அவன் உயிரோடு இருக்கும்போது வந்து ரெண்டு வார்த்தை பேச மனசு வரலை. இப்ப அவனுக்கு வாய்க் கரிசி போட வந்துட்டீங்க? உங்களுக்கு நான் என்ன குறை வைத்தேன்? ராகுல் என்ன பாவம் பண்ணினான்? உங்க பொது வாழ்க்கை, பதவி, பண பலம்தான் முக்கியம் என்று எங்களை தள்ளி வச்சீங்க...''

''ஷ்! வளர்மதி அப்படி எல்லாம் இல்லை. உன்னைத் தள்ளி வைக்கணும் என்று நினைத்து இருந்தால் இப்போ ஏன் வரணும்?'' என்று மகாதேவன் இடையிட முயன்றதற்கு அவரிடம் எந்தப் பலனும் இல்லை.

''அதைக்கூட நாங்க குறையா சொல்லவில்லையே? ஏதோ ஒரு மூலையில் தனி வீட்டில் அவனா வேலை செஞ்சு கொண்டு வரும் நாலு காசை வச்சு நல்லா தானே இருந்தோம். என் பையனை கொன்று இந்த வீட்டிலேயே குழி தோண்டி புதைக்க உங்களுக்கு எண்ணம் வரும் அளவுக்கு நாங்க என்ன பாவம் பண்ணினோம்?...''

''வளர்மதி! எனக்காக இத்தனை வருஷம் அமைதியா இருந்தாய். இப்ப ஒரே ஒரு நிமிஷம் அமைதியா இருக்கியா?'' என்ற மகாதேவன், அவரின் கணகளைத் துடைத்து விட்டார்.

''இத்தனை நாள் அமைதியா இருந்ததுக்கு தான் பெரிசா பரிசு கொடுத்துட்டீங்களே?''



''எத்தனையோ பேர் என்னென்னவோ சொல்லி இருந்தால் கூட நான் வருத்தப்பட்டு இருக்க மாட்டேன். ஆனால் நீ சொல்லும் இந்த ஒரு வார்த்தை... ப்ச்! சரி! விடு. என்னிடம் எத்தனையோ குறைகள் இருக்கலாம். ஆனால் நான் ஒரு கொலை செய்து இருப்பேன் என்று நீ சொல்லலாமா? அதுவும் ராகுலை...'' என்று பாதியில் நிறுத்தியவர், அவரை தோளோடு சேர்த்து அணைத்தாற் போல ராகுலின் சடலம் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று மண்டியிட்டார்.

''ராகுல்! நீ உயிரோடு இருந்த போது சொல்லாமல் இப்போ வந்து சொல்றேன். என்னை மன்னிச்சுடு. உன்னை மாதிரி ஒரு மகனைப் பெற்றதற்கு பெருமைப் பட விடாமல் இப்படி அல்ப ஆயுசில் சென்று விட்டாயே? இது என்னை தண்டிக்க வேண்டும் என்று இறைவன் செய்ததா? ஆனால் இந்த தண்டனை உங்க அம்மாவையும் பாதிக்கும் என்பதை அவன் மறந்து விட்டானே? நீ எனக்குக் கொள்ளி போடுவாய் என்று நினைத்தேன். ஆனால் இப்போ...'' என்று கண் கலங்கச் சொல்லி விட்டு நகர்ந்து கமலக்கண்ணனிடம் வந்தார்.

''நீங்கதான் இந்த கேஸ் விசாரிக்கும் போலீஸ் ஆபீசரா? உங்க விசாரணைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறேன் சார். இதுநாள் வரை நான் அமைச்சர் என்பதால் உங்களால் என்னை நெருங்க முடியாமல் இருந்து இருக்கலாம். இப்ப நானும் தமிழ்நாட்டில் இருக்கும் ஏழு கோடி மக்களில் சாதாரணமான ஒருவன். கைது செய்ய நீங்க எங்கேயும் அனுமதி வாங்கத் தேவை இல்லை'' என்று கைகளை நீட்டினார்.

''நீங்களே முன் வந்து இந்த மாதிரி உறுதி கொடுத்ததில் எனக்கு திருப்தி சார். விசாரணை முடியப் போகும் நேரத்தில் சந்தேகத்தின் அடிப்படையில் உங்களை கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீங்க வெளியூர் போகாமல் அடுத்த பதினைந்து நாட்கள் சென்னையிலேயே இருந்தால் போதும். இப்ப உங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமா?'' என்று மரியாதையாகவே சொன்னான் கமலக்கண்ணன்.

நிதி அமைச்சர் உறவுகளையும் சம்பிரதாயங்களையும் மதிப்பவர் என்பது மட்டும் இல்லாமல் தார்மீக ரீதியாகவும் அவர் சில முடிவுகளை எடுத்துள்ளார் என்பது அவரைப் பற்றிய அவனின் கணிப்பை திருத்தி இருந்தது.

''அந்த அறைக்குப் போகலாம் வாங்க சார்...'' என்று கை காட்டி அழைத்துச் சென்றவரை, கமலக்கண்ணன், ராஜமோகன் மற்றும் வளர்மதி பின் தொடர்ந்தனர்.

''நீங்க திடீர் என்று ராஜினாமா செய்ததற்கும் இந்த கொலைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா சார்'' என்று முதல் கேள்வியை முன் வைத்தான்.

''நிச்சயம் இருக்கு. என் வீட்டில் என் மகனின் சடலம் பூமிக்கு அடியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டதாக தகவல் வந்த பிறகு நான் எப்படி சும்மா இருக்க முடியும்? எதிர்கட்சிகள் எதையாவது சொல்வதற்கு முன் நானே கௌரவமாக விலக முன் வந்தேன். ஆனால் இந்த கொலைகளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நிரூபித்த பின்பு...''

''உங்க வீட்டில்... உங்க மகனின்... இந்த வார்த்தைகள் எல்லாம் வெளிப்படையாகச் சொல்ல தற்போது முன் வந்து விட்டீர்களா?''



''எனக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருந்து, அந்த பெண்ணின் மூலமாக ஒரு பையனும் இருக்கிறான் என்பது என் சொந்த வாழ்வையும், கொலைகள் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவன் என்பது என் அரசியல் வாழ்க்கையையும் ஏற்கனவே கறை படுத்திவிட்டது. அதன் பிறகு என்ன நடந்தால் என்ன?'', என்று விரக்தியாக சொன்னார்.

''இறந்து போன ராகினி என்ற பெண்ணை நீங்க முதன் முதலில் எங்கே பார்த்தீர்கள்?''

''கதிர் நடத்தும் ஹோட்டலில் வங்கி நடத்திய ஒரு விழாவுக்கு போன போது ராகுல் வளர்மதி, ராகினி மூன்று பேரையும் வர சொல்லி இருப்பதாக சொன்னான்...''

''கதிரவன் உங்க பீ.ஏ. அல்லவா? அவரா அந்த ஹோட்டலை நடத்துவது? உரிமையாளர் பெயர் வேறு பார்த்தேனே?'', என்று அவசரமாக குறுக்கிட்டான் கமல்.

''கதிர் அந்த ஹோட்டல் மட்டுமில்லை, ஒரு ஹார்ட்வேர் கடையும் ஒரு ஜுவல்லரி ஷாப்பும் வைத்து இருக்கிறான். இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா? சொந்தக்கார பசங்க பேர்ல இருக்கு. அங்கே ராகினியை பார்த்தேன்.''

''நீங்க சொன்ன நகைக்கடை ஜே.பீ. ஜுவல்லரியா?''

''ஆமா! அந்த கடையில தான் அப்பப்போ நகை வாங்குவோம்'', என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தவர் திரும்பி வளர்மதியை பார்த்தார்.

''நகைக்கடையில் இருந்து காலையில் நகை கடைக்காரர் பேசினார். இந்த இருபத்தி அஞ்சு வருஷத்துல

முதல் முறை நகை எடுத்துட்டு போய் அம்மா திருப்பி கொடுத்துட்டாங்க என்று கேட்டார். நகை பிடிக்கலையா? ஏன் அட்டிகையை திருப்பி கொடுத்து விட்டாய்?''

''முதல் முறையா திருப்பி கொடுத்தேனா? நீங்க பிறந்த நாள் கல்யாண நாள் என்று பரிசு வாங்கும்போது பாதி தடவை ராகுல் சத்தம் போட்டு திருப்பிக் கொடுக்கச் சொல்லிடுவான். பாதிக்கு மேல் திருப்பிக் கொடுப்பேன். வரலை என்று சொன்னால் நீங்க வருத்தப்படுவீங்க. வாங்கிட்டு வந்தால் இவன் வருத்தப்படுவான். என்னை என்ன செய்யச் சொல்றீங்க? இப்பக் கூட மோதிரம் மட்டும் போதும் என்று சொன்னவன் போய் சேர்ந்து விட்டான். அந்த மோதிரத்தைக் கூட போட்டுப் பார்க்கவில்லை'', என்று சொன்னவரின் கண்களில் புதிதாக கண்ணீர் மீண்டும் உற்பத்தி ஆனது. அவர் பேசப் பேச மகாதேவ னின் முகம் யோசனையில் சுருங்கியது.

''வளர்மதி இந்த நேரத்தில் கணக்கு கேட்கிறேன் என்று நினைக்காதே. நான் ஆண்டுக்கு நான்கு முறை ஒவ்வொரு தடவையும், ஐந்து பவுனுக்கு குறையாமல் நகை வாங்கி தந்திருக்கிறேன். அதற்கான தொகையை நான் என் சொந்தப் பணத்தில் இருந்து கதிருக்கு தந்திருக் கிறேன். இது எல்லாம் உன்னை வந்து சேரவில்லையா?''

''இல்லையே... ராகுலுக்கு என்று இந்த இரண்டு மோதிரம் தவிர ஒரு பொட்டு தங்கம் கூட அவனுக்காக கடந்த பதினைந்து ஆண்டுகளில் வாங்கியதே இல் லையே? நீங்க என்ன சொல்றீங்க?'', என்று மாறி மாறி மகாதேவனும் வளர்மதியும் பேசிக்கொண்டு இருக்க, அந்த உரையாடலை அப்படியே பதிவு பண்ணிக்



கொண்டு இருந்த ராஜ்மோகனின் போனில் அழைப்பு வர எழுந்தான்.

''சார் ரியாஸ் போனில் இருக்கிறான். ஜி.ஹெச் வந்து விட்டான் என்று நினைக்கிறேன். பேசிட்டு வரேன்'', என்று போனுடன் நகர, கமலக்கண்ணன் விசாரணையை தொடர்ந்தான்.

''ராகினியின் அப்பா மாரியப்பனை தெரியுமா?''

''மாரியப்பனா? அது யார்? நான் பார்த்ததே இல் லையே?''

''இல்லை சார் நீங்க பார்த்து இருக்கீங்க. அவர் நீங்க ராகினியை சந்தித்த ஹோட்டலில் சர்வரா வேலை செய்தார். நீங்க ராகினியை பார்த்த சமயத்தில் வர அந்த ஹாலில் இருந்து இருக்கிறார்...''

''ஆமா! ட்ரிங்க்ஸ் கொண்டு வந்து கொடுத்த போது கை ஸ்லிப் ஆகி... அவருக்கு என்ன?'', என்று அனு தாபத்தோடு விசாரித்த மகாதேவனை அடுத்து கமலக் கண்ணன் சொன்ன செய்தி அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

''அவரும், ஒரு வாரம் முன்பு அடையாளம் தெரியாத வாகனத்தால் அடித்து செல்லப்பட்டு விபத்தில் இறந்து விட்டார்...''

''கடவுளே! இதுக்கும் ராகினி மரணத்திற்கும் கூட சம்பந்தம் இருக்கா? சத்தியமா எனக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் வெளியில் அதிகம் பேசாத தற்கு காரணம். என்னுடைய சட்ட பூர்வமான திருமணத் திற்கு முன்பே எனக்கு வளர்மதியுடன் ஆன ரகசிய தொடர்பு மட்டும் தான். இதுக்கு எல்லாம் யார் காரணம்

என்று கண்டு பிடிச்சீங்களா சார்? இதுக்கு நடுவில்... என் பையனை வேறு கொன்று... அதையும் வெளியே தெரியாமல் மறைக்க முயற்சி செய்து...''

''நீங்க சில சின்ன விஷயங்களை ரகசியமா வைத்து கொள்ளணும் என்று நினைத்ததில், உங்கள் அருகில் இருப்பவர்கள் உங்களை வைத்து பணம் சம்பாதிக்க முயன்று இருக்கிறார்கள்...''

''பணமா? புரியலையே?''

''நீங்க அடிக்கடி வளர்மதியிடம் நேரடியாக பேசுவதில்லை என்பதை பயன்படுத்தி கொண்டு, அவர்களுக்கு அவ்வப்போது பல பொருட்கள் வாங்கி தருவதாகச் சொல்லி உங்களிடம் இருந்து பணம் பறித்து இருக்கிறார்கள்...''

''அப்படி சொல்ல முடியாதே! நான் பேசும் சில நேரங்களில் நான் வாங்கி தருவதை வளர்மதியிடம் கேட்டு உறுதி செய்து கொண்டு இருக்கிறேன்...''

''இதை நான் குற்றவாளியை வைத்து தான் நிரூபிக்க முடியும். என்னுடைய கணக்கு சரி என்றால்... ராகினி உங்க உதவியாளர் செய்யும் தில்லுமுல்லுகளை சரியாக ஊகித்து இருக்க வேண்டும். அதனால் தான் அவளை...''

''உதவியாளர் என்றால் நீங்க இவ்வளவு நேரம் குற்றவாளி என்று பேசியது கதிரை பற்றியா? மை காட்... அவனுக்கு ராகுல் என்ன கெடுதல் செய்தான்? கதிர் எங்கே? அவனை உடனே கூப்பிட்டு...'', என்று ஆத்திரத்தோடு அவனை அழைக்க சட்டை பையில் இருந்து மொபைல் போனை எடுக்கும் முன்பே அது ஒலி எழுப்பியது.



அது கதிரவனிடம் இருந்து என்பதை அறிந்த உடனே, ஸ்பீக்கர் போனில் போட சொல்லி கமல் ஜாடை செய்ய, பொத்தானை அழுத்தி விட்டு பேசினார்.

''ஏய் கதிர்! என்ன வேலை செய்து இருக்கிறாய்? எங்கே இருக்க? மரியாதையா வந்து போலீஸ்ல சரண்டர் ஆகிடு...'', என்று அதட்டலாக சொன்னவரை கேலி சிரிப்புடன் இடையிட்டான்.

''ஏழு கோடி ஜனங்களில் ஒருத்தரா சர்வ சாதாரணமா இருக்கும் ஒரு மனிதன் என்னை சரண்டர் ஆக சொன்னால் நான் உடனே ஆகி விடுவேனா? என்னைக் காப்பாற்றிக் கொள்ள என்ன செய்வது என்று எனக்குத் தெரியும். நீ முதலில் போனை ஸ்பீக்கர் மோடில் இருந்து மாற்றி, அந்த போலீஸ் ஆபீசரிடம் உடனே கொடு...'', என்று மிரட்டியது. அன்று மாலை மூன்று மணி வரை, தன் பின்னால் நடந்து தனக்கு காபி வாங்கி தந்து, சாப்பிட்ட தட்டை எடுத்து போட்டு ஏவல் வேலைகள் செய்து கொண்டு இருந்த அந்த கதிரவனேதான்.



# 13

செம்மஞ்சேரி கிராமத்தில் இருந்து ராகினியின் தாயாரையும் அவரோடு துணைக்கு மேலும் இரண்டு உறவினர்களையும் ஜீப்பில் சென்னைக்கு வந்து சேர்ந்ததும் ராஜை அழைத்தான் ரியாஸ்.

''ரியாஸ் பேசுகிறேன் ராஜ். மாரியப்பன் உறவினர்களுடன் ஜி.ஹெச் வந்து விட்டேன். நீ எங்கே இருக்கிறாய்?''

''டீ.சி கூட இப்பதான் உன்னைப் பற்றி விசாரித்தார். நான் இங்கே ராகுல் வீட்டில் இருக்கேன். அங்கே ராகுல் டெட்பாடி கண்டு பிடிச்சு இருக்கோம்'', என்று சொன்னதும் அதிர்ந்தான்.

''மை காட். அப்போ மூன்று கொலைகளா? யார் இதை செய்தாங்க? எப் எம்மா?''

''எப்.எம் இல்லை என்று நாங்க நினைக்கிறோம். அது சரி, மாரியப்பனிடம் இருந்து பத்து நாளா ஒரு தகவலும் இல்லை. அவங்க வீட்டில் ஏன் கவலைப் படவில்லை என்று விசாரித்தாயா ரியாஸ்? அவங்க என்ன சொல்றாங்க?''

''பத்து நாள் இல்லை ராஜ். ராகினி மரணத்தின் போது கூடவே இருந்து போலீஸ் ஸ்டேஷன், கவர்மென்ட் ஆஸ்பத்திரி என்று மூணு நாள் அலைந்து திரிந்த பிறகு இங்கேயே அடக்கம் செய்து மனைவியை ஊருக்கு அனுப்பிய பிறகு தானே தகவல் வரவில்லை. அது அவர்களுக்குப் பெரிய விஷயமா தெரியவில்லை...''

''அவங்க நிதி நிலைமை எப்படி ரியாஸ்?''

''அவர் கம்பி, டைல்ஸ், விற்கும் கடையில் இல்லை வேலை செய்யறதா சொல்லி இருக்கிறார். இங்கே சின்னதா ஹோட்டல் வச்சு நஷ்டமாகி அதன் பின் சென்னைக்கு சென்றதால் மீண்டும் அதே தொழிலில் சர்வராக இருப்பதை சொல்ல மனசு இல்லாமல் இருந்து இருக்கலாம். நான் சொல்றதை அவங்க நம்பவே இல்லை. அப்புறம் ஒரே புலம்பல்...''

''மாரியப்பன் ராகினியோட அப்பா என்று தெரிந்து இருந்தால் அவரை ஒரு வேளை காப்பாற்றி இருக்கலாமோ என்று வருத்தமா இருக்கு ரியாஸ்...''



''என்ன சொல்ற ராஜ்? அவர் இறந்தது விபத்தில் இல்லையா?''

''விபத்துதான். ஆனால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட விபத்து ரியாஸ்...''

''எப்.எம் தூண்டுதல் இல்லாமல் நடந்து இருக்க முடியும் என்றா நினைக்கிறாய்?''

''அவருடைய பங்களிப்பு இல்லை என்பதற்கு மூன்று ஆதாரங்கள் கைவசம் உள்ளது.''

''காலையில் வேறு கதை சொன்னீங்க. இப்ப மாறி டுச்சா? இந்த விஷயம் டீ.சிக்கு தெரியுமா ராஜ்?''

''கூட தானே இருக்கிறேன். மாரியப்பன் பாடி அடையாளம் கண்டதில் இருந்து சிந்தனை மாறியது. இப்போ ராகுலின் பாடியும் கிடைத்த பிறகு அது வலுப்பெற்றது...''

''என்ன அந்த மூன்று ஆதாரங்கள்...''

''டீசி கூப்பிடுகிறார். நான் அப்புறமா பேசுகிறேன். எப்.எஸ்.ஆர்-க்கு எஸ்.எம்.எஸ் அனுப்பி வைக்கிறேன். அங்கே இருந்து பெற்றுக் கொள்...'', என்று போனை ராஜ் வைத்து விட ரியாஸ் புன்னகைத்தான். தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கிறான்.

எப்.எஸ்.ஆர் என்றால் போரன்சிக் சைன்ஸ் ராபார்ட் என்ற அர்த்தம். மொபைல் போன் என்பது சுலபமாக கைமாறக் கூடியது. ரகசியமான தகவல்களை அதில் பரிமாற வேண்டாம் என்று தான் சொல்லி கொடுத்த பாடம் தனக்கே திரும்பி வருகிறது, ராபார்ட், இங்கேதான் கமிஷனர் அலுவலகத்தில் கண்ட்ரோல் ரூமில் தானே இருப்பான். நேரே பார்த்து விடலாம் என்று கிளம்பி அடுத்த பதினைந்து நிமிடங்களில் வந்து சேர்ந்தான்.

* * *

திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குச் சென்று விட்டு திரும்பும் வழியில் இளைய தலைமுறையினர் இருபது பேர் இருந்த அந்த மினி பஸ்ஸில் ஒருவரை ஒருவர் காலை வாரி கேலி பேசிச் சிரித்துக் கொண்டு இருக்க அதில் ராதிகாவின் தலை சற்று அதிகமாகவே உருண்டு கொண்டு இருந்தது.

''ராதிகா இன்று அவங்க பியான்சியை எத்தனை தடவை சைட் அடிச்சாங்க என்று கரெக்ட்டா சொல்ற வங்களுக்கு, நாளைக்கு நான் லஞ்ச் ஸ்பான்சர் பண்றேன்...'', என்று ஒருத்தி அறிவிக்க, எல்லோரும் சிரித்தனர்.

''வானத்துல நட்சத்திரம் எத்தனை என்று கேளு, எண்ணி சொல்றேன். ராதிகா டீசீ சாரை சைட் அடிச்ச கணக்கு கேட்டால் கம்பியூட்டரே குழம்பிடும். எனக்கு நீ வாங்கி தரும் லஞ்சே வேண்டாம்...'', என்று ஒருத்தி.

''ரொம்ப ஓட்டாதீங்கப்பா. அவள் என்ன ஒரு நாளைக்கு ஒரு ஆளையா பார்க்கிறாள்? ஒரே ஆளைத் தானே பார்க்கிறாள். தப்பில்லை'', என்று ஒருத்தி.

''அதுவும் அவங்க அம்மா, ஜாதகம் தேடி, அலசி ஆராய்ந்து, வடிகட்டி சம்மதம் சொன்ன வரன். இன்னிக்கு சார் வரேன் என்று சொல்லிட்டு டிமிக்கி அடிச்ச உடனே மேடமுக்கு பொறுக்கலை. அதான் தேடிப் போய் பேசுறாள். விடுங்கப்பா...'', என்று ஒருத்தி மாறி மாறி கலாய்க்க ராதிகா அதை காதில் வாங்கி கொண்டாலும் பதிலே சொல்லவில்லை.

மறுத்து என்ன சொன்னாலும், அதற்கும் சேர்த்து கலாய்க்க போகிறார்கள். ஏன் மறுக்க வேண்டும்?



அவர்கள் சொன்னது அதிகப்படி என்றாலும் கொஞ்சம் உண்மை இருந்ததே?

''நான் ப்ளாக் மேஜிக் பண்ணி உன் கேள்விக்கு பதில் சொல்கிறேன்...'', என்று கண்களை மூடி கைகளால் காற்றை துழாவியவளை, 'என்ன பதில் சொல்லப் போகிறாள் என்ற ஆர்வத்துடனும் முகம் கொள்ளா சிரிப்புடனும் எல்லோரும் பார்த்தனர்.

''காலையில் பத்து மணிக்கு கமல் சாரை பார்த்ததில் இருந்து மாலை அஞ்சு மணி வரைக்கும் ஒரு லட்சத்தி, பதினேழாயிரத்து தொண்ணூற்றி இரண்டு முறை பார்த்து இருக்கிறாள். யாராவது மறுத்து பேச முடியுமா?'', என்று அவள் கண் சிமிட்ட மற்றவர்கள் எல்லோரும் சிரித்தனர்.

''மேடம் நாளைக்கு இதே வேலையை திருப்பி செய்தால், கல்யாணத்துக்கு வந்த வீடியோக்ராபரை இவங்க பின்னாடி அனுப்பி படம் எடுக்க சொல்லலாம். சந்தேகம் இருப்பவங்க வீடியோவை திருப்பிப் பார்த்து எத்தனை தடவை வேண்டுமானாலும் எண்ணலாம்...''

''ஹய்யோ! போதும் விடுங்கப்பா. ஒரு அப்பாவி கிடைச்சால்...'', என்று ராதிகா வாயைத் திறக்கும் முன்பே, ஒரு 'ஓஹோ!', என்று கூச்சல் கிளம்பி அவள் வாயை மூட வைத்தது.

''அப்பாவியா? யாரு அப்பாவி? ராதிகாவா? ஒரு போலீஸ் ஆபீசரிடமே உண்மையைச் சொல்லாமல் மறைந்து பின் தொடர்ந்து அவரின் குணம் பற்றி அறிந்து கொள்ள நினைக்கும் நீ அப்பாவியா? நான் போய் நாளைக்கே அவரிடம் சொல்கிறேன். நீ அப்பாவி இல்லை அடிபாவி என்று...''

''நாளைக்கு என்னப்பா நாளைக்கு? போனில் டீசீபீ நம்பர் வச்சு இருக்கா. போன் பண்ணி இன்றே சொல்லிடலாம்...'', என்று இன்னொருத்தி பர்சை வாங்க முயன்ற வேளையில் அவள் கண்ணில் அந்த போலீஸ் ஜீப் பட்டது. அருகில் நேசமணி. இவர் ஏன் இங்கே இருக்கிறார்? வண்டி சடன் ப்ரேக் போட்டு நிறுத்தப்பட கவனம் டிரைவரிடம் திரும்பியது.

''மிஸ் ராதிகா, உங்களை பார்க்கணும்னு டீசி கூட்டிட்டு வரச் சொன்னார்'', என்று இரு இளைஞர்கள் வண்டிக்குள் ஏறி சொல்ல, வேகமாக எழுந்தவளுக்கு அவர்களை அன்று காலை ஏற்கனவே சந்தித்து இருக்கிறோம் என்பது தோன்றவில்லை.

''ஒன்றரை லட்சம் பார்வை இரண்டரை லட்சம் ஆக வாழ்த்துக்கள்...''

''நீ போகும் இடம் எல்லாம் நானும் வருவேன் போ போ போ...''

''ஹைஜாக் பண்ணி சைட் அடிப்பதில் ஒருத்தரை ஒருத்தர் மிஞ்சுங்க...', என்ற விதம் விதமான கேலிகளுக்கு நடுவே, ''ஷ்! சும்மா இருங்கப்பா...'', என்று சிரிப்புடன் அடக்கி விட்டு பஸ்ஸில் இருந்து இறங்கியவள் தன்னுடைய பர்ஸ், மொபைல் போனோடு பஸ்ஸிலேயே தங்கிவிட்டதைக் கவனிக்கவில்லை.

''கண்ணன் எங்கே இருக்கார்?'', என்று கேட்டபடி போக்குவரத்து நெரிசலை சமாளித்து எதிர் முனைக்கு செல்வது வரை இருவரும் பதில் சொல்லாமல் அவளை தொடர்ந்தனர்.



''கண்ணன் எங்கே என்று கேட்டேனே?'', என்ற அழுத்தமான கேள்விக்கு பதிலாக வந்த, 'கண்ணன் யாரு?', என்ற அவர்களின் எதிர்கேள்வி அவளைத் திகைப்படைய வைத்தது.

''கண்ணன் யாரா? டீசீபீ கூப்பிடுகிறார் என்று சொன்னீங்களே?'', என்றவள் பார்வை கமலக்கண்ணனையும் நேசமணியையும் தேடி அலைந்தது. வண்டி இருந்தது. நேசமணியை காணோமே? எங்கே போய் விட்டார்? யாரிடமாவது எசகு பிசகாக மாட்டி கொண்டோமா என்று புலன்கள் உஷார் அடையும் முன்பே அவர்களின் சமாதானம் வந்தது.

''எங்களுக்கு பேர் தெரியாது மேடம். எங்க கூட வந்த ஒரு பெண்ணுக்கு அடிபட்டு விட்டது. போலீஸ் ஜீப் ப்ரேக் பிடிக்காமல் நேருக்கு நேர் மோதியதில் அவருக்கும் அடி. காரில் வந்த என் பிரெண்டுக்கும் அடி. அந்த காரில் படுக்க வச்சு இருக்கோம். அவர் தான் உங்களை கூப்பிட சொன்னார்...'', என்ற வாக்கியத்தில் பதறி, கமலக்கண்ணன் அங்கே இருக்கிறான் என்ற ஊகத்தில் ஓடி வந்து அந்த காருக்குள் எட்டி பார்த்தாள்.

''கண்ணன் இல்லையே?'', என்றபடி விலகியவளை பின்னால் இருந்து இரண்டு பேர் வலுக்கட்டாயமாக உள்ளே தள்ளிய வேகத்தில் நிலைகுலைந்து அவள் அந்த காருக்குள் சென்று விழுந்த வினாடியில் அந்த டாட்டா சியரா வாகனம் சீறிப் பாய்ந்தது.

ராதிகாவை யாரோ வலுக்கட்டாயமாக காரில் ஏற்றுகிறார்கள் என்பதை கண்ட நேசமணி அவசரமாக கமலக்கண்ணனுக்கு போன் பண்ணினார். மீண்டும் மீண்டும்

முயன்ற பின்பும் போன் எடுக்கப்படாமல், மணி அடித்துக் கொண்டே இருக்க அவரின் பதட்டம் வினாடிக்கு வினாடி அதிகரித்தது.



# 14

அன்று மாலை வரை தனக்கு கட்டுப்பட்டு, ஏவல் பணி புரிந்த கதிரவன் சில மணி நேரத்தில் தலை கீழாக மாறி தன்னை அதட்டுவதை எதிர்பார்க்காத மகாதேவன் திகைப்புடன் நிற்க, அவர் கையில் இருந்து போனை வாங்கினான் கமலக்கண்ணன்.

''கதிரவன், நீ பண்ணிய மூன்று கொலைகள் மட்டு மில்லாமல், வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது, இன்னும் பல குற்றங்களும் உன் மேல் சுமத்தப் பட்டு உள்ளது. நீ எங்கே போனாலும் எங்களிடம் இருந்து தப்பிக்க முடியாது...''

''ஹலோ டீசீபீ சார். நான் கொலை பண்ணினேனா? ஹா ஹா! யாரை எப்போ? எதுக்கு?''

''தமிழ்நாடு போலீஸ் என்ன வாயில் கட்டை விரலை வைத்து சூப்பிகிட்டு இருக்கும் குழந்தை என்று நினைத் தாயா? நீ ஏன் எப்போ எப்படி ராகினியை கொன்றாய்? எதற்காக மினி கான்பரன்ஸ் ஹாலை ஆறு நாட்கள் பூட்டி வைத்து இருந்தாய்? எல்லாம் எனக்குத் தெரியும்... சும்மா உதார் விடாதே!''

''என்ன தெரியும்? கான்பரன்ஸ் ஹால் பூட்டி இருந்ததா? அதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'', என்று குழறியவனுக்கு மாட்டி கொண்டோம் என்ற பயம் வந்தது.

''என்ன சம்பந்தமா? எப்.எம் பேருல நீ உன் கடையி லேயே புது கார்ப்பெட் புக் பண்ணியது. அந்த செலவை இருவர் தலையில் கட்டியது. பழைய கார்ப்பெட்டில் ராகுலின் பாடியை மூன்று நாட்கள் அடியில் போட்டு, கான்பரன்ஸ் ஹாலை பூட்டி வைத்தது, உன்னுடைய கடைக்கு டைல்ஸ் ஏற்றி வந்த லாரியை வைத்தே அவுட்டர் ரிங் ரோடில், போரூர் தாண்டி மாரியப்பனை கொன்றது, பழைய கார்ப்பெட்டை இவங்க வீட்டில் கொண்டு வந்து போடுகிறேன் என்ற போர்வையில் அங்கே ராகுலின் பாடியை புதைத்து சிவில் வொர்க் செய்தது, இது எல்லாத்துக்குமே தனித் தனியா என்னிடம் சாட்சியங்கள் இருக்கு. உன்னை அரெஸ்ட் பண்ண போதுமான ஆதாரங்கள் இப்போ இந்த நிமிஷம் என்னிடம் இருக்கு. இனிமேல் நீ எது சொல்வதாக இருந்தாலும் கோர்ட்டில் வக்கீல் வச்சு சொல்ல வேண்டியது தான்...'', எதிர்முனையில் நம்பிக்கையோடு கமலக்கண்ணன் பேசப் பேச, கதிரவனுக்கு அடி வயிற்றை கலக்கியது.

இவனின் வாயை மூட வைக்க பலமான அஸ்திரம் வேண்டும். உடனே... உடனே... எங்கே அந்த பெண்...? அவளை... அவசரமாக அவன் கண்கள் அலைபாய, எதிர் சாலையில் அவளைப் பின் தொடர அவன் அனுப்பிய சகாக்கள் பைக்கில் போவது தெரிந்தது. அவள் இங்கே எங்கேயோ இருக்க வேண்டும். உடனே பிடிக்க வேண்டுமே! போனை மூடி டிரைவரிடம் அவசர ஆணைகளை பிறப்பித்தான் கதிரவன்.

''என்ன சத்தமே காணோம்? இப்பவே தூக்கு கயிறு கண்முன்னால் தெரியுதா கதிரவன்?'' என்ற கமலின் கேலி அவனைக் கொதிக்க வைத்தது.

''குற்றம் நடந்த எந்த இடத்திலாவது நான் இருந்ததா, உங்களால் நிருபிக்க முடியுமா?''

''கதிரவன், இப்போ உன்னுடைய பேச்சே பதிவு பண்ணப்படுகிறது. இதையே ஆதாரமா பயன்படுத்து வோம்...''

''என்னை என்ன பச்சை புள்ளை என்று நினைத் தாயா? சட்டம் எனக்கும் தெரியும்...''

''டேய்! சட்டத்தைப் பற்றி என்னிடம் பேசுகிறாயா? உனக்குத் தெரிந்த சட்டத்தை விட நூறு மடங்கு அதிகமா எனக்குத் தெரியும். உன்னை மாதிரி பணம் சம்பாதிக்க ஆசைப் படும் குற்றவாளிகள் கொலை செய்யும்போது நிறைய தடயங்களை விட்டுடுவாங்க. முதலில் உனக்கு ஒரு விஷயம் சொல்றேன் கேட்டுக்கோ. குற்றம் நடந்த இடத்தில் இருந்தால் தான் குற்றவாளி என்று சட்டம் சொல்வதில்லை...''

''ஆனால் உன்மேல் நேரடியாக குற்றம் சுமத்த என்னிடம் ஆதாரம் இருக்கு. உன் நரைத்த தலை முடியை ஹோட்டலில் போட்ட புது காப்பெட்டில் இருந்து எடுத்து இருக்கோம். டீ.என்.ஏ டெஸ்டுக்கு அனுப்பு இருக்கோம். இந்த ஒரு ஆதாரம் போதும். உன்னை குற்றவாளி யாக்க...'', என்று கமல் சொல்லும்போதே, காரினுள் வந்து விழுந்த ராதிகாவை பார்க்க அவனுக்குச் சிரிப்பு பொங் கியது. டிரைவரிடம் ஜாடை காட்ட, தகவல் அவர் களுக்குப் பறந்து, சில வினாடிகளில் அவளோடு வந்து சேர்ந்தவர்கள் திறமைசாலிகள் தான்.



''ப்ச்! ஆதாரம் எல்லாம் பத்திரமா வச்சுக்கோங்க, அதெல்லாம் இப்போ எதுக்கு? கொஞ்சம் என்னை பேச விடுங்க. நான் இப்போ எங்கே இருக்கிறேன்? என் னுடன் யார் என்ன நிலையில் இருக்காங்க? இது பற்றி எல்லாம் கவலைப் படாமல் நீங்க போலீஸ் மாதிரி மட்டும் பேசினால் எப்படி? பெர்சனல் லைப் பற்றி யோசிக்க வேண்டாமா?''

''என்ன பூச்சாண்டி காட்டுறியா? பெர்சனல் லைபை காட்டி என்னை மிரட்ட உன்னால் முடியாது கதிரவன். எங்க அப்பாவே ஒரு போலீஸ் ஆபீசர். அவரையும் அவர் மனைவியையும் காப்பாற்ற அவருக்கே துப்பாக்கி லைசென்ஸ் இருக்கு. உன்னால் ஒன்றும் செய்ய முடி யாது...''

''அப்பா அம்மா மட்டும் தான் உன் குடும்பத்தில் இருக்காங்களா? புதுசா வரவங்களைப் பற்றிக் கவலை இல்லையா? கல்யாணம் ஆன பிறகு பார்த்துக் கொள்ள லாம் என்று இருக்கிறாயா? அல்லது இது இல்லை என்றால் இன்னொன்று என்று இருக்கிறாயா?

மை காட்! இவன் ராதிகாவையா சொல்கிறான்? அவனின் மூச்சு ஒரு நிமிடம் நின்றது. நோ... இருக்காது... இவன் சும்மா சொல்கிறான்... அவளை தனக்குப் பிடிக்கும் என்பதை தானே இன்னும் யாரிடமும்... ஏன் அவளிடமே சொல்லாத போது இவன் எப்படி அதைக் கண்டு பிடித்து இருக்க முடியும்? முதலில் அவள் எப்படி இவனிடம் மாட்டினாள்?

ஒரு வேளை போட்டு வாங்க முயற்சிக்கிறானோ? அவனுக்கு பிடி கொடுக்கக் கூடாது என்று மூளை சொல்

லும் போதே இதயம் பதறியது. இரண்டு ஆண்டுகள் தீவிரமாக பெற்ற பயிற்சி கை கொடுக்க, உள்ளே தோன்றிய பயத்தையும் பதட்டத்தையும் மறைத்து கம்பீரமாகவே பேசினான்.

''ஹேய் லூசு! என்ன உளறுகிறாய்? மாட்டிக் கொள்ள போகிறோம் என்ற பயத்தில் பைத்தியம் பிடித்து விட்டதா? எங்கே இருக்கிறாய் என்று சொன்னால் ஒரு மெடிக்கல் டீம் அனுப்புகிறேன். அல்லது செலவாகும் என்று நினைத்தால் சரண்டர் ஆகிடு. அரசாங்க செலவில் நானே உனக்கு வைத்தியம் பார்க்கிறேன்...''

''நீ எனக்கு வைத்தியம் பார்ப்பதற்கு முன்னால், உன் மனதை கவர்ந்த அந்த அரை வேக்காட்டு லொட லொட எஞ்சினியர் பேரென்ன...? ராதிகாவா...? அந்த பொண்ணுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும். கத்திக் கத்தி மயக்கம் போட்டு விட்டது...''

''ராதிகாவா...? ஏய்! அ..வ..ளு..க்..கு ஏ..தா..வ..து ஆச்சு... உ..ன்..னை.. சும்மா விட மாட்டேன்...'', என்று மிரட்டலாகச் சொன்ன போதும் குரல் தடுமாறியது.

''இதுவரை ஒண்ணும் ஆகலை. ஆனால் இனியும் எதுவும் ஆகாது என்று சொல்ல முடியாது. சும்மா சொல்லக் கூடாது. உங்க மேலே செம லவ்ஸ் போல. பேரை சொன்னல் எங்கே யார் கூப்பிட்டாலும் நாய்க் குட்டி மாதிரி வாலை ஆட்டிட்டு பின்னாடியே வந்து...'', என்று அவன் கேலியாகச் சொன்னதை கேட்கும் போதே பார்த்த ஒரே நாளில் தன்மேல் அவள் வைத்து விட்ட அன்பை எண்ணி மனம் கசிந்து அவள் மேல் அளவில்லாத காதலாக பெருக்கெடுத்து ஓடியது.





இப்போது அவள் இவன் கையில் அகப்பட்டு, எந்த இடத்தில், என்ன நிலையில் இருக்கிறாளோ என்று மனம் பதறியது. இன்னும் சில நிமிடங்களில அவள் எங்கே இருக்கிறாள் என்று கண்டு பிடித்தே தீர வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

''அவ நாய்க்குட்டி மாதிரி உன் பின்னால் வந்தாளா? அவளை வைத்து நாங்க உன்னை பிடிக்க திட்டம் போட்டோமா என்பது கூடத் தெரியாமல் கண்டபடி உளறாதே...'' என்று அவனின் காலை ட்ரேஸ் பண்ண கண்ஜாடை செய்தபடியே பதற்றம் குரலில் வெளிப்படாமல் மறைத்து அதிகார தோரணையிலேயே பேசினான்.

''என்சினியரிங் படித்த புத்திசாலி பொண்ணு... அதுவும் பெரிய போலீஸ் ஆபீசருக்கு பெண்டாட்டியாக போகிறவள் இப்படி எல்லாம் அசால்ட்டா இருக்கக் கூடாது என்று முதலில் அவளுக்கு பாடம் எடுங்க. ஜாக்கிரதையா இருக்க பாடம் எடுப்பது எல்லாம் அப்புறம். அதுக்கு முதலில் அவள் உயிரோடு இருக்க வேண்டும். உயிரோடு இருந்தாலும் அவள் எந்த நிலையில் எத்தனை பேர் கை பட்டு சின்னா பின்னமாகி இருந்தாலும் பரவாயில்லை என்று அவளைக் கல்யாணம் பண்ணிக்க நீ சம்மதிக்க வேண்டும்...''

''டேய்! பொறுக்கி ராஸ்கல்...!'', என்ற அவன் அதட்டலில் ரியாசுடன் போனில் பேசிக்கொண்டு இருந்த ராஜ் திரும்பி பார்த்தான்.

''...நீ மட்டும் என் கையில் மாட்டின, அங்கேயே உனக்கு சங்கு தான். மிச்ச விசாரணை அதுக்கு அப்புறம்...'', என்று பொறுமை இழந்து கத்திய போது

அங்கே வந்த ராஜ் அவன் தோளில் கை வைத்து 'சார், சுற்றிலும் கூட்டம் இருக்கு', என்று அமைதிப் படுத்தினான்.

'நீ சொன்னதை கவனித்தேன்', என்ற பாவனையில் அவனை ஒரு வினாடி மட்டும் நிமிர்ந்து பார்த்தான் கமலக்கண்ணன். அந்த ஒரு பார்வையில் அவனின் எண்ணத்தை உணர்ந்து உடனுக்குடனே மின்னல் விரைவில் செயல்படுத்த அந்த துடிப்பான இளைஞர்கள் பட்டாளம் நிறைந்த சிறப்பு புலனாய்வு குழு வினாடியில் தயாராக, தொடர்ந்து கம்பீரமான குரலில் பேச ஆரம்பித்தான்.

''கதிரவன் நல்லா கேட்டுக்கோ. முதலில் நீ சிட்டியை விட்டு எங்கேயும் போக முடியாது. எல்லா செக் போஸ்ட்டுக்குள் உன் வண்டி நம்பர் சொல்லியாச்சு...''

''உன்னுடைய நகைக்கடை, ஹார்ட்வேர் ஸ்டோர்ஸ், ஹோட்டல் அக்கவுண்ட்ஸ் எல்லாமே பார்க்க ஐ.டி மற்றும் காவல் துறையில் இருந்து தனி டீம் போயாச்சு...''

''வெளிநாடு எங்கேயும் தப்பி விடாமல் இருக்க பாஸ்போர்ட் முடக்கம் செய்தாச்சு...''

''இன்னும் ஒரு மணி நேரத்தில் நீ எங்கே இருக்கிறாய் என்று ட்ரேஸ் பண்ணி விட முடியும்'', என்று அழுத்தம் திருத்தமாக அவன் பேச கதிரவன் கேலியாகச் சிரித்தான்.

தொலைபேசியில் கமலக்கண்ணன் பேசிக்கொண்டு இருக்கும் போதே அவன் சொன்ன ஒவ்வொரு வேலையையும் மின்னல் விரைவில் செயல்படுத்த போன் கால்களும், வயர்லஸ் செய்திகளும், ஃபேக்ஸும் பறக்க ஆரம்பித்தது.



''நீங்க ஒரு மணி நேரத்தில் என்னை கண்டுபிடித்தாலும் அதற்குள் இங்கே என்னென்ன நடக்குமோ? உங்க துப்பறியும் சிங்கங்கள் என்ன கண்டு பிடிச்சாலும் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்தி நான் வெளி வந்து விடுவேன். ஆனால் நிலைமை புரியாமல் பேசிக்கொண்டு இருக்கீங்க. பேசாமல் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன் என்று இரண்டு மாசம் லீவு போட்டுட்டு போய்டுங்க. கேசை நான் பார்த்துக்கறேன்...'', என்று அவன் சொன்னது கமலின் நாடி நரம்புகளை எல்லாம் முறுக்கேற்றியது.

''இன்னுமா போன் லொகேஷன் கண்டுபிடிக்கலை?'' என்று கமல் அடிக்குரலில் கேட்ட கேள்வி எதிர்முனையில் அவனுக்கு கேட்டது.

''என் நம்பரை ட்ரேஸ் பண்ண ரொம்ப கஷ்டப்படாதீங்க. இப்ப போனை வைத்த உடனே, கார் போகிற வழியில் தூக்கி போட்டுட்டு போயிட்டே இருப்பேன். நீங்க என்ன செய்றீங்க என்பதை சொல்ல எனக்கு ஆள் இருக்கு. நான் என்ன செய்யணும். அல்லது செய்யாமல் இருக்கணும் என்பது உங்க நடவடிக்கையை பொறுத்தது. வச்சுடறேன்...'' என்று போனை வைத்து விட, அதை மகாதேவனிடம் திருப்பி கொடுத்தான் கமலக்கண்ணன்.

''உங்க அருகில் இருந்து கொண்டு உங்க பேரை பயன்படுத்தி, பொருள் ஈட்டியதுடன், உங்க பெயரை கெடுக்கும் வேகத்தில்... ப்ச்! அதெல்லாம் பற்றி பேச இப்போது நேரம் இல்லை. அவன் எங்கே இருப்பான் என்று உங்களுக்கு ஏதாவது ஐடியா இருக்கா சார்? நிழலான

காரியங்கள் செய்ய ஒதுக்கு புறமாக ஏதாவது பண்ணை வீடு, கெஸ்ட் ஹவுஸ்... என்று...''

''எனக்கு தெரிஞ்சு, ஆறு மாசம் முன்பு அவங்க சொந்தக்கார பசங்க காலேஜில் படிப்பதால் தங்குவதற்காக மதுரவாயலில் ஒரு பழைய வீடு வாங்கினான். அட்ரஸ் தெரியாது. போன், கார் வைத்து கண்டுபிடித்தால் தான் உண்டு...''

''வீடு போன் எல்லாம் அவன் பெயரில் இல்லா விட்டால் கண்டு பிடிப்பது சிரமம். முயற்சிக்கலாம். ஆனால் நேரம் ஆகும். நான் உடனே அங்கே போக வேண்டும். ஒரு பெண்ணை கடத்தல் செய்த குற்றம் வேறு இப்போது சேர்ந்து இருக்கு. இப்போ உடனே அங்கே போவது ரொம்ப அவசியம்... அவள்... எனக்கு வேண்டும்'', என்ற கமலக்கண்ணன் குரல் காதலில் கசிந்துருகி, தடுமாறி பின் இயல்புக்கு மீண்டது.

''சார்... ப்ளீஸ்... ஏதாவது எக்ஸ்ட்ரா தகவல் தெரியுமா? குறிப்பா நகர்... தெரு... ஏதாவது தெரிந்தால் சீக்கிரம் நெருங்கி விடலாம்'', என்று மகாதேவனிடம் விசாரித்த கமலக்கண்ணன் தன் போனில் அழைப்பு வருவது தெரிந்த உடனே எடுத்தான்.

''நேசமணி, நான் முக்கியமான விஷயமா பேசிட்டு இருக்கேன். கார் ரிப்பேர் பற்றிய தகவல் கேட்க எனக்கு இப்போ நேரமில்லை...''

''சார்... ஒரே நிமிஷம். நான் அதைவிட முக்கியமான விஷயம் சொல்லணும். ராதிகா மேடத்துக்கு ஆபத்து...''

''அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''



''நம்ம வண்டி சர்வீஸ் விட வந்தபோது பார்த்தேன். அவுட்டர் ரிங் ரோட்டில், மதுரவாயல் தாண்டி, ஒரு ப்ளாக் டாட்டா சியரா வண்டியில் ரெண்டு பேர் கூட்டிட்டு போறாங்க...''

''மை காட்! அந்த வண்டி எங்கே போகுது? சிட்டிக்குள்ளேயா? வெளியேவா? சீக்கிரம் சொல்லுங்க மணி...''

''ஆவடி நோக்கி போகுது. வண்டி கிளம்பி, அஞ்சு நிமிஷத்துக்குள்ளே தான் இருக்கும்.''

''அஞ்சு நிமிஷமா என்ன பண்ணிட்டு இருந்தீங்க மணி?''

''சார், நான் உங்களுக்கு இதுவரைக்கும் பத்து காலுக்கு மேல் கொடுத்து இருக்கேன். நீங்க தான் போனை எடுக்கலை. அதை விடுங்க சார், அவங்களை காப்பாற்ற சீக்கிரம் ஏதாவது பண்ணுங்க சார்'', என்ற பாசமான அந்த காரோட்டியின் குரல் அவனை எட்டினாலும் அதற்கு பதில் சொல்லக் கூட நேரமின்றி போனை துண்டித்தான்.

''ராஜ், ஆவடி ரோடு போகணும்... குவிக்...'', என்று அவன் சொல்லி முடிக்கும் முன்பே அவன் வாசலுக்கு ஜீப்பை எடுக்க பறந்து போய் இருந்தான்.

''சாரி சார், அட்ரஸ் எனக்கு நினைவில்லை. என் ஆபீசில் கேட்டு தகவல் தெரிந்தால் உங்களுக்கு உடனே நான் சொல்கிறேன். ஏதோ பரமேஸ்வரி... அந்த மாதிரி அம்மன் பேரில் உள்ள நகர்...'', என்று மகாதேவன் சொல்ல முயன்றதை காதில் வாங்கியவன் அவருக்கு பதில் சொல்லக் கூட நேரமின்றி பாய்ந்து வெளியே சென்று இருந்தான்.



# 15

காரில் பயணித்த கமலக்கண்ணனின் ஒவ்வொரு செல்லும், ராதிகாவின் பாதுகாப்பிற்காக என்ன செய்யப் போகிறாய் என்று கேள்வி கேட்க, கண்கள் அவசரமாக கூகிள் மேப்பில் மதுரவாயலை சுற்றி உள்ள நகர்களின் பெயர்களை அவசரமாக தேடிக் கொண்டு இருந்தது.

''சார் நீங்க காலையில் ஒரு சின்ன ட்ராபிக் கேஸ் ரெஜிஸ்டர் பண்ண சொன்னீங்களே? அந்த ஆட்கள் மேடத்தை பாலோ பண்ணிய ஆட்களாக இருக்கலாம். அவங்களிடம் போன் நம்பர் அட்ரஸ் வாங்கிட்டு மதுரவாயல் இன்ஸ்பெக்டர் திருப்பி அனுப்பிட்டார். அந்த அட்ரஸ் வாங்கி போகலாமா?'', என்று ராஜ் இடையிட்டான்.

''நீங்களே அட்ரஸ் வாங்குங்க ராஜ். நான் நகர் பேரை தேடுறேன்...'', என்று கூகிள் மேப்பில் தேடும் பணியில் இருக்க, அடுத்த சில வினாடிகளில், கமலக்கண்ணன் கண்டு பிடித்த சாமுண்டீஸ்வரி நகர், என்ற பேரும், மதுரவாயல் போலீஸ் ஸ்டேஷனில் அவர் சொன்ன முகவரியில் இருந்த விலாசமும் ஒத்துப்போக, ராஜ் துள்ளினான்.

''சார், பதினைந்தே நிமிடம் அங்கே போறோம். மேடத்தை பத்திரமா மீட்டு விடலாம்...''



''நோ ராஜ். அங்கேதான் இருக்கிறாள் என்பதை உறுதி செய்யாமல் குருட்டுப் பூனை இருட்டு நேரத்தில் விட்டத்தில் பாய்ந்த மாதிரி, நேரத்தை வீணடிக்க எனக்கு இஷ்டம் இல்லை. இப்ப நேரம் ரொம்ப முக்கியம். அதை விரயம் பண்ணாமல் வேலை செய்ய வேண்டும். ராபர்ட் கண்ட்ரோல் ரூமில் இருந்து என்ன செய்கிறான்? கதிரவன் போன் லொகேஷன் கேட்டேன்...'', என்று வெறுப்பாக சொன்ன போதே வயர்லஸ் அலறியது.

''சார், ராபர்ட். நீங்க சொன்ன போன் லொகேஷன், திருவேற்காடு சர்க்கிளில், எழுபத்தி மூன்றாவது டவரில் அப்படியே இருக்கு. இதுவரை மாறி மாறி வந்தது இப்போது நகரவில்லை...''

''டெலிகாம் சர்க்கிளில் இருக்க மாதிரி நம்பர் சொல்லாதே மேன். ஏரியா சொல்லு. ரியாஸ் எங்கே? பேச சொல்லு'', என்று பொறுமை இழந்து அதட்டிய கமலக் கண்ணன் அவர்களுக்கு புதுசு.

''ஒரே நிமிஷம் சார். இதோ பேச சொல்றேன் சார்...'', என்று ராபர்ட் பதறும் போதே கண்ட்ரோல் ரூமின் கதவை திறந்துகொண்டு உள்ளே வந்த ரியாஸை பார்த்ததும் சீக்கிரம் வர சொல்லி ஜாடை காட்டினான். அருகில் வந்தவனிடம் கமல் கேட்கும் விபரங்களை தந்தி பாஷையில் சொல்ல, உடனே வயர்லெசில் கமலுடன் பேச தயார் ஆனான் ரியாஸ்.

''சார் ரியாஸ். டவரின் கவரேஜ், ஒரு கிலோமீட்டர் ரேடியஸ் இருக்கலாம். இதுல சக்தி நகர், பார்த்திபன் நகர், வெலிங்கடன் நகர், சாமுண்டீஸ்வரி நகர்...'', என்று தொடர்ந்தவனை 'லிஸ்ட் s.m.s. அனுப்பு ரியாஸ்', என்று அவனுக்கும் சாமுண்டீஸ்வரி நகர் போ...', என்று

ராஜுக்கும் அவசரமாக உத்தரவு பிறப்பித்தவனின் இதயத் துடிப்பு எகிறி இருந்தது.

* * *

கமலக்கண்ணன் வயர்லெசில் இணைப்பை துண்டித்த பிறகே அதுவரை அடக்கி வைத்து இருந்த மூச்சை வெளியிட்ட ராபர்ட் ரியாஸை பார்த்து புன்னகை செய்தான். ''மை காட். சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தாய். இல்லை என்றால் அம்பத்தூர் டீசி என்னை வறுத்து எடுத்து இருப்பார் இன்னிக்கு என்ன அவ்வளவு டென்ஷன்?''

''ராஜ் கூட இருக்கானே! என்ன விஷயம் என்று கேட்க வேண்டியது தானே? ராகினி மர்டர் கேஸ்ல ஏதோ க்ளூ கிடைச்சு இருக்கு. அதை உனக்கு மெசேஜ் அனுப்புறேன் என்று சொன்னானே? என்ன க்ளூ ராபர்ட்?''

''அதுக்குள்ளே தான் அங்கே பயங்கர களேபரம் ஆகி விட்டதே? டீ.சிக்கு வேண்டிய பெண்ணை ராகினி மர்டர் அக்கியூஸ்ட் தூக்கிட்டான். அதான் சார் செம டென்ஷனாகிட்டார்...''

''அக்கியூஸ்ட் பழைய எப்.எம் தானே? அவர் தான் இப்ப பதவியை ராஜினாமா பண்ணிட்டாரே? போய் அரெஸ்ட் பண்றதை விட்டுட்டு இப்ப எங்கே ரெண்டு பேரும் அவசரமா போறாங்க?'', என்று கேட்ட ரியாஸை அல்பமாக பார்த்தான்.

''எப்.எம் மேலே தப்பில்லை என்று கண்டு பிடிச்சது உனக்குத் தெரியாதா?''



''ம். ராஜ் சொன்னான். எப்படி அவ்வளவு உறுதியா சொல்றாங்க?''

''மூணு காரணம். முதலாவது ராகுல், ராகினி இருவரின் மரணத்திற்கும் காரணம் ஒரே விஷயம். அது குளிர்பானத்தில் கலந்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒரே நேரத்தில் அருந்தப்பட்டு இருக்கிறது. இதை எப்.எம் செய்து இருக்க முடியாது...''

''செய்து இருக்க முடியாது. செய்யச் சொல்லி இருக்கலாமே?''

''இருக்கலாம். ஆனால் இல்லை என்பதற்கான இரண்டாவது க்ளூ. நகை கடையில் அந்த குளிர்பானம் வழங்கப்பட்டு உள்ளது...''

''என்ன உளறுகிறாய்? எந்த நகை கடைக் காரரும் தன் கடையில் வைத்து இரண்டு பேரை கொன்று தன் கடை பெயரை கெடுத்துக் கொள்ள விரும்ப மாட்டார்கள்...''

''உண்மை தான். இதில் இருந்தே தெரியவில்லையா? யாரும் செய்ய துணியாத ஒரு வேலையை இவங்க செய்தார்கள் என்றால் அதுக்கு அந்த கடை அந்த கதிரவனுடையது என்பது தான் காரணம். அவங்க பீ.ஏ. ஒருத்தன் கதிரவன் என்ற ஆள் தான் எல்லாத்துக்கும் காரணம். பினாமி பெயரில் ஏகப்பட்ட நிழல் தொழில்கள்...''

''நிறைய என்றால்...''

''நிறைய என்றால் இப்போதைக்கு கண்டு பிடித்தது மூன்று. இந்த கொலைகளில் சம்பந்தப்பட்ட அந்த ஹோட்டல், ஹார்ட்வேர் ஸ்டோர்ஸ், நகை கடை எல்லாமே அவனுடையது...''

''பினாமி தொழில் பண்றவன் கொலையாளி ஆகி விட முடியுமா?''

''பினாமி தொழில் பண்றவன் கொலையாளி ஆக முடியாது ரியாஸ். ஆனால் அது வெளியே தெரியக் கூடாது என்று நினைப்பவன். அது தெரிந்த நபர்களை கொலை செய்ய நினைக்கலாம் இல்லையா? இன்னும் உனக்கு சந்தேகம் என்றால் மூன்றாவது விஷயம். கார்ப்பெட்ல இருந்த முடி டை அடிக்கப்பட்டது. எப்.எம் டை அடிப் பதே இல்லை. அவருக்கு முடியே கருப்பு வெள்ளை கலந்த மாதிரிதான் இருக்கும்.

''ஆனால் ராபர்ட்...''

''உன் சந்தேகத்திற்கு விளக்கம் சொல்ல என்னால் முடியாது. கதிரவனே போன் பண்ணி, டீசியை ரெண்டு மாசம் லீவில் போக சொல்லி இருக்கான். இதுக்கு மேலே உனக்கு ஆதாரம் வேண்டுமா? இன்னும் ஏதாவது சந்தேகம் இருந்தால் டீசி ப்ரெஸ் மீட் நடத்துவார் இல்ல. அங்கே போய் உட்கார்ந்துக்கோ. இப்ப டீசி ராஜோடு போய் இருக்கும் இடத்துக்கு போர்ஸ் அனுப்பும் வேலையை செய்வோம்'', என்று முற்றுப்புள்ளி வைத் தவன் மதுரவாயல் டீ.சிக்கு வயர்லெசில் செய்தி சொல்ல ஆரம்பித்தான்.

* * *

''சாமுண்டீஸ்வரி நகர் போ...'', என்று ராஜிக்கு உத்தரவிட்டு விட்டாலும் கமலக்கண்ணனுக்கு இன்னும் பயம் மிச்சம் இருந்தது. 'ஒரு வேளை அவள் அங்கே இல்லா விட்டால்...', என்ற எண்ணம் தோன்றி அவனை அலைக்கழித்தது. அவள் எங்கே இருக்கிறாள் என்று அவளின் மொபைலை வைத்து கண்டு பிடிக்கலாமே?



பரபரப்புடன் அன்று மதிய உணவு வேளையில் பார்த்த அந்த முன்பதிவு சீட்டில் இருந்த எண்ணை நினைவுக்கு கொண்டு வந்து அழுத்தினான். 'பிக் அப்... பிக் அப்... ரதி... ஐ லவ் யு... ஐ நீட் யு... உனக்கு எதுவும் ஆகாது... சீக்கிரம் எடு...'', என்று மாறி மாறி மனதிற்குள் உச்சரித்தபடி பதட்டத்துடன் காத்திருந்தான்.

மனம் அவள் எடுக்க வேண்டும் என்று விரும்பி னாலும், மூளை 'அந்த போன் எடுக்கப்பட மாட்டாது', என்று அறிவுறுத்த மறக்கவில்லை. ஒரு வேளை அப்படியே எடுத்தாலும் கடத்தல்காரர்கள் யாராவது தான் எடுத்து பேசுவார்கள். அவர்களின் பேச்சில் இருந்து ஏதாவது விஷயம் அறிய இதயம் துடிதுடிக்க காத்திருந் தான் கமலக்கண்ணன்.

''ஹலோ ராதிகா மேடம்? இப்போதான் போன் ஞாபகம் வந்ததா? டீசி சார் கூப்பிடுறார் என்று யாராவது சொன் னால் போதுமே? கையில் இருக்குற பொருளை கூட கண்டு கொள்ளாமல் தூக்கி எறிந்து விட்டு பறந்து போயிடுவியா? பர்ஸ் கூட இல்லாம கிளம்பிட்ட? அவர் பார்த்துப்பார் என்ற எண்ணமா?'', என்று கேலி சிரிப் புடன் தொடர்ந்து பேசிய இனிய பெண் குரல் கேட்டதும் விக்கித்தான்.

''ஹலோ... நான் கமலக்கண்ணன்... நீங்க... இந்த போன்... எப்படி...''

''ஹய்யோ! நான் ராதிகா என்று நினைத்து... சாரி சார். நான் அவங்க கலீக். பிரேமா...''

''ஓ! இந்த போன்...''

''ரிசப்ஷன் முடித்து வரும் போது, வழியில் நீங்க கூப்பிட்டதா உங்க ஸ்டாப் வந்து அழைத்ததும், பஸ்ஸில் விட்டுட்டு போய்ட்டா. எடுத்து வச்சு இருக்கேன். நாளைக்கு ஆபீசில் கொடுத்துடுறேன். ஒரே நாளில், உங்களை நாலாவது லொகேஷன்ல எட்டாவது முறையா, பார்க்க மேடம் வந்துட்டே இருக்காங்க. ஹேவ் நைஸ் டைம் சார்...'', என்று வாழ்த்தியவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இணைப்பை துண்டித்த போது வண்டி நின்று இருந்தது.

''என்ன ராஜ்?''

''சார், இதுதான் சாமுண்டீஸ்வரி நகர். எல்லாமே வீடுகளா இருக்கு. மேப்பில் பார்த்தால் நான்கு பிரதான சாலைகளும், இருபது குறுக்கு தெருக்களும் இருக்கு. எப்படி பார்த்தாலும் தெருவுக்கு இருபது வீடு என்றாலும் நானூறை தாண்டும். இதில் எந்த தெருவில், எந்த வீட்டில் இருக்காங்க என்று ஒவ்வொரு வீடாக எப்படி தேடிப் பார்ப்பது என்று தெரியலை. அதான் ஜாஸ்தி போர்ஸ் சொன்னால்...''

''ஜாஸ்தி போர்ஸ் வர சொல்லி அவங்க வருவதற்கு எப்படியும் ஒரு மணி நேரம் ஆகாதா ராஜ்? அதுவரைக்கும் கையை கட்டிக் கொண்டு இருக்க சொல்றீங்களா?''

''அப்படி சொல்லலை சார். ஆனால் ராத்திரி பத்து மணிக்கு வீடு வீடா தட்டி விசாரணையும் நடத்த முடியாது அல்லவா? அப்படியே நடத்தலாம் என்றாலும் நாம் இருவர் மட்டும்...'', அவன் தயங்கித் தயங்கி சொன்னதில் இருந்த உண்மையும் புரிந்தது.

''ஷிட்...'', என்று எரிச்சலோடு முனகியவன் ஜீப்பை விட்டு இறங்கி வானத்தை பார்த்தான். கடலில் மூழ்குவது மாதிரி மூச்சு முட்டியது. இறைவா, ஏதாவது ஒரு க்ளூ ப்ளீஸ்...



நான், என், என்ற எண்ணம் பாஞ்சாலிக்கு இருக்கும் வரை, அவளின் ஒரு கரம் ஆடையை பற்றி இருந்தது. அது வரை துரியோதனன் சபையில் அவளுக்கு உதவ கண்ணன் முன் வரவில்லை. ஆனால் தலைக்கு மேல் போய் விட்டது. என்னால் முடியவில்லை என்று எந்த நொடி தன் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி, 'கண்ணா! எல்லாம் உன் செயல்', என்று அர்ப்பணித்தாளோ, அந்த வினாடி அவளின் ஆடை துச்சாதனன் இழுக்க இழுக்க வளர செய்தான் அந்த பரமாத்மா. இப்போது அந்த நிலையில் இருந்தான் கமலக்கண்ணன்.

இதுவரை நம் முயற்சியால் கண்டு பிடித்தது. இனி அவன் மனம் வைக்க வேண்டும். 'வை கண்ணா', என்று கண்களை மூடி ஒரு கணம் பிரார்த்தனை செய்தவன் கண்களைத் திறந்த போது, ''கடவுளை நம்பினோர் கை விடப்படார். உனக்கு உதவிக்கு நான் இருக்கிறேன்'', என்று அருள் புரிந்தான்.

ஒரு வெண்ணிற கைக்குட்டையில் ராமர் ப்ளூ வண்ண வட்ட வட்ட ஜம்கிக்கள் இருப்பது கண்ணில் பட்டது. வெண்ணிற கைக்குட்டையில் இருந்த ஜம்கி அவன் கண்ணில் தனியாக பட்டதற்கு காரணம். அதன் 'பளிச்', என்ற நிறம் மட்டும் இல்லை.

மாலை ஜீப் ரிப்பேர் ஆகி நின்றபோது அவளை சந்தித்த வேளையில், ராதிகாவின் உடையை அவன் கவனித்தான். ரவிக்கையில், மயில் மாதிரி டிசைனில் தைக்கப்பட்டு இருந்தது இந்த மாதிரி ஜம்கிக்கள். இவை

ஏன் இங்கே இருக்க வேண்டும்? வேகமாக ஓடிச் சென்று அந்த கைக்குட்டையை எடுத்து பார்த்தான்.

உனக்கு சந்தேகமே வேண்டாம். நான்தான் போட்டேன் என்று சொல்வதை போல, அந்த கைக்குட்டையின் ஒரு மூலையில் ஆர் என்ற ஆங்கில எழுத்தும், ஒரு குட்டி ரோஜாவும் தையல் வேலை செய்யப்பட்டு இருந்தது. இது அவளுடையது.

அது மட்டுமில்லை... சிவப்பு நிறத்தில் ஒரு சதுரத்தில் மேல் ஒரு முக்கோணம்... அதன் மேல் சிலுவை குறி... 'ராஜ்...', என்ற அலறலில் ஓடி வந்தான். 'ராஜ், இங்கே தான் இருக்காங்க. பக்கத்துல சர்ச் எங்கே இருக்கு பாருங்க. இது ராதிகா கர்ச்சீப். இது அவளின் ரவிக்கையில் மாலையில் நான் பார்த்தேன். இ..து இ..து அ..வ..ளி..ன் ரத்தமா இருக்கலாம்...', என்றவனின் குரல் கம்மியது.

''சார்... ப்ளீஸ்... தைரியமா இருங்க. அவங்களுக்கு ஒண்ணும் ஆகி இருக்காது சார்...'', என்றவன் கண்ணிலும் ஈரம் துளிர்த்தது.

''அப்படித்தான் நானும் நம்புகிறேன் ராஜ். ரத்தத்தின் ஈரம் கூட இன்னும் காயவில்லை. சில நிமிடங்களுக்கு முன்னால் அனேகமா ஓடும் காரில் இருந்து அவள் தூக்கி போட்டு இருக்கலாம். சீக்கிரம் போ'', என்று சொன்னவன் வேகமாக ஜீப்பில் ஏற அது சீறி பறந்தது.

சர்ச்சின் ஒரு புறம் பிரதான சாலை என்றாலும் மூன்று பக்கம் சின்ன சின்ன சந்துகள் பிரிய, எப்படி பார்த்தாலும் அறுபது வீடுகள். இதில் அவள் எங்கே இருக்கக் கூடும்? கமல், ராஜ், இருவரின் கண்களும் கூர்மையுடன் ஏதாவது ஒரு தடயத்தை தேடி அலைந்தது.



''சார்... இந்த ஜம்கி... பாருங்க....'', என்று வேகமாக அடையாளம் காட்ட அவன் தலை அசைத்து மறுத்தான்.

''இல்லை ராஜ்... அது என் கையில் இருந்து விழுந்தது. நான் இறங்கும் போது அங்கே இல்லை...'', என்றவன் அந்த இடத்தை மீண்டும் கூர்ந்து குனிந்து பார்த்தான். அங்கே பெரிய வண்டி ஒன்று சின்ன இடத்தில் முன்னும் பின்னுமாக போய் வந்து வண்டியை திருப்பிய டயர் மார்க் தெரிய, அவன் பரபரப்பானான்.

''ராஜ், நீங்க சொன்ன ஜம்கி அடையாளம் இல்லை. டயர் மார்க் இருக்கு. இங்கே தான் இருக்காங்க...'', என்றவன் குனிந்து அந்த இடத்தை மீண்டும் கவனமாக பார்த்தான்.

தார் சாலையில் காலடி தடம் இருக்க வாய்ப்பு இல்லை என்ற போதும், மூன்று கிளை சாலைகளையும் அவனின் கண்கள் இன்ச் இஞ்சாக அலச, ஒரு பாதையில்... மலர்ந்த மல்லிகை பூக்கள் உதிரி உதிரியாக.. ஒவ்வொன்றாக... வேண்டும் என்றே யாரோ உதிர்த்து அடையாளமாக தூவி சென்றது போல் தோன்ற... கமலக்கண்ணன் பதறினான்.

''ராஜ், இந்தத் தெருவுக்கு வாங்க...'' என்று உதிரி மல்லிகைப் பூக்களின் தடத்தைத் தொடர்ந்து பாய்ந்து ஓடியவனை வேகமாகப் பின் தொடர்ந்தவன், அந்தப் பூக்களின் தடம் நின்ற வீட்டின் முன் வந்து மூச்சு வாங்கினான்.

''சார், நீங்க பின்னால் வாங்க. உங்களை அவங்களுக்கு சட்டுன்னு அடையாளம் தெரியும்'', என்று அவனை தடுத்து நிறுத்தி விட்டு, அழைப்பு மணியை அடித்தவன், கதவு திறக்க காத்து இருந்தான் ராஜ்.

கதவை திறந்தது இருபதில் இருந்த இளைஞன். கண் இமைக்கும் நேரத்தில் இடுப்பில் இருந்த ரிவால்வர், அவன் கழுத்தில் பதிந்து, அவன் ராஜின் முழுமையான

ஆளுகைக்கு வந்து இருக்க, கமலக்கண்ணன் பிஸ்டலுடன் உள்ளே நுழைந்தான்.

மூன்று படுக்கை அறைகள் கொண்ட அந்த சின்ன தனி வீட்டில், ஹால் சோபாவில் கண்களை கட்டி வைத்த நிலையில் ராதிகா இருக்க அவளின் இரு புறமும் கல்லூரி மாணவர்கள் என்ற போர்வையில் காலை முதல் அவளை பின் தொடர்ந்த இரண்டு தடியர்கள் காவலுக்கு இருந்தனர்.

பக்கவாட்டில் இருந்த ஒற்றை சோபாவில் அமர்ந்து விஸ்கியை அருந்தியபடி, ''யாருடா இந்நேரத்துல? என்ன கதை பேசிட்டு இருக்க? கதவை சாத்திட்டு வாடா...'', என்று அதிகாரம் செய்த கதிரவனின் நெற்றி பொட்டை குறி பார்த்தது கமலக்கண்ணனின் கைத்துப்பாக்கி.

''ஒரு அடி அசைஞ்சாலும் சுட்டுடுவேன...'', என்று காஜித்த கமலக்கண்ணனின் வரவை கதிரவன் அவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கவில்லை.

அது ஒருபுறம் இருக்க, அவனின் குரலை அடையாளம் கண்ட ராதிகா, ஒரே வினாடியில் 'கண்ணா!...', என்ற கண்ணீர் சேர்ந்த கதறலான அணைப்புடன் ஓடி வந்து அவன் மார்பில் சாய்ந்து கொள்ள, அவனின் கவனம் சிதறிய அந்த வினாடியில் சுதாரித்துக் கொண்ட கதிரவனின் துப்பாக்கி வெடித்தது. குண்டு ராதிகாவின் தோள் பட்டையை உரசி சென்றது.



# 16

தன் மனம் கவர்ந்த ராதிகா, கண்கள் கட்டி இருந்த போதும் தன் குரலிலேயே தன்னை அடையாளம் கண்டு, ஆவலோடு அணைக்க ஓடி வந்த அந்த ஒரு வினாடியில் அவன் கவனம் சிதறியதை பயன்படுத்தி கதிரவன் சுட்டதை கமலக்கண்ணன் உணர்ந்து உடனே அவளை அவசரமாக நகர்த்திய போதும் அந்த குண்டு அவளின் தோள்பட்டையை உரசி சென்று இருந்தது.

அடுத்த வினாடி மூன்று தோட்டாக்கள் மூன்று துப்பாக்கியில் இருந்து மின்னல் வேகத்தில் கதிரவன் மேல் பாய்ந்து இருந்தது. செய்யும் காரியங்களுக்கு பலன் அப்போதே திருப்பி கிடைக்கும் என்று சொல்வதை போல, அவன் செலவழித்த ஒரு குண்டுக்கு பதிலாக, மூன்று தோட்டாக்கள் கதிரவனுக்குப் பரிசாகக் கிடைத்தது.

முதல் குண்டு கமலக்கண்ணன் துப்பாக்கியில் இருந்து பாய்ந்து சென்று ராதிகாவை சுட்ட கதிரவனின் வலது கரத்தையும், இரண்டாவது குண்டு ராஜ்மோகனின் துப்பாக்கியில் இருந்து கதிரவனின் வலது காலையும், மதுரவாயல் ஏசியின் துப்பாக்கியில் இருந்து பாய்ந்த குண்டு அவனின் இடது காலையும் பதம் பார்த்து ஒரே வினாடியில் அவனை மொத்தமாக கை கால்களை இழந்த முடவனாக ஆக்கி இருந்தது.

'காப்பாற்றும் கடவுளுக்கு சமமானவன்' என்று எண்ணி இருந்த சர்வ வல்லமை படைத்த கதிரவன் மேல் சரமாரியாக துப்பாக்கி குண்டுகள் கண் இமைக்கும் நேரத்தில் பாயக் கூடும் என்பதை கனவிலும் எதிர்பார்த்து இராத, இருபதுகளில் இருந்த அந்த மூன்று இளைஞர்களும் அடுத்த நொடி மண்டியிட்டு, கைகளை தூக்கி, ''சார்... சார்... நீங்க என்ன சொன்னாலும் கேட்கிறோம் சார். எங்களை ஒன்னும் பண்ணிடாதீங்க சார்'', என்று கெஞ்சத் துவங்கி இருந்தனர்.

''வேகம் வேகம் என்று சொன்னீங்களேடா! இவ்வளவு வேகம் என்று நான் நினைக்கலையே? நான் வீட்டுக்கு வந்து இன்னும் மூணு ரவுண்ட் விஸ்கி கூட அடிக் கலை... அதுக்குள்ளே இவளைத் தேடி வந்துட்டானே? எப்படிடா...?'' என்று புலம்பிய கதிரவன் அடுத்த சில வினாடிகளிலேயே பெருகிய ரத்தத்தை கண்டு மயங் கினான்.

''சார், நாங்க இவங்களை பார்த்துக்கறோம். நீங்க மேடமை முதலில் ஹாஸ்பிடல் கூட்டிட்டு போங்க'', என்று சொன்ன மதுரவாயல் உதவி காவல் துறை உதவி கண்காணிப்பாளரும், சிறப்பு புலனாய்வு பிரிவின் ஆய்வாளர் ராஜ்மோகனும், நிலைமையை கைக்குள் எடுத்து கொள்ள, ராதிகாவை அருகில் இருந்த அறைக்கு தூக்கி சென்றான் கமலக்கண்ணன்.

''கையில்தான் அடி. என்னால் நடக்க முடியும்...'', என்று அவள் சொன்னது அவன் காதுகளில் ஏறவே இல்லை.

வலது தோள்பட்டையில் குண்டு உரசி சென்ற காயத்தை பரிசோதித்து, பேண்ட் பைக்குள் இருந்து பெரிய கர்ச்சீப்பை எடுத்து, அவளின் கையை சுற்றி இறுக்கமாக கட்டு போட்டான். ரத்தப் போக்கை நிறுத்தும் வரை வார்த்தைகள் இன்றி வேலை செய்தவன், அதன் பிறகே நிமிர்ந்து அவளை முறைத்தான்.

''அறிவிருக்கா உனக்கு? படிச்ச பொண்ணுதானே? மூளை வேண்டாம்? கண்ணை கட்டிப் போட்டு இருக் கானே? சுற்றி நடப்பது என்ன என்று தெரியாமலேயே இப்படியா ஓடி வருவது?'', என்று கடுமையான குரலில்



கமலக்கண்ணன் அதட்டுவான் என்று எதிர்பார்க்காத ராதிகாவின் முகம் வினாடியில் வாடியது.

இவனை தேடி, சென்றதற்கு இப்படி கடத்தப்பட்டதே எதிர்பாராதது. இவன் தன்னை கண்டு பிடித்து, தேடி வந்து ஆதரவாக நாலு வார்த்தை பேசுவான் என்று இருந்த ராதிகா இந்த மாதிரி வார்த்தைகளை எதிர்பார்க் கவே இல்லை. அது வரை இருந்த மன அழுத்தமும், காயம் பட்டதால் வந்த வலியும் ஏற்கனவே அவளை வதைக்கையில் கடுமையான வார்த்தைகளும் சேர்ந்து கொள்ள கண்ணில் நீர் துளிர்த்தது.

''நல்ல வேளை நான் சுதாரித்து உன்னை நகர்த்திய தால் உரசிட்டு போய் இருக்கு. குண்டு சதைக்குள் பாய்ந்து இருந்தால் ரத்தம் அதிகமா வரும். இப்ப லேசான காயம் டிரேசிங் பண்ணினால் போதும்'', என்று அவனின் அர்ச்சனை தொடர்ந்தது.

கிட்டத்தட்ட அரை மணி நேரமாக கதிரவன் போன் பண்ணியதில் இருந்து அவளுக்கு என்ன ஆச்சோ? எப்படி கண்டு பிடித்து பத்திரமாக மீட்கப் போகிறோம் என்ற மன உளைச்சலில் அதிகம் பாதிக்கப்பட்டு இருந்த கமலக்கண்ணனுக்கும், 'அவளின் மேல் துப்பாக்கி குண்டு பாய்ந்ததாக எண்ணிய அந்த ஒரு வினாடியில் அவளுக்கு என்ன ஆகி விடுமோ?', என்ற பயம் உச் சத்தை அடைய, அவனும் பதட்டத்தில் இருந்ததால் அவளின் கண்ணீரை அவனால் உணர முடியவில்லை.

''இந்த வீட்டுக்குள் நுழையும் வரை நீ அதி புத்திசாலி. பரவாயில்லை. போகும் இடம் எல்லாம் ஒரு க்ளூ விட்டு போகிறாய் என்று உன்னைப் பற்றி பெருமையாக

என்று நினைத்துக் கொண்டே வந்தவனை ஒரு நிமிஷத்தில் அடி முட்டாள் என்று நினைக்க வைத்து விட்டாயே? உனக்கு என்ன பைத்தியமா?'', என்று அடிக் குரலில் அதட்ட அதுவரை அமைதியாக இருந்த ராதிகா வின் பொறுமை எல்லையை தொட்டது.

''ஆமா! பைத்தியம் தான்'', என்று தீர்மானமான குரலில் சொன்ன ராதிகா திகைக்க வைத்தாள்.

''என்ன பார்க்கிறீங்க? உங்களோட வேலை மட்டும் தான் உலகம் என்று இருக்கும் உங்களை மாதிரி போலீஸ் ஆபீசரை, உங்க நியாயங்களை புரிஞ்சுக்க முடியாமல் இருக்கும் நான் பைத்தியம் தான். உங்களுக்கு குற்ற வாளி, விசாரணை, கோர்ட், கேஸ் தண்டனை இது மட்டும் தான் தெரியுமா? குடும்பம், பெற்றோர், அன்பு பாசம் என்றால் என்ன என்று தெரியாதா?''

''ஹேய்! நீ என்ன பேசுகிறாய்? எனக்கு என் பெற் றோர் மேலே அன்பில்லை என்று உனக்கு யார் சொன்னா?'' என்று கேட்டவனின் குரலில் திகைப்பு இப்போது கூடி இருந்தது.

''யார் சொல்லணும்? அதான் இன்று காலையில் நீங்க உங்க அம்மாவை போனில் எப்படி கடிச்சீங்க என்று நானே கேட்டேனே? அவங்களோடு அஞ்சு நிமிஷம் போனில் நிறுத்தி நிதானமா பேச முடியாது. அவங்க என்ன சொல்ல வராங்க என்று கேட்க முடியாது. அவங்களுக் காக அரை நாள் ஒதுக்கி அவங்க ஒரு இடத்துக்கு கூப் பிட்டால் போக முடியாது. எப்ப பார்த்தாலும்... பொழுது விடிந்து பொழுது மறையும் வரை... வேலை வேலை வேலை இதே ஜபம் தானே?''



''ராதிகா... உனக்கு எப்படி...'', என்றவனுக்கு மேலே வார்த்தை வரவில்லை.

''ஆமா தெரியாமல் தான் கேட்கிறேன். உங்களோட வேலை என்னைக்காவது முடிஞ்சு இருக்கா? இன்னிக்கு ஒரு கேஸ் முடிந்தால் நாளைக்கு இன்னொரு கேஸ் புதுசா வரப் போகுது. போலீஸ் ஸ்டேஷனை என்றாவது ஒரு நாள் இனிமேல் வேலை இல்லை என்று மூட முடியுமா? இந்த உலகத்தில் மக்கள் இருக்கும் வரைக்கும் ஆசைகள் இருக்கும். ஆசைகள் இருந்தால் அதற்காக அடிதடி நடக்கும். குற்றங்கள் இருக்கத் தான் செய்யும். இந்த அடிப்படை உண்மை புரியாமல், சமுத்திரத்தில் அலை ஓய்ந்து ஸ்நானம் பண்ணுகிறேன் என்று சொல்ற முட் டாள் மாதிரி, வேலை வேலை என்று சுத்திகிட்டு வீட்டுல இருப்பவர்களை கவனிக்கக் கூட நேரம் இல்லாமல் இருக்கீங்க...''

''வாவ்!'', என்று விழி விரித்தவனுக்கு அவன் காதுகளையே அவனால் நம்ப முடியவில்லை. இதென்ன அம்மா பேசுவதை அப்படியே கேட்பது மாதிரி இருக்கு? இவளுக்கு அம்மா மேலே இவ்வளவு அக்கறையா?

இவளைத் தனக்குப் பிடித்து இருக்கு என்பது தெரிந்தது தான். அம்மாவிடம் பேசுவதற்கு முன்னால் இவளைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று இருந்தான். ஆனால் அம்மாவைப் பார்ப்பதற்கு முன்பே இப்படி வக்காலத்து வாங்குகிறாளே! அம்மா கொடுத்து வச்சவங்க தான். மற்ற வீட்டில் இருக்க மாதிரி மாமியார் மருமகள் சண்டை வர வாய்ப்பு இல்லை. இவன் தன் மனதிற்குள் பேசிக் கொண்டு இருந்த போதும் அவளின் பேச்சு தொடர்ந்தது.

''... நீங்க என்னைப் பார்க்காத போதும் உங்களைத் தேடி, உங்க பின்னாடி சுற்றி தேடி வந்து பேசும் என்னை பார்த்தால் உங்களுக்கு பைத்தியமா தான் தோன்றும். ஆனால் இப்ப எனக்கு பைத்தியம் தெளிஞ்சுடுச்சு. இனிமேல் உங்க பின்னாடி வர மாட்டேன். போதுமா? குட்பை...'', என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியேற முயன்றவளை கை பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

''ஹேய்! இப்ப என்ன ஆச்சு? இவ்வளவு விரக்தியா பேசுகிறாய்?''

''இனி என்ன ஆகணும்? நீங்க கூப்பிட்டீங்க என்று எவ்வளவு ஆவலா உங்களைத் தேடி வந்தேன். அது உண்மை இல்லை. உங்களை மிரட்ட என்னை பணய கைதியா பயன்படுத்துறாங்க என்பது புரிஞ்சுது. சரி என் மேலே இருக்கும் அக்கறையில் என்னைக் காப்பாற்ற வந்துட்டீங்க என்று நினைத்தால், அதுவும் உண்மை இல்லை. நீங்க உங்க கேசில் தேடப்படும் குற்றவாளியைப் பிடிக்க தான் வந்து இருக்கீங்க என்று இப்ப தானே புரியுது. உங்க வேலை முடிஞ்சாச்சு இல்லை. கிளம்புங்க. என் வழியை நான் பார்த்துக்கறேன்...''

''ராதிகா, உன்மேலே அக்கறை இல்லாமலா உன்னைத் தேடி ஓடி வந்தேன்? நான் எதுக்காக அப்படி சொன்னேன் என்று புரிஞ்சுக்காமல் பேசாதே!''

''எனக்குப் புரியவே வேண்டாம். நீங்களே சொன்ன மாதிரி எனக்கு மூளை அவ்வளவு தான். இதையே தானே அவனும் சொன்னான்? இனிமேல் நாய் மாதிரி வாலை ஆட்டிட்டு உங்க பின்னாடி வர மாட்டேன்.''

''ஹேய்... ராதிகா....'' என்று அவளை நெருங்கி தோளை பற்றி, கண்களை நேருக்கு நேர் பார்த்து



கமலக்கண்ணன் விளக்கம் சொல்ல முயன்றபோது, ''நீங்க ஒன்றும் சொல்ல வேண்டாம். நீங்க உங்க வேலையைப் பாருங்க. இனிமேல் என்னால் உங்களுக்கு தொந்தரவு இருக்காது'' என்று அவள் வேகமாக விலகினாள்.

''ப்ச்! உளறாதே. சரி நானும் வரேன். முதலில் ஒரு கிளினிக் போய் காயத்துக்கு டிரசிங் பண்ணிட்டு நானே உன்னை வீட்டுல டிராப் பண்றேன்...''

''தேவை இல்லை. என்னை பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும்...''

''இதுக்கு மேலே மறுத்து மறுத்து பேசிக்கொண்டே இருந்தால் உன்னை எப்படி கூட்டிட்டு போகணும் என்று எனக்கு தெரியும்...''

''என்ன பண்ணுவீங்க? குற்றவாளியை கூட்டிட்டு போற மாதிரி விலங்கு மாட்டி இழுத்துட்டு போவிங்களா?''

''உன்னை போய் அப்படி செய்வாங்களா? அப்படியே அலாக்கா தூக்கிட்டு போவேன். எப்படி வசதி?'', என்று கேட்க அவள் விழித்தாள்.

''எ.ன்..ன சொ..ன்..னீ..ங்..க?''

''ஹாலில் இருந்து இந்த அறைக்கு தூக்கி வந்த மாதிரி இங்கே இருந்து தெரு முனையில் நிற்கும் வண்டிக்கு உன்னை தூக்கி போவேன் என்று சொன்னேன்...'', என்று அழுத்தம் திருத்தமாக அவன் சொல்ல அவள் வெளியே பார்த்தாள். முதலில் அவர்கள் வரும்போதே நான்கைந்து பேர் இருந்தார்கள். இப்போது காவலர்களின் எண்ணிக்கை மேலும் கூடி இருக்க, ''இல்லை நானே வரேன்'', என்று முனகினாள்.

''தட் இஸ் குட்', என்று சொன்னவன் அவளை பின் தொடர்ந்து வரும்போதே ராஜிடம், ''ஏதாவது பிரச்னை என்றால் போன் பண்ணத் தயங்க வேண்டாம்'', என்று சொல்லி விட்டு வந்து ஜீப்பில் ஏறி கிளப்பினான்.

''ஒரு சின்ன ஆக்சிடென்ட் ஆகி விட்டது. பத்திரமா இருக்கேன். வர கொஞ்சம் லேட் ஆகும் என்று உங்க அம்மாவுக்கு முதலில் போன் பண்ணு'', என்று வண்டியை கிளப்பியதுமே தன் போனை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் அமைதியாக இருக்க, ''ப்ச்! உன் கோப தாபம் எல்லாம் என்னோடு இருக்கட்டும். உங்க அம்மா என்ன பாவம் பண்ணினாங்க? ரிசப்ஷனுக்கு போன பொண்ணை பத்தரை மணி வரை காணவில்லை என்று பயப்பட மாட்டாங்களா? உனக்கு போன் பண்ணி அந்த பொண்ணு எதையாவது சொல்லி, மேலும் கவலைப் படுவதற்கு முன்னால் நீயே பேசி விடு. உன் கோபத்தை அப்படியே பிடித்து வைத்துக் கொள். போதுமா?''

ராதிகாவிற்கே அம்மாவிடம் தகவல் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால், அவனின் போனை வாங்கி விட்டு எண்களை அழுத்திய போதும், அவன் பேசிய விதத்தில் ஓரளவிற்கு சமாதானம் அடைந்தாலும் இன்னும் கோபம் மிச்சம் இருந்ததால், ''என்ன எங்க அம்மா மேலே திடீர் என்று அக்கறை?'', என்று கேட்காமல் விடவில்லை.

''ம். எங்க அம்மா கிட்டே நான் பேசவில்லை என்று கொஞ்சம் முன்னாடி லெப்ட் அண்ட் ரைட் வாங்கினாயே அப்போ வந்த ஞானோதயம் என்று வைத்து கொள்ளேன்...'', என்று சிரிக்காமல் சொன்ன விதம் அவள் முகத்தில் புன்னகையை மலர வைத்தது.



சில நிமிடங்களில் பிரதான சாலைக்கு வந்த உடனேயே கண்ணில் பட்ட மருத்துவமனை வாசலில் ஜீப்பை நிறுத்தி இறங்க, ராஜ் ஏற்கனவே தகவல் கொடுத்து இருந்ததால், வாசலிலேயே மருத்துவ அலுவலர் காத்திருக்க இருவரும் உள்ளே சென்றனர்.

மருத்துவர் அவளின் ரவிக்கையின் வலது கைப்புறத்தை வெட்டி எடுத்து விட்டு காயங்களை பரிசோதிக்கும்போது, தோள்பட்டையில் குண்டு உரசி சென்ற காயம் மட்டுமின்றி கத்தியால் நீளமாக கிழித்த தடமும் ரத்தம் கோடாக கசிந்து இருந்ததும் கண்ணில் பட்டு கண்ணனை பதற வைத்தது.

''இது வேறயா? இதை நான் பார்க்கவே இல்லையே? கத்தியால வேற கிழிச்சாங்களா?'' என்று அவன் கவலையோடு கேட்கும் போதே டாக்டர் அமைதி படுத்தினார்.

''இரண்டு காயமுமே ஆழம் இல்லை சார். எத்தனையோ கேஸ் பார்த்த உங்களுக்கே தெரிந்து இருக்குமே? நல்ல நேரம். பிள்ளைகள் விளையாட்டில் விழுந்து அடிபடுவது போல சின்ன காயம்தான். பயப்பட ஒன்றுமே இல்லை. சின்ன வயசு, ஆரோக்கியமான உடல். சுகர் எதுவும் இல்லை என்றால் ஒரே வாரத்தில் சரியாகி விடும்'', என்ற மருத்துவரின் சமாதானம் அவன் காதுகளை எட்டினாலும் இதயத்தை எட்டவில்லை.

கண்ணில் ஈரத்துடன், அவள் வலியை தன்னுடையதாக உணர்ந்து, மருத்துவரின் அருகிலேயே நின்று அவளின் நெற்றியை வருடியபடி, ''வலிக்குதாடா...?''

என்று அவன் கேட்ட அந்த ஒற்றை வார்த்தையில் ராதிகாவின் மனதில் மிச்சம் மீதி இருந்த கோபமும் கரைந்து காற்றில் காணாமல் போனது.

அந்த ஒற்றை கேள்விக்குப் பதிலாக மறுப்பாகத் தலையை மட்டும் அசைத்தவள் கண்ணில், 'இவன் என்னுடையவன், என்னை நேசிப்பவன், என் வலிக்காக கண் கலங்குபவன்' என்ற பெருமிதம் பொங்கி வழிந்தது.



# 17

காயத்தை சுத்தப்படுத்தி மருந்து போட்டு முடித்த பிறகும், ஒருவரை ஒருவர் பார்வையால் வருடி ஆறுதல் சொல்லிக் கொண்டு இருந்த கமலக்கண்ணனையும் ராதிகாவையும் இந்த உலகத்திற்கு இழுக்க, லேசாக தொண்டையை கனைத்து தன் இருப்பினை உணர்த்தினார் மருத்துவர்.

''சாதாரணமா எனக்கு தெரிந்தவர்களுக்கு வலி நிவாரணிகளை நான் பரிந்துரைப்பதில்லை. காய்ச்சல் வந்தாலோ, வலி அதிகமாக இருப்பதாகத் தோன்றினாலோ இந்த மாத்திரைகளை போட்டுக்கலாம். கையில் வாங்கி வச்சுக்கோங்க. தேவைப் பட்டால் மட்டும் பயன்படுத்துங்க. இரண்டு நாள் ரெஸ்ட் எடுத்துக் கொண்டால் போதும்'', என்று மருந்து எழுதி கொடுக்க, அதை வாங்கி கொண்டு வெளியே வந்தனர்.

வெளியில் இருந்த பார்மசியில் மருந்துகளை வாங்கிக் கொண்டு, ஒரு பிஸ்கட் பாக்கெட் மற்றும் தண்ணீர்



பாட்டிலுடனும் வந்தவன் முகம் இன்னும் வாடி இருந்தது. அதைப் பார்த்த ராதிகாவிற்கு அவனைச் சரிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

''இந்த கையில மருந்து எழுதி கொடுத்து காசு வாங்கி, அந்த பக்கம் பார்மசியில் அந்த மருந்தை விற்று காசு பண்ணி, என்ற வியாபார தந்திரம் தெரியாத டாக்டரா இருக்காரே? உங்க பிரெண்டோ?'', என்று சீண்டலாக கேட்டதும் அவளின் முயற்சி புரிய, அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

''டாக்டர் தான் காயம் ஆழம் இல்லை என்று சொல்லிட்டாங்க. நானும் வலி இல்லை என்று சொல்றேன். அப்புறம் ஏன் இப்படி இருக்கீங்க? கொஞ்சம் நல்லா சிரித்தால் என்னவாம்?'', என்று மென்மையாகச் சொல்ல அவன் புன்னகை மேலும் விரிந்தது.

''சில சமயம் மூளை சொல்றதை மனசு கேட்காது. இது அந்த மாதிரி சந்தர்ப்பம். மெல்ல மெல்ல தான் சரியாகும். பிஸ்கட் சாப்பிடுறியா?''

''வேண்டாம். நான் கல்யாண வீட்டில் விருந்து சாப்பாடு புல்லா சாப்பிட்டுட்டு வந்தேன். நீங்க நைட் சாப்பிட்டு இருக்க மாட்டீங்க. சாப்பிடுங்க. வெறும் பிஸ்கட் போதுமா?''

''வீட்டுல டின்னர் ரெடி பண்ணி இருப்பாங்க. போக லேட் ஆகும் என்று இதை வாங்கினேன்..'', என்று சொன்னவன், நின்று திரும்பி, அவள் வலது கையை பற்றி தூக்கி பார்த்து, ''நிஜமாகவே வலிக்கலையா?'', என்று மீண்டும் கேட்டான்.

''நீட்டும் போது வலிக்கலை. தூக்கினால் வலி தெரியுது. தாங்க முடியாமல் இல்லை. இன்னொரு விஷயம்

தெரியுமா? நான் தான் வேண்டும் என்றே கத்தி ரகளை செய்து கிழிக்க வைத்தேன்...''

''ஹையோ! ஏன் அப்படி செய்தாய்?''

''கடத்துறாங்க என்று தெரிந்த உடனே, என்னை தேடி வரவங்களுக்கு க்ளூ கொடுக்க ஏதாவது பொருளை வழியில் போடத் தேடினேன். தலையில் வைத்து இருந்த பூவும் ஜிம்கியும் கண்ணில் பட்டது. ஜிம்கி சும்மா பிய்க்க வராது. கத்தியால் கிழித்தால் தானே எடுக்க வரும். அதோடு ரத்தம் வந்ததால் தானே கர்ச்சீப்ல சர்ச் வரைய முடிந்தது'', என்று சொல்ல அவன் கண்களில் பாராட்டு ஒரு கணம் தோன்றி அடுத்த கணமே மறைந்தது.

''இருந்தாலும் அவன் கொஞ்சம் வேகமா கிழித்து இருந்தால் என்ன ஆகி இருக்கும்?'' என்று கேட்டவனின் குரலில் ஆதங்கம் இருந்தது.

''போதுமே! நடந்த விஷயத்தை ஒரு கெட்ட கனவா நினைத்து மறந்து விடலாம். அதை தவிர வேறே ஏதாவது சந்தோஷமான விஷயம் பேசலாமா? ப்ளீஸ்...''

''ஹூம்! மறக்க வேண்டிய விஷயம் தான். ஆனால் அத்தனை கெட்டதிலும் சில நல்லது நடந்துதான் இருக்கு. அதைப் பற்றி பேசலாம். அது சரி, மல்லிகை பூவை எப்படி ஒவ்வொண்ணா வரிசையா தூவிட்டு போனாய்? உன்னுடன் யாரும் வரலையா?''

''இரண்டு பக்கமும் ஆள் வந்தாங்க. சின்ன குறுக்கு சந்துதானே? இருபதடி தூரம் கூட இல்லை. உள்ளங்கையில் இருந்த பூவை போடுவது அவ்வளவு சிரமமா என்ன?''



''ஆனாலும் உன் தைரியம் நிஜமாவே பிரமிக்க வைக்குது ராதிகா...'', என்றவனின் குரலில் பெருமிதம் இருந்தது.

''எல்லாம் நீங்க சீக்கிரமே என்னை தேடி கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆசையில் தான். சும்மா சொல்லக் கூடாது. அந்த ஹாலில் நாங்க இருந்தது பத்து நிமிடம் கூட இருக்காது. நீங்களும் நான் எதிர்பார்த்ததை விடவும் சீக்கிரமே வந்துட்டீங்க...'', என்று சொன்னவளின் கண்ணில் தெரிந்த பாராட்டு அவனை ஜீப்பை ஓரம் கட்டி நிறுத்த வைத்தது.

''எ..ன்..ன..ம்..மா ஜீப்பை நிறுத்திட்டீங்க?'', என்று வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்பது போல மென்மையாக கேட்டவளின் குரலில் எதிர்பார்ப்பு இருந்தது.

''உங்க அம்மாவிடம் போனில் நீ என்ன சொன்னாய்?''

''சின்ன விபத்து. ஹாஸ்பிடல் போயிட்டு ஒரு மணி நேரத்தில் வந்துடுறேன் என்று சொன்னேன்...''

''அவங்க ஒண்ணும் பயப்படலையே?''

''முதலில் பயந்தாங்க. நான் கிளம்பி வரவா என்று கேட்டாங்க. நீங்க கூட இருக்கீங்க என்று சொன்னேன். அப்புறம் அவங்க ஒன்றும் சொல்லலை...''

''உங்க அம்மாவுக்கு என்னை ஏற்கனவே தெரியுமா?'' என்று ஆச்சரியமாக கேட்டவனை பதில் சொல்லாமல் புன்னகையோடு பார்த்தாள்.

''என்ன அப்படி பார்க்கிறாய்? பதில் சொல்ல மாட்டாயா?''

''ம்ம்ம். அவங்களுக்கு உங்களைத் தெரியும். எப்படி தெரியும் என்று அடுத்த கேள்வி நீங்க கேட்பதற்கு

முன்னால் நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். எங்க அம்மாவுடன் என்னை பேச சொன்னீங்களே? நீங்க உங்க அம்மாவிடம் பேசலையா?''

''இன்று கட்டாயம் பேசணும். ரொம்ப முக்கியமான விஷயம் இருக்கு. அதுக்கு முன்னாடி... உன்னிடம்...'', என்று முடிக்காமல் நிறுத்தினான். இன்று காலையில் பார்த்த பெண்ணை, இரவு பதினோரு மணிக்கு ஜீப்பில் தனியாக உட்கார்த்தி வைத்து, உன்னை விரும்புகிறேன் என்று சொன்னால் சரியாக இருக்குமா என்ற தயக்கம் தோன்ற அவன் மௌனமானான்.

''உங்க அம்மாவிடம் பேச சொன்னால், அதுக்கு முன்னாடி என்னிடம் என்ன சொல்லணும்?'' என்று தெரு விளக்கு தந்த மங்கிய வெளிச்சத்தில் வரி வடிவாக தெரிந்த அவனின் முகத்தை தலை சரித்து பார்த்தவள் கேலியாக கேட்டாள்.

''ரா..தி..கா..! உங்க வீட்டுல உன்னை தவிர வேறு யார் இருக்காங்க என்று எனக்குத் தெரியாது. உனக்கு ஏற்கனவே நிச்சயம் ஆகி விட்டது என்று காலையில் அந்த ராகேஷிடம் சொன்னாய். அது நிஜமா பொய்யா என்று தெரியாது. உன் வீட்டில் உன் பெற்றோர் உடன் பிறந்தோர் இருந்தால் என்னை ஏற்று கொள்வார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் உங்க அம்மா விடம் என் விருப்பத்தை சொல்வதற்கு முன்னால் உன் னிடம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன்...''

''ம்ஹூம்! ரொம்ப தைரியம் தான். தனியா ராத்திரி பதினோரு மணிக்கு ஒரு பெண்ணை போலீஸ் ஜீப்பில் உட்கார வைத்து ஒரு டீசீபீ இப்படி பேசினால் நான் என்ன சொல்வது?'', என்று சிரிப்புடன் இடையிட்ட வளை பதட்டத்துடன் பார்த்தான்.

''லுக். நான் ஒன்றும் விருப்பம் இல்லாத பெண்ணை பலவந்தபடுத்த போவதில்லை. மற்றது எப்படியோ, உனக்கு கல்யாணம் ஆகவில்லை என்பது தெரியும். உனக்கு என்னை பிடித்து இருக்கு என்று தெரியும். இது மட்டும் போதுமா என்று கேட்கலாம். ஆனால் இது தான் அடிப்படை தேவை'', என்று அவசரமாக விளக்கம் சொல்ல முயன்றவனை மீண்டும் குறுக்கிட்டாள்.

''இதென்ன புது கதை? நான் எப்போ பிடித்து இருக்கு என்று சொன்னேன்?'', என்று கேலியாக கேட்டவளின் கண்கள் பளபளத்ததை அந்த அரை இருட்டிலும் அவனால் உணர முடிந்தது. அவளிடம் எப்படி சொல்ல போகிறோம் என்ற குழப்பத்தில் இருந்தவனுக்கு அந்த குறும்பான ஒற்றை கேள்வி இறுக்கமான மனநிலையை லேசாக்கியது.

கண்ணும் முகமும் மலர, ஒற்றை விரலால் அவளின் முகவாயை பற்றி நிமிர்த்தி, லேசாக ஆட்டியபடி, ''ம்ஹூம்! நீ வாயால் உன்னை எனக்கு பிடித்து இருக்கு என்று சொல்லவில்லை என்பதென்னவோ உண்மைதான். ஆனால் அந்த வீட்டில் கண கட்டி இருந்த போதும் நாலே நாலு வார்த்தை பேசிய என் குரலை நீ அடை யாளம் கண்டதே பெரிய விஷயம் என்று இருக்க, அதை கண்டு பிடித்த அடுத்த நிமிடம் சுற்று புறத்தில் இருக்கும் ஆபத்தை மறந்து, கண்ணா என்ற கதறலுடன் ஒரே ஓட்டமாய் ஓடி வந்து என் காக்கி சட்டையில் கண்ணீர் கறை உருவாக்கியது இந்த ராதிகாதானே?'', என்று கேட்டதும் அவள் புன்னகைத்தாள்.

''அப்படியா? எந்த மாதிரி சூழலிலும் அழக்கூடாது என்ற அழுத்தமான கோட்பாட்டில் வளர்ந்தவள் நான். அது மட்டுமில்லாமல் உங்க சட்டையில் கண்ணீர் கறை இருப்பதற்கான அடையாளம் காணோமே?'', என்று சொன்னவள், குனிந்து அவன் சட்டையை நெஞ்சு பகுதியில் ஆராய்ந்தாள்.

''ஷ்! ரதி, போதும் கேலி. நான் அம்மாவிடம் பேசணும். அதுக்கு முன்னாடி உன்னிடம் ஒரு வார்த்தை சம்மதம் என்று வாங்கி விட்டால்...''

''பார்த்த ஒரே நாளில் ர..தி..யா...? ம்ம்... அதெப்படி?''

''சிலரைப் பார்த்த உடனே பிடிக்கலாம். அதற்கு இவ்வளவு நேரம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் உன்னுடைய சந்தேகம் நியாயம் தான். இதை சொல்ல ரொம்ப அவசரப்படுகிறேனா என்று எனக்கு கூட இன்று சந்தேகம் வந்தது...''

''அப்புறம்...?'', என்று கதை கேட்டவளின் குரலில் கேலி வழிந்தது.

''நீ என்ன வேண்டுமானாலும் நினைத்து கொள். இன்று இரவு எட்டரை மணிக்கு உன் கடத்தல் பற்றிய தகவல் வந்த நிமிஷம் அந்த சந்தேகம் காணாமல் போய் விட்டது. இப்போ எனக்கு உறுதியா தெரியும். எங்க வீட்டில் பிரச்னை இருக்காது. நான் இன்று இரவே, அம்மாவிடம் பேசி விடுவேன்...''

''ஒரு வேளை அவங்க வேறே ஒரு பெண்ணை பார்த்து வைத்து இருந்தால்...''



''வைத்து இருந்தால் என்று கேள்வி கேட்காதே. வச்சு இருக்காங்க. அதை சொல்லத்தான் ஒரு வாரமா எனக்கு போன் பண்ணிட்டே இருக்காங்க. அவங்க அப்படி சொன்னால், அவங்களை எப்படி வழிக்கு கொண்டு வருவது என்று எனக்குத் தெரியும்...''

''அவங்க ஏற்கனவே பெண் வீட்டில் வாக்கு கொடுத்து இருந்தால் அது பற்றி உங்களுக்கு அக்கறை இல்லையா?''

''என்னை கேட்காமல் என் விஷயத்தில் வாக்கு கொடுத்தால் அதை பற்றி நான் ஏன் கவலை பட வேண்டும்?''

''உங்க அம்மா உங்க மேல் வைத்த நம்பிக்கையின் பேரில் கொடுத்து இருக்கலாம் இல்லையா? அதை எப்படி தப்பு சொல்ல முடியும்?''

''இதென்ன விதண்டாவாதம்? என் வீட்டை நான் பார்த்துகொள்கிறேன். நீ உன் வீட்டை பற்றி மட்டும் கவலைப் பட்டால் போதும். உங்க வீட்டில் யார் இருக்காங்க?''

''நானும் எங்க அம்மாவும் மட்டும் தான். அவங்களுக்கு என் விருப்பம் தான் முக்கியம்...''

''ஓ! அப்பா...'', என்று கேள்வியாக நிறுத்தினான்.

''நான் ஆறு மாத குழந்தையாக இருக்கும்போதே இறந்து விட்டார்கள். அம்மா தான் தனியா, படிப்பறிவு கூட இல்லாமல் கஷ்டப்பட்டு படிக்க வைத்து ஆளாக்கி...''

''தனி ஆளாக உன்னை ஆளாக்கி, தன்னம்பிக்கையுடன் இந்த உலகத்தில் உலவ விட்டு இருப்பதை நினைத்தால் பெருமையா இருக்கு ராதிகா. அம்மா

தனியா இருப்பாங்களே? கிளம்பலாமா? நாளைக்கே நான் அம்மா அப்பாவை உங்க வீட்டுக்கு வந்து பேச சொல்கிறேன். அட்ரஸ் சொல்கிறாயா?'', என்று அவன் முடிக்க அவள் சத்தமாக சிரித்தாள்.

''அட்ரஸ் சொல்லணுமா? மத்தியானம் என்னவோ சேலஞ் பண்ணின மாதிரி இருக்கு?''

''இன்னும் ஐம்பது வருடம் நீடிக்கக் கூடிய என் எதிர் கால வாழ்க்கையையே உன் கையில் ஒப்படைக்கலாம் என்று முடிவு பண்ணின பிறகு நமக்குள் வெற்றி தோல்வி என்ன தனியாக வேண்டி கிடக்கு? உன்னிடம் தோல்வி அடைவதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. இப்போதும். எப்போதும்.'' என்று உறுதியான குரலில் சொன்ன கண்ணனை பிரமிப்புடன் பார்த்தாள்.

அலுவலக வேலை மட்டுமில்லாமல் தான் செய்யும் எந்த ஒரு சின்ன காரியத்திலும் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவேன். 'உன்னை விருப்பம் இல்லாமல் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். பண்ணிக் கொண் டால் உன்னை தன் உயிரினும் மேலாக மதித்து கண் ணுக்குள் வைத்து வைத்து காப்பாற்றுவான்...' இதைத் தான் அம்மா சொன்னார்கள்.

அது தன் மகன் என்ற எண்ணத்தில் பெருமையாக சொன்ன வெறும் பேச்சு இல்லை. இனிமேல் இவனை காக்க வைப்பதில் அர்த்தம் இல்லை. ராத்திரி வீட்டுக்கு போனதும் கலாவதி அம்மாவிற்கு போன் பண்ணி சொல்லி விட வேண்டியதுதான்.

''ஹேய்! என்ன அப்படி பார்க்கிறாய்? நம்பலையா? நான் நினைக்காததை சொல்வதில்லை. அட்ரஸ் சொல்



கிறாயா?'' என்று சொன்ன போது அவன் போன் ஒலி எழுப்பியது. எதிர்முனையில் அழைத்தது ராஜமோகன்.

''ராஜ்...'', என்று சொல்லும் போதே, வினாடியில் காவல்துறை உயர் அதிகாரியாக மாறி இருந்தான் கமலக் கண்ணன்.

''சார் டிரைவ் பண்றீங்களா?''

''இல்லை ராஜ். எங்கே இருக்கிறாய்? ஏதாவது பிரச் னையா?''

''ஒரு பிரச்னையும் இல்லை சார். ஜி.ஹெச்-ல இருக் கேன் சார். கதிரவனை அட்மிட் பண்ணியாச்சு. மூனு பசங்களும் நடந்த எல்லாவற்றையும் வாக்குமூலம் கொடுத் துட்டாங்க. கேஸ் க்ளியரா இருக்கு. குற்றம் நடந்ததற்கு காரணம், நடந்த விதம், சாட்சியங்கள் எல்லாமே ரெடி. நாளை காலை பத்து மணிக்கு ப்ரெஸ் மீட் வச்சுக்கலாமா என்று கேட்க போன் பண்ணினேன்...''

''இல்லை ராஜ். நாளை காலை வேண்டாம். எனக்கு வேறே ஒரு முக்கியமான வேலை இருக்கு. அம்மா அப் பாவை ஊரில் இருந்து வர சொல்லப் போகிறேன். நாளை மாலை நான்கு மணிக்கு வைத்து கொள்ளலாம். ரெடி பண்ணிடுங்க ராஜ்...''

''நிச்சயம் சார். அம்மா அப்பா வருவது ஏதாவது நல்ல விஷயமா சார்...''

''உங்க கெஸ் எப்போதுமே ஏமாற்றம் தருவதில்லை ராஜ்...''

''கங்க்ராட்ஸ் சார். மேடம் நல்லா இருக்காங்களா சார்? வீட்டுல விட்டாச்சா?''

''நல்லா இருக்காங்க ராஜ். பேசிட்டு இருக்கோம். இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல கொண்டு போய் விட்டு விடுகிறேன்...''

''பத்திரம் சார்...'' என்று அக்கறையாக எச்சரிக்க. அவன் 'ஓகே சார்' என்று சிரித்து விட்டு போனை வைத்தவன், ''ராஜ் உன்னை வீட்டில் விட்டாச்சா என்று அக்கறையாக கேட்கிறான். இல்லை என்று சொன்னால் உயர் அதிகாரி என்று கூட பார்க்காமல் உனக்காக என்னையே மிரட்டுகிறான்'' என்று சிரித்தான்.

''உங்க மேல் அவருக்கு அவ்வளவு நம்பிக்கையா?'', என்று அவனை கேலி செய்து ராதிகாவும் அவனுடன் சேர்ந்து சிரிக்க அவன் ஆர்வத்துடன் பார்த்தான். சிரிக்கும் போது எவ்வளவு அழகாக இருக்கிறாள்? அப்படியே கடித்து தின்று விடலாம் போல...

''கண்ணா... கிளம்பலாமா?'' என்று அவனின் ஆர்வ மான பார்வை தன்னுள் விளைவித்த ரசாயன மாற்றங் களை மறைக்க முயன்றபடி இழுத்தாள் ராதிகா.

''ம்ம்ம்... கிளம்பலாம்...'', என்றவன் கரங்கள் தப்பி தவறி கூட ஸ்டியரிங் பக்கம் செல்லவில்லை.

''ஹேய்! இ..ந்..த மா..தி..ரி நேரத்தில், 'இப்படி பார்த்தால் என்ன அர்த்தம்?'' என்றவளின் குரல் கிசு கிசுப்பாக மாறி இருந்தது.

''நீ ரொம்ப அழகா இருக்கிறாய் என்று அர்த்தம். உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சு இருக்கு என்று அர்த்தம். உன்னை கொண்டு போய் வீட்டில் விட இஷ்டம் இல்லை என்று அர்த்தம்...'', என்று ஒவ்வொரு வாக்கியத்திற்கும் குரல் மேலும் மேலும் குழைய அவளை அவன் நெருங் கியபோது மீண்டும் அலைபேசி அழைத்தது.



இம்முறை மதுராந்தகத்தில் இருந்து அழைப்பு வந்து இருக்க, 'ஹைய்யோ அம்மா' என்று அதுவரை இருந்த மயக்கம் நொடியில் மறைய பதற்றத்துடன் விலகி போனை எடுத்தான் கமலக்கண்ணன்.



## 18

நூறு கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் அம்மா விடம் இருந்து போன் வந்ததற்கே, தன்னிடம் நெருங் கியது அதிகப்படியோ என்ற எண்ணத்தில் துள்ளி விலகி, 'ஹைய்யோ அம்மா...', என்ற கமலக்கண்ணனின் பதட்டம் ராதிகாவிற்கு பிடித்து இருந்தது. பிறந்தது முதலே கூட வளர்ந்த ஒழுக்கத்தை எடுத்து காட்டியதால் புன்னகை மலர, அவன் அம்மாவிடம் என்ன பேசுகிறான் என்பதை கேட்க ஆவலாக காத்து இருந்தாள்.

''ஹலோ அம்மா, மணி பதினொன்று ஆகுது. இன்னுமா தூங்கலை?'', என்று கனிவாக விசாரித்தான்.

''அதெப்படி தூங்குவது? நைட் எத்தனை மணி ஆனாலும் சரி, உன்னிடம் பேசி ஒரு முடிவு எடுக்காமல் இன்று தூங்குவதில்லை என்று நான் காத்திருக்கின்றேன். அது சரி, நீ பேசுகிறேன் என்று சொன்னாயே? ஏன் பேசவில்லை? இன்னுமா ஆபீஸ் வேலை முடியலை?'', என்று உறுதியான குரலில் அதட்ட அவன் அவசரமாக குரலை தணித்தான்.

''அம்மா, இப்பதான் வேலை முடிந்து வீட்டுக்கு போகிறேன். கடிகாரம் பார்த்துட்டே இருங்க. சரியா

இன்னும் இருபது நிமிஷத்துல உங்களுக்கு நான் பேசுகிறேன். அப்பா தூங்கியாச்சா? அவங்களையும் இருக்க சொல்லுங்க. இப்ப வச்சுடறேன்மா. ப்ளீஸ்...'', என்று போனை வைத்தவன் புன்னகையுடன் காரை கிளப்பினான்,

''உன்னை வீட்டுல விட்டுட்டு அம்மாவிடம் இன்றே பேசி விடுவேன். சம்மதிப்பாங்க என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. நாளைக்கு காலை நாங்க உங்க வீட்டுக்கு வரலாமா? அதற்குள் நீ உங்க அம்மாவிடம் பேசி விடுவாயா?'' என்று கேட்ட கமலக்கண்ணனை பார்த்துப் புன்னகைத்தாள்.

''தெரியலை... முயற்சி பண்றேன்...''

''முடியல்ல என்றாலும் கவலைப்படாதே. உங்க அம்மாவை எங்க அம்மா சரி பண்ணிடுவாங்க. நாளைக்கே எல்லாம் முடியணும் என்ற அவசியமும் இல்லை. உங்க அம்மா சம்மதிக்கும் வரை காத்திருக்கலாம். நாளைக்கு ஒரு பிள்ளையார் சுழி போட்டு வைப்போம். ஓகே தானே? இல்லை நாளைக்கு நான் மட்டும் முதலில் வந்து உங்க அம்மாவிடம் பேசிட்டு அப்புறம் அவங்களை வர சொல்லவா?'', என்று இரு மனதாக கேட்டவனின் குழப்பம் புரிந்தது.

தன் தாயால் அவனின் பெற்றோருக்கு கௌரவ குறைச்சலாக ஏதாவது நிகழ்ந்து விடக்கூடாது என்று நினைக்கிறான். 'சோ ஸ்வீட் கண்ணா நீ! ஐ லவ் யு', என்று மனதிற்குள் கொஞ்சிய ராதிகா, வெளியே ஒன்றும் சொல்லவில்லை.

''நீ ரொம்ப டென்ஷனா இருக்கிறாய் என்று நினைக்கிறேன். மணி பதினோரு மணிக்கு மேல் ஆகாமல் இருந்தால் இப்ப நானே உங்க வீட்டுக்கு வந்து உங்க அம்மாவிடம் பேசி இருப்பேன். ப்ச் ரொம்ப லேட் ஆகிடுச்சே. நீ சமாளிப்பாயா?'', என்று கவலையுடன் கேட்டவனை பார்க்கச் சிரிப்பு பொங்கியது.



இதே ரீதியில் அவன் பேசினால் தன்னால் சிரிப்பை அடக்க முடியாது. அவன் பேசப் பேச பாவமாகவும் இருந்தது. ஆனால் நாளை வரை இழுத்தால் என்ன என்ற ஆசையும் தோன்ற அவன் பேச்சை மாற்றினாள்.

''என்ன கேஸ் கண்ணன் இது? ரொம்ப பெரிய இடமோ? உங்களை மிரட்ட லீவு போட்டுட்டு போக சொன்னாங்களே? யார் அது?''

''உன்னை அழைத்து சென்ற கதிரவன் தான் அந்த கூட்ட ஹெட். அவன் நம்ம பழைய எப்.எம் கிட்ட பீ.ஏ மாதிரி இருந்து இருக்கிறான்.

''எப்.எம். மகாதேவன் தானே? ஏன் பழைய என்று சொல்றீங்க?''

''அவர் மேலே குற்றம் சுமத்துவது மாதிரி கேஸ் போகிறதை அறிந்த உடனே டீசண்டா ரிசைன் பண்ணிட்டார். அந்த மாதிரி ஆட்கள் இன்றைய அரசியலில் ரொம்ப கம்மி தான்..''

''ஓ! அவர் மேலே பழியைப்போட முயற்சி செய்தது கதிரவனா? எதிரிகள் கூட பரவாயில்லை. நம்பிக்கை துரோகிகளுக்கு மன்னிப்பே கொடுக்கக் கூடாது கண்ணன்...''

''அவனுக்கு உரிய தண்டனை வாங்கித் தர கேஸ் ஸ்டராங்கா இருக்கு. ஆனால் கதிரவன் க்ரூப் உன்னை

ஏன் கடத்தினாங்க என்றே எனக்குப் புரியலையே?'', என்று அப்பாவியாகச் சொன்னவனைப் பார்த்து பொங்கிய சிரிப்பை அடக்கினாள்.

''ஒரே நாளில் நாலு இடத்தில எட்டு தடவை மீட் பண்ணி மணி கணக்கில பேசினால் எல்லோர் கண்ணையும் தான் உறுத்தும். உங்க மனசுல இருப்பது கண்ணில் காதலா பொங்கி வழிந்ததோ என்னவோ? நாம் மீட் பண்ணியது எல்லாம் வேறு வேறு இடமாச்சே? எல்லாமே அவங்களுக்கு எப்படித் தெரிந்தது? நம் இருவரையும் தொடர்ந்து வந்தார்களா?''

''நாம் இன்று சந்தித்த மூன்று இடங்களுமே அந்த கதிரவன் பினாமி பெயரில் நடத்தும் தொழில்கள் தான். அதெல்லாம் இப்போ விசாரணையில் கண்டு பிடித்தோம். இந்த மூன்று இடங்களுமே கொலையில் சம்பந்தப்பட்டு இருக்கிறது.''

''என்னால நம்பவே முடியலை கண்ணன். நிஜமாவா சொல்றீங்க? என்னதான் நடந்தது?''

''நான் ஏன் உன்னிடம் பொய் சொல்லணும். எப்.எம்-க்கு வெளி உலகத்துக்கு தெரியாத ஒரு மனைவியும் ஒரு மகனும் இருந்தாங்க. அந்த பையனுக்கு லவ். அந்த பெண்ணை அவரிடம் காட்ட அந்த ஹோட்டலில் சந்திக்க ப்ளான் பண்ணி இருந்தாங்க. அதுக்கு முன்னாடி அவங்களுக்கு ஏதாவது பரிசு வாங்கி தர பீ.ஏ.வை அவங்களோடு அனுப்பி வச்சு இருக்கார். அமைச்சர் வருஷத்துக்கு நாலு தடவை இந்த மனைவி மகனுக்கு ஏதாவது நகை பரிசளிப்பார் போல...''

''ஆஹா! வருஷத்துக்கு நாலு தடவை நகையா? கொடுத்து வச்சவங்க தான்...''



''ப்ச்! என்ன ராதிகா இப்படி சொல்லிட்ட? நகையா பெரிசு? ஊர் உலகத்துல அவங்க தலை நிமிர்ந்து...''

''அடடா! சும்மா கேலிக்கு சொன்னேன்பா. நீங்க ஏன் இவ்வளவு சீரியஸா எடுத்துக்கறீங்க? நீங்க எனக்கு நகை வாங்கித் தரணுமே என்று பயப்பட வேண்டாம்...''

''நான் என்ன சொன்னால் நீ எங்கே போய் விட்டாய்? நம் வருமானத்திற்குத் தகுந்த மாதிரி வாங்கலாம். நான் நகை வாங்கித் தர மாட்டேனா என்று நீ பயப்பட வேண்டாம்...''

''ப்ச்! உங்களிடம் கேலி பேசவே கூடாதா? ஒவ்வொண்ணுக்கும் பக்கம் பக்கமா விளக்கம் சொல்றீங்க. நம்ம கதை அப்புறம் வச்சுக்கலாம். நீங்க எப்.எம் கதைக்கு போங்க...''

'எப்.எம் காசுல ஒவ்வொரு முறையும், அதுல கமிஷன் அடிச்சு ருசி கண்டு இருக்கார். அவர்களுக்குள் அடிக்கடி பேச்சு வார்த்தை சந்திப்புகள் நிகழாததை கணக்கிட்டு இந்த மாதிரி செஞ்சு இருக்கார். அதே பாணியில் இந்த முறை அவர் பையன் ராகுல், மற்றும் அவன் லவ் பண்ற பொண்ணு ராகினி இரண்டு பேருக்கும் இரண்டு மோதிரம் மட்டும் வாங்கிட்டு, கூடவே ஒரு வைர நெக்லஸ் அடிக்க முயற்சி பண்ணி இருக்கிறார். இதை அந்த பொண்ணு கையும் களவுமா பிடித்து விட்டாள்...''

''சோ ஸ்மார்ட். எப்படி கண்டு பிடித்தாள்?''

''மோதிரம் அளவு சரியா இல்லை என்று மாற்ற திரும்பி அதே கடைக்கு சில மணி நேரத்தில் திரும்பி போய் இருக்கிறாள். அப்போ அங்கே வைர நெக்லசை

திருப்பி கொடுத்து விட்டு பணத்தை தனி அக்கவுண்டுக்கு மாற்ற கடைக்காரருடன் கதிரவன் பேசிய பேச்சை கேட்டு விட்டாள்...''

''அச்சோ... அதுக்காக அந்த பெண்ணை கொன்றே விட்டானா? மை காட்!''

''அந்த பெண்ணிடம் எப்.எம் அதை வாங்கி ராகுலுக்கும் அவங்க அம்மாவுக்கும் தெரியாமல் தனியா இவளிடம் கொடுக்கச் சொன்னதா அவரைப் பற்றித் தவறா திரித்து சொன்னதும் இல்லாமல், அவரோ அந்த அம்மாவோ, அந்த பையனோ சொல்லாத உண்மையைத் தேவை இல்லாமல் ராகினியிடம் போட்டு உடைத்து, அவளை எப்.எம்மிடம் சண்டை போட வைத்து விட்டான். இந்த வாக்குவாதம் நடந்தது ஹோட்டலில்...''

''அதனால் அவருக்கு என்ன பலன்? புரியலையே?''

''ஒரு பொது இடத்தில் இருவருக்கும் வாக்குவாதம் நடந்த பின்பு, அவள் இறந்தால் யார் மீது சந்தேகம் வரும்? கொல்ல திட்டம் போட்டது மட்டுமில்லாமல், அந்தப் பழியை எப்.எம் மேலே போட திட்டம் போட்டு, வேலை செய்து இருக்கான்...''

''அது சரி, இதுல ராகுல் நடுவில் எங்கே வந்தான்? அது போக அந்த லாரி விபத்து வேறே சொன்னீங்களே? அவரை ஏன் கொன்னாங்க?''

''ராகுல் நிலைமை துரதிர்ஷ்டவசமானது. ராகினியை நகை கடைக்கு மறுநாள் ராகுல் வர சொன்னது மாதிரி மீண்டும் வரவைத்து, அவனுடைய ஆட்கள் மூலமாக மெல்ல கொல்லும் விஷம் கலந்த குளிர்பானம் கொடுத்து இருக்கிறான். அவள் மறுக்கவே அதை தனியாக ஒரு



பாட்டிலில் ஊற்றி கொடுத்து இருக்கிறான். வெகு நேரம் காத்திருந்தவள் கிளம்பும் முன்பு அவனுக்கு போன் பண்ணி இருக்கிறாள். நான் வர சொல்லவில்லையே என்ற குழப்பத்துடன் அவன் வந்து, அவளோடு சேர்ந்து ஆட்டோவில் திரும்பும் போது, விஷயம் தெரியாமல் அந்த குளிர்பானத்தை இருவரும் சேர்ந்து குடித்து விட்டனர்...''

''இது தான் உண்மையான காதல் போல? சேர்ந்து வாழ முடியவில்லை என்று சேர்ந்து சாக வைத்து விட்டாரா கடவுள்?''

''அது கதிரவன் எதிர்பார்க்கவில்லை. ராகினியின் மரணம் மட்டும் என்றால் எப்.எம் மேலே பழியை போடலாம். ராகுலின் மரணத்தை எப்படி மறைப்பது? அதனால் ப்ளான் பண்ணி, இரண்டு நாட்கள் ராகுலின் பாடியை வெள்ளி இரவில் இருந்து சனி இரவு வரை அந்த மினி கான்பரன்ஸ் ஹாலில் புல் ஏசி போட்டு வைத்து இருந்து இருக்கிறான். சனிக்கிழமை அந்த ஏரியாவில் போலீஸ் நடமாட்டம் அதிகம் இருந்ததால், அவனால் ராகுலின் பாடியை எடுத்துச் செல்ல இயலவில்லை. ஞாயிறு அதிகாலை, கொண்டு போய் புதைத்து விட்டு, உங்களின் நிறுவனம் மூலம் தளம் போட்டு விட்டான். அதற்கான பில் இன்று மாலையில் காண்பித்தாயே? ராகுலின் பாடியை அந்த கார்ப்பெட்டில் சுற்றி எடுத்து சென்று இருக்கிறான். எப்.எம் வீட்டுக்கு என்று ராகவா எம்போரியத்தில் போட்ட பில்லையும் அந்த வண்டியில் சேர்த்து அனுப்பி இருந்தால், வழியில் யாரும் தோண்டி துருவ மாட்டார்கள் என்ற நப்பாசை.

''ஆஹா! காலையில் அந்த ஹார்ட்வேர் ஸ்டோர்ஸில் கம்பளம் ஏதோ பார்த்தீங்க போல. அது எதுக்கு?''

''அந்த ஸ்டோர்ஸில் பகலிலும், தேவை ஏற்படும் நாட்களில் ஹோட்டலிலும் வேலை செய்து இருக்கிறார் ராகினியின் அப்பா. கஷ்டப்பட்டு வேலை செய்து பெண்ணை படிக்க வைக்க வேண்டும் என்று முயற்சி செய்தவர், தன் பெண்ணை ஒரு பையனோடு ஹோட்டலில் கல்லூரி நேரத்தில் பார்க்கவே அவர் பதறி விட்டார். அந்த பதட்டத்தில் கையில் இருந்த ஜூஸ் ட்ரேயை போட்டு உடைத்து விட்டு, அவர் மகளை திட்டி விட்டு, வாழ்க்கையை வெறுத்து திரும்பி விட்டார். அந்த கம்பளத்தை ஹோட்டலில் மாற்ற புதிதாக ஆர்டர் பண்ணியதும் இல்லாமல் அந்த செலவை எப்.எம் தலையில் கட்ட அவர் பெயரில் ஆர்டர் செய்து இருக்கிறார்...''

''ஓஹோ! இப்ப புரியுது அடுத்த நாள் மகளின் மரணம் பற்றி அறிந்த உடனே எப்.எம்மை நேரே பார்க்க அந்த மாரியப்பன் முயற்சி செய்து இருக்கிறார். இவரே அங்கே இருந்ததால் முடியவில்லை. மகளின் மரணத்திற்கு இவர்தான் காரணம் என்று ரொம்ப சண்டை போட்டதனால் அவரையும் போட்டுத் தள்ளிட்டாரா கதிரவன்...?''

''நீயும் போலீஸ் டிபார்ட்மெண்டில் சேர்ந்து விடலாம் ராதிகா. செமையா கெஸ் பண்ணுகிறாய். இதுக்கு நடுவில் ராகினி எழுதிய கடிதத்தில் எப்.எம் மகன் ராகுல் என்பதை கதிரவன் தெரிவித்ததாக சொல்லி இருப்பதை அவங்க அம்மா சொல்லி இருக்காங்க. கதிரவன் மேலே போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கப் போன மாரியப்பனின் புகார் குப்பை கூடைக்கு போய் விட்டது. அவரை காணோம் என்று லாட்ஜில் உடன் வசித்தவர்கள் கொடுத்த புகார் நடவடிக்கை இல்லாமல் புதைந்து போய் விட்டது...''



''ஹூம்! போலீஸ் டிபார்ட்மெண்டில் இப்படியும் சில ஆட்கள்! என்னத்தை சொல்ல...?''

''அப்படி பொதுவா சொல்ல முடியாது ராதிகா. இதே துறையில் தான், ராஜ், ரியாஸ், ராபர்ட் மாதிரி கோடு போட்டால் ரோடு போடும் சுறுசுறுப்பான இளைஞர் பட்டாளம் இருக்காங்க.. அது சரி, இன்று இரவு முழுவதும் ஜீப்பில் உள்ள டீசல் தீரும் வரை, நல்லா கதை கேட்ட படி நகர் வலம் வர திட்டமா? வீடு எங்கே இருக்கு என்று சொல்ல வேண்டாமா?'' என்று கேலியாகக் கேட்ட பின்பே பாதையை கவனித்தவள் பதறினாள்.

''ஹேய்! லெப்டில திரும்பணும்...'' என்று அவசரமாக சொல்ல அவன் புன்னகையுடன் ரிவர்சில் வந்தான்.

''அந்த ஜே பீ ஜுவல்லரி ஷாப் பக்கத்துல மூன்றாவது பில்டிங். நாலு மாடி கட்டிடம்...'' என்று சொல்ல அவன் கேலியாக சீட்டி அடித்தான்.

''ஓஹோ! அதான் மேடம் கரெக்டா மதியம் வந்தீங்களா? நான் இங்கே வருவதை யாரிடமும் சொல்லவே இல்லையே? எப்படி தெரிந்தது என்று நினைத்தேன்...''

''அஞ்சு மணிக்கு ரிசப்ஷன் கிளம்பும் போது வந்து கிப்ட் வாங்கிக்கலாம் என்று முதலில் ப்ளான் பண்ணி இருந்தேன். அப்புறம் உங்க ஜீப் பார்த்த உடனே உங்களை பார்க்கலாம் என்று கிளம்பி வந்தேன்.'' என்று சொன்னவளின் குரல் உள்ளே போய் இருந்தது.

''ம்ஹூம்...! இந்த ட்விஸ்ட் நான் எதிர்பார்க்கவே இல்லையே? நைஸ்...'' என்று கண் சிமிட்ட அவள் புன்னகைத்தாள்.

''இது என்ன ட்விஸ்ட்? இதுக்கு மேலே ட்விஸ்ட் எல்லாம் வர போகுது...''

''ரியல்லி? அப்படியே இருந்தாலும் அது சந்தோஷமான சமாசாரம் போல தான் தெரியுது. இல்லை என்றால் உன் முகத்தில் இவ்வளவு மலர்ச்சியும் சிரிப்பும் இருக்க முடியாது. அது வரும் போது பார்த்துக்கலாம். வீடு வந்தாச்சு. நீ இறங்கிக்கோ'' என்று ஜீப்பை நிறுத்தினான்.

''இவ்வளவு தூரம் வந்து விட்டு இப்படியேவா கிளம்பறீங்க? உள்ளே வந்து அம்மாவை பார்த்துட்டு போங்களேன்...''

''இப்ப வேண்டாம் ராதிகா. வருங்கால மாமியாரை இப்படியா அழுக்கு யூனிபார்மில், ஒரு நாள் முழுக்க வேலை நிமித்தமா அலைந்த களைப்பான முகத்துடன் பார்ப்பது. காலையில் பிரெஷா வந்து பார்க்கிறேன். ஓகே?''

''ம்ம். ஓகே, பை குட்நைட்....'

''இவ்வளவு தூரம் ரிஸ்க் எடுத்து உடனே உன்னை கண்டு பிடித்து ஹாஸ்பிடலுக்கு அழைத்து போய் சிகிச்சை அளித்து, இப்ப வீடு வரை கொண்டு வந்து டிராப் பண்ணி இருக்கேன். வெறும் குட்நைட் தானா?'', என்றவனின் குரலில் சிரிப்பு இருந்தது.

''ம்ம்ம். வேண்டுமானால் ஸ்வீட் ட்ரீம்ஸ் சேர்த்துக் கோங்க. ஆனால் தூங்கப் போகும் முன்னால் உங்க



அம்மாவிடம் பேச மறக்காதீங்க. அப்பத்தான் ஸ்வீட் ட்ரீம்ஸ் வரும் ஓகே?'' என்று அவள் கண் சிமிட்ட, அவன் புன்னகையுடன் தலை அசைத்து விட்டு கிளம்பி னான்.



# 19

ராதிகாவை வீட்டில் இறக்கி விட்டு விட்டு கிளம்பிய கமலக்கண்ணன் கை திருப்பி மணி பார்த்தான். பதினொன்றரை ஆகி இருந்தது. வீட்டுக்கு போக இன்னும் பதினஞ்சு நிமிடம் ஆகுமே? இங்கேயே பேசினால் என்ன? அட்லீஸ்ட் அம்மா அப்பா சீக்கிரம் தூங்க போவாங்களே என்று நினைத்தவன் வண்டியை ஓரம் கட்டி நிறுத்தினான். அவன் அழைத்த உடனே முதல் ரிங் முடியும் முன்பே போன் எடுக்கப் பட்டு இருந்தது.

''அடேங்கப்பா! அம்மா என்னவோ சொல்கிறாளே? அதை என்ன என்று தான் கேட்போமே என்ற எண்ணம் பத்து நாள் கழித்து சாவகாசமா தோன்றி விட்டதா? ரொம்ப சந்தோஷம்...'', என்ற உற்சாகமான கலாவதியின் குரல் கேட்டது.

''இனிமேல் தினமும் இரண்டு முறை, காலையிலும் இரவிலும், இரண்டு நிமிஷமாவது நானாக போன் பண்ணி ஏதாவது விஷயம் இருக்கா என்று கேட்பேன். இதை தவறாமல் கடைபிடிக்கிறேன் என்று நான் உங்களுக்கு சத்தியம் செய்து தருகிறேன் போதுமா?''

''சோழியன் குடுமி சும்மா ஆடாதே! என்ன திடீர் என்று அம்மாவை தினமும் நலம் விசாரிக்கிறேன் என்று சத்தியம் எல்லாம் செய்கிறாய்? என்ன விஷயம்?''

''அம்மா சந்தோஷமா இருப்பது முக்கியம் இல்லையா? இதுக்கு எல்லாம் காரணம் சொல்ல முடியுமாம்மா? ஆல்வேஸ் ஐ லவ் யு.''

''டேய்! டேய்! நான் உன் அம்மாடா, நீ எந்த நேரத்துல எப்படி பேசுவது என்று எனக்குத் தெரியாது? என்ன விஷயம் சொல்லு? என்னவோ பெரிசா கேட்கப் போகிறாய் என்பது மட்டும் நிச்சயமா தெரியுது.''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லைம்மா. நீங்க ரொம்ப நாளா என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கேட்டுட்டே இருந்தீங்களே...'', என்று இழுத்தவன் ஒரு இடைவெளி விட்டான்.

''ஆமா! பத்து நாளைக்கு முன்னாடிக் கூட உனக்கு ஒரு பொண்ணு போட்டோவும் பயோடேட்டாவும் அனுப்பி இருந்தேன். அந்தப் பெண்ணை இன்று பார்க்க வருகிறோம் என்று கூட அவங்களிடம் சொல்லி இருந்தேன். எங்கே நீ அசைந்தால் தானே? நாளைக்கு வரோம் என்று சொல் லட்டுமா?''

''நாளைக்கு நாம் பொண்ணு பார்க்க போகலாம் அம்மா. ஆனால் அந்த பொண்ணு வேண்டாம் நான் வேறே ஒரு பெண்ணை...'', என்று ஆரம்பிக்கும் முன்பே கலாவதி யின் கோபமாக குரல் இடையிட்டது.

''என்ன கொழுப்பா? என்னடா இத்தனை நாள் இல் லாமல் திடீர்னு பதினோரு மணிக்கு போன் பண்ணி குழையுறானே என்று நினைத்தேன். கடைசியில இதுக்கு





தானா? ஏண்டா, நீயே சொல்லு. நீ யாரையாவது விரும் புகிறாயா என்று உன்னை நாங்க எத்தனை வாட்டி கேட்டு இருப்போம்? அப்ப எல்லாம் வாயில் கொழுக்கட்டை அடைச்சு வச்சு இருந்துட்டு இப்ப வந்து இந்த பொண்ணு வேண்டாம் அந்த பொண்ணு வேண்டாம் என்று சொன் னால் என்ன அர்த்தம்?''

''இதென்னம்மா வம்பா போச்சு? நான் மனசுல ஒண்ணு வச்சு வெளியே அதை மறைச்சு பேசும் ஆள் இல்லை. இன்னிக்கு இந்த பெண்ணை பார்ப்போம். அவளை பிடிக்கும் என்று பத்து நாள் முன்னாடியே ஊகித்து சொல்ல நான் என்ன ஜோசியரா? இன்னிக்கு காலையில் தான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். பிடித்து இருந்தது. ராத்திரியோட ராத்திரியா உங்களிடம் சொல்லலையா? நான் சொல்வதையே காது கொடுத்து கேட்காமல்...''

''காது கொடுத்துக் கேட்பதைப் பற்றி நீ பேசுற பார். அதான் இந்த உலகத்திலேயே பெஸ்ட் காமடி.''

''ப்ச் அம்மா! அப்பா கிட்டே கொடுங்க. நான் அவங் களிடம் பேசுகிறேன்...''

''ஓஹோ! உங்க அப்பா சரி என்று சொல்லி விட்டால், என்னை கேட்காமல் நீ உனக்கு பிடித்த பெண்ணை கல்யாணம் பண்ணி கொள்வாயா?''

''என்னம்மா நீங்க? யார் அந்த பொண்ணு? என்ன செய்கிறாள்? வீடு குடும்பம் எப்படி? ஏதாவது கேள்வி கேட்டுட்டு பிடிக்கும் பிடிக்கலை என்று அபிப்ராயம் சொன்னால் பரவாயில்லை. நீ காதலிக்கிறாயா? அதை நான் காதுலயே போட்டுக்க மாட்டேன். நான் சொல்ற பெண்ணை கல்யாணம் பண்ணிக்கோ என்று சொன் னால் எப்படி? கல்யாணம் பண்ணிட்டு வாழ போகும் என் அபிப்ராயம் அப்ப முக்கியம் இல்லையா?''

''உன் அபிப்ராயம் கேட்கிறேன். நாளைக்கு காலையில் ஆறு மணிக்கு நாங்க ரெண்டு பேரும் கிளம்பி அங்கே வரோம். ஒன்பது மணிக்கு அவங்க வீட்டுக்கு போறோம். வந்து பெண்ணை பாரு. பார்த்துட்டு பிடிக்கலை என்றால் சொல்லு என்று தான் நானும் சொல்றேன்'' என்று சொன்ன கலாவதியை கோபமாக இடையிட்டான்.

''ம்! அதையே தான் நானும் சொல்றேன். நீங்க சொன்ன மாதிரியே காலையில் ஆறு மணிக்கு கிளம்பி வாங்க. நாளைக்கு நீங்க சொன்ன அதே ஒன்பது மணிக்கு நான் சொல்லும் பெண் வீட்டுக்குப் போவோம்...''

''டேய்! உனக்கு என்னைப் பற்றித் தெரியாது. அவங்க ரொம்ப கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்த குடும்பம். நான் ஏற்கனவே அந்த பொண்ணு வீட்டுல வாக்கு கொடுத்துட்டேன். அதை மாற்ற முடியாது. அவங்க வீட்டுக்குப் போறோம். அங்கேயே அப்படியே நிச்சயம் பண்ணுறோம். அடுத்த பத்து நாளில் ஒரு முகூர்த்த நாள் பார்த்து கல்யாணம் முடிக்கிறோம். அவ்வளவுதான்...''

''அவள் என்னோடு சந்தோஷமா குடும்பம் நடத்தணும் என்ற அவசியம் இல்லை என்றால் தாராளமா கல்யாணம் முடிக்கலாம். அப்படியே கல்யாணம் முடிச்ச கையோடு உங்களுக்கு ரொம்பப் பிடிச்ச அந்தப் பெண்ணை கூட்டிட்டுப் போய் நீங்க மதுராந்தகத்துல பத்திரமா வச்சுக்கோங்க...'' என்று ஆத்திரமாகக் கமலக்கண்ணன் சொல்லும்போதே அப்பாவின் குரல் கேட்டது.

''ஹேய் கண்ணா! உங்க அம்மாவும் அவளோட மருமகளும் சேர்ந்து உனக்கு எதிரா ப்ளான் பண்ணி, டிராமா போடுறாங்க. அது புரியாமல் அம்மாவோடு விவாதம் பண்ணி உன் நேரத்தை வேஸ்ட் பண்ணாதே...'' என்ற அப்பாவின் வாக்கியம் முடியும் முன்பே போன் வைக்கப்பட்டு இருந்தது.



என்ன! அப்பா என்ன சொன்னார்? அப்பாவின் குரலில் என்ன அவ்வளவு சந்தோஷம்? இவ்வளவு நேரம் நான் பேசியதை கேட்டாரா இல்லையா? கேட்டிருக்க வேண்டும். இல்லை என்றால் அம்மாவிடம் விவாதம் செய்யாதே என்று எப்படி சொல்வார்?

சும்மா பொதுவா சொல்லி இருப்பாரோ? இல்லை இல்லை. 'மருமகளுடன் சேர்ந்து கொண்டு எனக்கு எதிராக திட்டமிட்டு...' என்றால் என்ன அர்த்தம்? அவசரமாக போனில் பத்து நாட்களுக்கு முன்பு அப்பா அனுப்பி இருந்த பெர்சனல் மெயிலை திறந்து பார்த்தால் அங்கே பயோடேட்டாவோடு இணைத்து இருந்த புகைப்படத்தில் சிரித்து கொண்டு இருந்தது சாட்சாத் ராதிகாவே தான்!

அடி பாவி! காலையில் இருந்து சுத்தி சுத்தி வந்ததற்கு இது தான் காரணமா? ஒரு முழு நாள் இந்த விஷயத்தை சொல்லாமல் மறைத்து வைத்து தன்னை பார்த்து எத்தனை முறை சிரித்தாளோ? இவளை...

இல்லை இல்லை அவள் சொல்ல முயன்று இருக்கிறாள். ஒரு முறை இரு முறை அல்ல பல முறை அவள் குறிப்புகளை கொடுத்து கொண்டே தான் இருந்தாள்.

முதன் முதலில் சாலையில் அந்த பூனைக்குட்டி அடிபட்ட நேரத்தில் அவளின் பெயரை விசாரித்த போது கோபமாக, 'இன்னும் கொஞ்சம் போனால் என்னையே தெரியாது என்று சொல்வீர்கள் போல?'. என்று சொன்னாளே?

அதன் பிறகு ஹோட்டலில், அவளுடைய முகவரியை கண்டு பிடிக்க சவால் விட்ட போது, என் போட்டோவை பயன்படுத்தக் கூடாது என்று நிபந்தனை விதித்தாளே! அப்போது உன் போட்டோ என்னிடம் இருக்கா என்று கேட்டபோது எப்படி சிரித்து இருப்பாள்?

அம்மாவிடம் போனில் சரியாகப் பேசுவதில்லை என்று சண்டை போட்டாளே! தன்னை பற்றி அவளுக்கு எப்படித் தெரிந்தது என்று யோசித்தானே தவிர இதற்கு இப்படி ஒரு காரணம் இருக்கும் என்று அவன் யூகிக்கவே இல்லையே?

கடைசியில் அவளிடம் தன் விருப்பத்தை சொன்ன பிறகு கூட எப்படி எல்லாம் மடக்கி மடக்கி கேள்வி கேட்டாள்? அவங்க அம்மாவிடம் சம்மதம் கிடைக்குமா என்றதற்கு 'முயற்சி செய்கிறேன்' என்று சொன்னாளே!

எவ்வளவு நக்கல்? சரியான போக்கிரி... அவளை...

அம்மாவோடு பலமான கூட்டணியா? அது என்றென்றும் தொடர்ந்தால் அவனுக்கு சந்தோஷம் தான். அவளை தான் பார்த்துப் பிடித்து இருக்கிறது என்பதை உணரும் முன்பே வீட்டில் பார்த்து நிச்சயம் செய்து விட்டார்கள் என்பது எவ்வளவு சந்தோஷமான விஷயம்?

வானத்தில் பறப்பது போல இருந்தது. அவளை உடனே பார்க்க வேண்டும் என்பது போல இருந்தது. மனம் பரபரக்க அவளின் போன் எண்களை பாதி அழுத்திய பின்பே மொபைல் அவளிடம் இல்லை என்ற நினைவு வந்தது.

போனில் ஏன் பேச வேண்டும்? கை திருப்பி மணி பார்த்தான். பனிரண்டாக இன்னும் இருபது நிமிடம் இருந்தது. அவளிடம் மதியம் சவால் விட்டது நினைவு வர, நேரிலேயே போய் விடலாம் என்று முடிவு செய்தான்.

அவளுடன் தனியாக ஒரு மணி நேரமாவது இருக்க வேண்டும். செல்லமாக சண்டை போட வேண்டும். சின்ன சின்ன சீண்டல், சிரிப்பு, ஸ்பரிசம், சுகமான தண்டனை எல்லாமே உடனே வேண்டும்.



இங்கிருந்து அவளின் வீட்டிற்கு போக இரண்டு நிமிடம் கூட ஆகாது. அவளை இறக்கி விடும் போது மாமியாரை பார்க்க அழுக்கு உடையுடன் வரவில்லை. காலையில் பார்க்கிறேன் என்று சொன்னானே? இப்ப அவளை அழுக்கு உடையுடன் பார்ப்பதா? நெவர்!

வினாடியில் முடிவெடுத்து காரை அவனுடைய அலுவலர் குடியிருப்பிற்கு விரட்டி அடுத்த ஐந்தாவது நிமிடம் அங்கே குளியலறையில் ஷவரின் கீழ் நின்று இருந்தான்.

* * *

கமலக்கண்ணன் தன்னை இறக்கி விட்டுப் போன பின்பு, சிரிப்புடன் வீட்டின் உள்ளே வந்தவள் அம்மாவின் கவலையான விசாரணைக்கு உரிய பதில் சொல்லி விட்டு அறைக்குள் வந்தாள்.

அவன் இந்நேரம் அம்மாவிடம் பேசி இருப்பானா? பேசும் போது உண்மை தெரிந்த உடன் என்ன செய்வான்? கிட்டே இருந்து முகத்தில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தையும் பார்த்து ரசிக்க வேண்டும் போல இருந்தது. வரும் போதே, 'இப்போதே அம்மாவிடம் பேசு', என்று சொல்லி இருக்க வேண்டும். தப்பு பண்ணி விட்டாள்.

அவன் போன் பண்ண தயங்கியதற்கான காரணத்தை ஊகிக்க முடிந்தது. எடுத்த எடுப்பில் யாரும் சரி சொல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாதே? தன் முன்னால்

அம்மாவிடம் வாக்குவாதம் வேண்டாம் என்று நினைத்து இருப்பான். அவன் வரையில் அது சரிதான்.

இந்நேரம் பேசி இருந்தால் அவனுக்கு உண்மை தெரிந்து இருக்குமே? உடனே தன்னை அழைப்பான் என்று எதிர்பார்த்தது நடக்கவில்லையே? தன்னுடைய மொபைல் இல்லை என்று விட்டு விட்டானா? ப்ச்! தன் வீட்டு நம்பர் அவனுக்குத் தெரியாமல் இருக்குமோ? ஆனால் தன்னுடைய விபரங்கள் அவனுக்கு கொடுக்கப் பட்டதில் இதுவும் இருக்குதே? ஏன் பேசவில்லை?

ஒன்று... இரண்டு... ஐந்து... பத்து நிமிடங்கள் அவ ளுக்கு இருப்பு கொள்ள வில்லை. ஏன் என்ன ஆச்சு? ஒரு வேளை தான் முன்பே விஷயம் சொல்லவில்லை என்று தன் மீது கோபமாகி விட்டானா? அதனால் தான் பேசவில்லையா? நாளைக்கு வர மாட்டானோ?

நினைக்கவே 'திக்' என்று இருந்த. ச்சே ச்சே! அவன் அவ்வளவு மோசம் இல்லை. போக அவனே கோபப் பட்டாலும் அவங்க அம்மா விட மாட்டாங்க. சமாதானப் படுத்தி வர வச்சுடுவாங்க. ஆனால்... ப்ச்!

சும்மா இல்லாததும் பொல்லாததும் கற்பனை பண்ணாதே ராதிகா. அவன் வீட்டில் போய் பேசலாம் என்று இருந்து இருக்கலாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் பேசுவான். பொறுமையா இரு. பொழுதை நெட்டி தள்ள, அறையில் இருந்த டீவியை போட்டு இலக்கே இல் லாமல் சேனல் மாற்றிக் கொண்டே இருந்தாள்.

இங்கிருந்து குவார்ட்டர்ஸ் போக ஐந்து நிமிடம் கூட ஆகாதே? அப்புறம் அஞ்சு நிமிஷம் பேசினாலும் இப்போ அரை மணி நேரம் ஆன பின்பும் அவன் தன்னை



அழைக்காததற்கு பொருத்தமான காரணத்தை அவளால் ஊகிக்க முடியவில்லை என்பதால் பதட்டம் ஏற ஆரம் பித்தது.

அவனே பேச வேண்டும் என்று என்ன கட்டாயம்? தானே அழைக்கலாமே? ஹாலுக்கு போய் கார்ட்லெஸ் போனை எடுத்து வந்து படுக்கையில் அமர்ந்து அவ னுக்கு போன் பண்ணலாமா வேண்டாமா என்று பட்டி மன்றம் நடத்தினாள். இரவு நேரம் அழைக்கலாமா என்ற தயக்கத்தை உடனே பேச வேண்டும் என்ற ஆசை வென்று, அவனுக்கு போன் பண்ணினாள்.

மீண்டும்... மீண்டும்... முயன்றாள்.

முழுசாக மூன்று முறை ரிங் போய் நின்றும் போன் எடுக்கப்படவே இல்லை. எவ்வளவு அடக்கியும் கண் களில் கண்ணீர் திரள ஆரம்பித்தது. ஒரு மணி நேரத் திற்கு முன்பு அவனிடம் 'எனக்கு அழுது பழக்கம் இல்லை', என்று பெருமை அடித்தது நினைவில் வந்து கண்ணீரை மேலும் அதிகப்படுத்தியது.

''என்ன நடந்தது என்று தெரியாமலேயே இப்போ எதுக்கு இந்த கண்ணீர்?'' என்று மூளை கேட்டாலும் கண்கள் கண்ணீரை வார்ப்பதை நிறுத்தவே இல்லை.

யாரோ கதவை தட்டும் 'டக்... டக்...', என்ற ஒலி கட்டிலில் குப்புறப் படுத்து கண்ணீர் பெருக்கிக் கொண்டு இருந்த ராதிகாவை நிமிர வைத்தது. எங்கிருந்து சத்தம் வருகிறது?

வாசல் கதவை தட்டும் ஒலி இங்கே உள்ளே கேட் காதே. போக இந்நேரத்தில் யார் வரக்கூடும்? அழைப்பு மணி வேறு இருக்கே? அம்மா போய் திறக்கட்டும் என்று

மீண்டும் படுக்க முயன்றவளை மிக அருகே கேட்ட ஒலி, திரும்பிப் பார்க்க வைத்தது.

'பால்கனி கதவா? இங்கே யார்...?' அவசரமாக விளக்கை போட்டு மணி பார்த்தாள். பனிரெண்டாக இன்னும் இரண்டு நிமிடங்கள் மட்டுமே இருப்பதை பார்த்த உடனே, அறையில் இருந்த குழல் விளக்குக்கு போட்டியாக மூளைக்குள்ளும் விளக்கெரிந்தது.

'ஹேய்... கண்ணன்...' என்ற உற்சாக கூவலுடன், பாய்ந்து வந்து கதவை திறந்தவளுக்கு ஏமாற்றமில்லை.



# 20

வீட்டு தோட்டத்தில் பூத்த அலங்கார சாமந்தி பூக்கள் பத்து பதினைந்து அடங்கிய சின்ன பூங்கொத்துடன் முகம் மலர்ந்த சிரிப்புடன் சந்தன நிற ஜிப்பாவுடன், கதவில் சாய்ந்து நின்று இருந்தது கமலக்கண்ணனேதான்.

'ஹாய் பேபி. திஸ் இஸ் பார் யு', என்று ஒரு கண் சிமிட்டலுடன் பூங்கொத்தை நீட்டியவனை தாவி வந்து அணைத்து கொண்டாள்.

அவனை பார்ப்பதற்கு முன்பு ஏமாற்றத்தில்... சோகத்தில்... கவலையில்... என்ற கலவையான உணர்ச்சிகளினால் வந்த கண்ணீர் இப்போது ஆனந்தக் கண்ணீராக மாறி இருக்க, அவனின் சட்டையை அவளின் கண்ணீர் நனைக்க ஆரம்பித்தது.



''ஹேய் ராதிகா! காக்கி சட்டையை நனைத்தது போதாது என்று காட்டன் ஜிப்பாவையும் நனைக்க வந்து விட்டாயா?'', முகத்தில் கேலியாகவும், ''லேட்டா வந்ததுக்கு அம்மா ஏதாவது திட்டினாங்களா?'', என்று அக்கறையாகவும், ''கை வலி ரொம்ப ஜாஸ்தியாகி விட்டதா? டாக்டரிடம் போகலாமா?'', என்று கவலையாகவும் மாறி மாறி கேள்விகளை அடுக்கிய கமலக்கண்ணனுக்கு பதிலாக கிடைத்தது மறுப்பான தலை அசைப்பு மட்டுமே!

''ஷ்! ராதிகா எதுக்கு இந்த கண்ணீர் என்று எனக்கு புரியலை. என்ன ஆச்சு? சொல்லப் போகிறாயா இல்லையா?'' என்று அவளை தன்னை விட்டு விலக்கி நிறுத்தி, பூங்கொத்தை ஏந்திய கைகளால் அவளின் முகவாயை நிமிர்த்தி கேட்டான்.

''ஒன்றும் இல்லை'', என்றவளின் குரல் இப்போது இயல்பு நிலைக்கு மீண்டு இருக்க' பார்வை அந்த பூங்கொத்தில் பதிந்தது.

''ஓ! இந்த பொக்கே பிடிக்கலையா? ராத்திரி பனிரெண்டு மணிக்கு நான் எங்கே போய் பொக்கே வாங்குறது? அதனால் குவார்ட்டர்சில் பிளவர் வேசில் இருந்த பூவையே எடுத்து வந்துட்டேன். அதுக்கா இந்த அழுகை? சில்லி கேர்ள். நாளைக்கு பெரிய ரெட் ரோஸ் பொக்கே எடுத்துட்டு வரேன் ஓகே?'', என்று கண் சிமிட்டியவனின் குரலில் கேலி இருந்தது.

''ப்ச்...! கேலி பண்ணாதீங்க'', என்று அவன் நெஞ்சில் செல்லமாக குத்தியவளின் கைகளை பற்றி திருப்பி உள்ளங்கையில் முத்தமிட்டு அணைத்துக் கொண்டான்.

''என்ன ஆச்சு ரதி?'' என்றவனின் குரல் கனிந்து இருந்தது.

''நீங்க ஏன் உங்க அம்மாவிடம் பேசிட்டு போன் பண்ணலை? நீங்க தான் பண்ணலை என்றால் நான் பண்ணும் போதும் எடுக்கலை? நான்... நான் பயந்துட்டேன் தெரியுமா?'' என்றவள் அவன் மார்பில் அழுத்தமாக சாய்ந்து கொண்டாள்.

''பயந்து விட்டாயா? ஏன்?''

''உங்களுக்கு கோபமோ... என்று... பயந்து விட்டேன்'' என்று அவள் முடிக்கும் முன்பே அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

''ஷ்! மெல்ல மெல்ல... ஹையோ என்ன இப்படி சிரிக்கிறீங்க? அம்மா விழித்து விட போறாங்க...'' என்று அவள் பதறி அவன் வாயை மூட, அவன் 'ஓகே... ஓகே...' என்று முயன்று சிரிப்பை கட்டுப்படுத்தினான்.

''நான் கூட எனக்கு ஆக்சிடென்ட் ஆகிவிட்டது என்று பயந்து விட்டாயோ என்று நினைத்தேன். கோபமா? உன் மேலேயா? நீ யார் என்று சொல்லாததற்கா? ஹாரிபிள் ரதி. இதுக்கு ஏன் கோபப்படணும்? அது சந்தோஷப்படும் விஷயம் இல்லையா?'' என்று மீண்டும் சிரித்தவனை முறைத்தாள்.

''ரொம்ப சிரிக்காதீங்க. எனக்கு எப்படித் தெரியும்? போன் பண்ணினால் எடுக்காமல் இங்கே வந்து நின்று கதையா பண்றீங்க?'' என்று குறை படித்த வேளையில் தூரத்தில் எங்கோ சர்ச்சில் பனிரெண்டானதை குறிப்பிடும் வகையில் மணி அடித்தது.



''ஹேய் ரதி! மணி பனிரெண்டாச்சு. நாம சண்டையை அப்புறம் தொடர்வோம். அதுக்கு முன்னாடி இந்த நிமிஷம் நான் உன்னிடம் ஒண்ணு சொல்லணும்...'' என்றவன் முகத்தில் சிரிப்பு இருந்தது.

'''ம்ம்ம். நீங்க மதியம் ஹோட்டலில் சொன்ன மாதிரி சவாலில் ஜெயித்தாச்சு என்று தானே சொல்லப் போறீங்க?''

''அதுக்கு பதில் நான் ஜீப்பில் ஒரு மணி நேரம் முன்பே சொல்லி விட்டேன். இது வேறே விஷயம்...'' என்றவன் குரல் கனிந்து ரகசியமாக மாறியது.

''வேறே... என்ன... சொல்லப் போறீங்க...'' என்று திணறியவளால் அவன் என்ன சொல்லப் போகிறான் என்று ஊகிக்க முடிந்தது.

அவளின் சிவந்த முகத்தை ரசனையோடு பார்த்து, பூங்கொத்தை நீட்டி, ''ஐ... லவ்... யு...'' என்று அந்த மூன்று வார்த்தைகளையும் மிக மென்மையாக அவன் உச்சரித்த விதத்திலும், அந்த பூங்கொத்தை வாங்கும் போது ஏற்பட்ட சின்ன ஸ்பரிசத்திலும் அவளின் தேகம் முழுவதும் ஒரு இனிய உணர்வு படர்ந்தது. முகம் சூடாகி சிவப்பதை உணர முடிந்தது.

''இதை மட்டும் அப்போதே சொல்லவில்லையாக்கும்?'' என்று கேட்டவள் முக சிரிப்பை மறைக்க பிரம்மபிரயத்தனம் செய்ய வேண்டி இருந்தது.

''இதை ஏற்கனவே சொல்லியாச்சா? அப்ப வேறே ஏதாவது கட்டாயம் உடனே உன்னை ஏமாற்றாமல் புதுசா சொல்லிடலாம்'' என்றவன் தன் ஜிப்பாவில் இருந்து ஒரு சின்ன நகைப் பெட்டியை எடுத்தான்.

''ஹேய்! இது மதியம் செலக்ட் பண்ணிய மோதிரம் தானே? அப்பவே வாங்கிட்டீங்களா?'' என்றவளின் குரலில் அபரிதமான உற்சாகம் பொங்கி வழிந்தது.

''பரவாயில்லை. நீ பயங்கரமா கெஸ் பண்ணுகிறாய். இந்த மோதிர அளவுக்கு பார்க்கும்போது கூட என்ன எல்லாம் கதை சொன்னாய்? யு ஆர் டூ ஸ்மார்ட் பேபி. ஐ லவ் இட்...'' என்றவன் அவளின் கரம் பற்றி இழுத்த வேகத்தில் அவன் மேல் வந்து ஒரு பூங்கொத்தாக மோதினாள்.

விலக முயன்றவளை விடாமல் அணைத்தபடி, அவளின் நெற்றியில் தன் நெற்றியை வைத்து அழுத்தி, ''காலையில் பத்து மணியில் இருந்து ராத்திரி பதினொன்றரை வரை. அத்தனை தடவை பார்த்து அவ்வளவு பேசிய பிறகும் இந்த விஷயத்தை மட்டும் சொல்லாமல் எப்படி எல்லாம் சமாளித்து இருக்கிறாய்? உனக்கு இதுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்? அதுவும் இப்போதே... இந்த இடத்திலேயே கொடுக்க வேண்டும்...'' என்று செல்லமாக மிரட்டியவனைப் பார்த்து பழிப்பு காட்டினாள்.

''ம்ம்ம். நான் ஸ்மார்ட்டா இருந்தால் பரிசுதான் கொடுக்கணும். எதுக்கு தண்டனை?''

''பரிசுதானே? என் ரதிக்கு இல்லாததா? நான் எல்லாத்துக்கும் ரெடியா தானே வந்து இருக்கேன்...'', என்றவன் அந்த நகைப் பெட்டியை திறந்து மோதிரங்களை வெளியே எடுத்து அவளிடம் ஒன்றை கொடுத்தான்.



''காலையில் பத்து மணிக்கு பார்த்து, அன்று இரவே பனிரெண்டு மணிக்கு திருமணம் நிச்சயம் செய்ய வந்து இருக்கும் ஆள் இந்த உலகத்தில் நான் ஒருவனா தான் இருப்பேன். சோ ஸ்பெஷல் அண்ட் எக்ஸ்க்ளூசிவ்...'', என்று கண் சிமிட்டியபடி அவளின் வலது கைப் பற்றி, லேசாக உயர்த்தும் போதே, 'வலிக்குதா' என்று கேட்க மறக்கவில்லை.

''ஹேய்... நான் விட்டால் இந்த பேண்டேஜ் பிளாஸ்டரையே கழட்டி தூக்கி எறிந்து இருப்பேன். உங்களுக்காக தான் போட்டு இருக்கேன். நீங்க இவ்வளவு பயப்படும் அளவுக்கு இது பெரிய காயம் இல்லை கண்ணன்...'' என்று அடிபட்ட வலது கையையே உயர்த்தி அவனின் கன்னத்தை வருட, அவன் புன்னகைத்தான்.

''என் மனநிலைக்கு இவ்வளவு மரியாதை கொடுப்பதற்கு தேங்க்ஸ் டியர். இது நம் வாழ்வின் இறுதிவரை தொடரும் என்று நம்புகிறேன்'' என்று சொன்னவன் புன்னகையோடு அவளின் வலது கை மோதிர விரலில் மோதிரத்தை அணிவித்தான்.

''இதை நாளைக்கு அம்மாவோடு வரும் போதே கொண்டு வந்து இருக்கலாமே? இந்நேரத்தில் அவசரமா எதுக்கு வந்தீங்க?'' என்று கொஞ்சலாக கேட்டபடி, அவனின் விரலில் மோதிரத்தை அணிவித்து விட்டு அவனின் கையை இந்த புறமும் அந்த புறமும் திருப்பி அழகு பார்த்தாள்.

''இது என் லவர், அவளுடைய லவருக்கே தெரியாமல் அளவெடுத்து செலக்ட் பண்ணிய ஸ்பெஷல் மோதிரமாக்கும். இதை போய் எங்க அம்மா கொடுக்க

வைத்து இருப்பதோடு சேர்க்க முடியுமா?'', என்று ராதிகாவிடமே அவளைப் பற்றி பெருமை பேசிய கமல கண்ணனைப் பார்க்க அவளுக்கு சுவாரஸ்யமாக இருந்தது.

''ம்கூம். உங்க லவர் பத்தி ரொம்ப ஒன்றும் என்னிடம் பீத்திக்க வேண்டாம்...'' என்று கேலியாக பழிக்க அவன் சிரித்தான்.

''ஹேய்! அவளைப் பத்தி தப்பா ஏதாவது சொன்னால் நானே உன்னை சும்மா விடமாட்டேன். அவ ரோஷக்காரி. நான் எதையாவது பரிசா கொடுத்தால் ஒண்ணுக்கு இரண்டா உடனே திருப்பி கொடுத்து விடுவாள். தெரியுமா?'' என்று செல்லமாக மிரட்டி கன்னத்தை வாகாக திருப்பி காட்டியபடி அவளை அருகே இழுத்தான்.

''திருப்பி தானே கொடுக்கணும்... கொடுத்துட்டால் போச்சு...'' என்று அவன் கன்னத்தில் அடி ஒன்று வைக்க, ''ப்ச்! இதையா கேட்டேன்...'' என்று அவன் சிணுங்கினான்.

''இது இல்லையா? சரி...'' என்று தன் கழுத்தில் இருந்த ஆர் என்ற ஆங்கில எழுத்திலான டாலருடன் கூடிய மெல்லிய தங்கச் சங்கிலியை கழட்டி அவனின் கழுத்தில் அணிவித்தாள்.

''ஹேய்! நான் நகை கேட்கலை. இது எதுக்கு...?''

''நீங்க மோதிரம் போட்டு நிச்சயம் பண்ணினீங்க இல்லையா? நான் சங்கிலி அணிவித்து கல்யாணம் பண்ணினேன்'' என்று கண் சிமிட்ட அவன் ஆச்சரியமாக பார்த்தான்.

'அதென்ன எப்ப பார்த்தாலும் ஆண்களே பெண்ணுக்கு தாலி கட்டுவது? ஒரு சேஞ்சுக்கு நான் கட்டு



கிறேன். கடைசி வரை கழட்டக் கூடாது...' என்று ஒரு விரல் காட்டி மிரட்ட அவன் சத்தமாக சிரித்தான்.

''சரி. நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்று இழுத்தவன் கண்ணில் குறும்பு கிலோ கணக்கில் வழிந்தது.

''சொல்லுங்க...'' என்று தோளை குலுக்க, அவன் சிரிப்போடு ஆராய்ந்தான்.

''நிச்சயம் முடிந்து இப்போ கல்யாணமும் முடிந்து விட்டதுதானே?'' என்று கேட்டபடி அவளின் இடுப்பில் கை வைத்து அருகே இழுத்தான்.

அடுத்து என்ன சொல்லப் போகிறான் என்பதை யூகிக்க முடிந்ததால், உள்ளுக்குள் எச்சரிக்கை மணி அடிக்க, ''க..ண்..ண..ன்..! இப்படி அர்த்த ராத்திரி பனிரெண்டு மணிக்கு எதுக்காக வந்தீங்க?'' என்று பதறினாள் ராதிகா.

''ஹா ஹா! நான் வந்து அரை மணி நேரம் கழித்து திடீர் என்று ஞானோதயம் வந்து இருக்கே! இது எப்படி ரதி?'' என்று கேலியாக கேட்டவனின் கரங்கள் அவளை இன்னும் நெருக்கமாக தன் அருகே இழுத்தது.

''இப்ப எதுக்கு இங்கே வந்தீங்க என்று கேட்டேனே? எதுவா இருந்தாலும் தள்ளி நின்று பேசுங்க... கண்ணன்... ப்ளீஸ்...'' என்றவளின் குரல் இயல்பு நிலைக்கு திரும்பி இருந்தது.

''நான் ஒரு போலீஸ் ஆபீசர். எங்கே வேண்டுமானாலும் எப்போ வேண்டுமானாலும் போகலாம். தெரியுமோ?''

''இந்தக் கதை எல்லாம் வேண்டாம். நான் சட்டம் தெரியாத சின்ன பாப்பா இல்லை...''

'நானும் சின்ன பாப்பா சொல்லவில்லையே?'' என்றவன் வசதியாக சட்டம் தெரியாத என்ற அடைமொழியை விட்டு இருந்தான்.

''ப்ச்! ஐயோ. நான் என்ன சொன்னால் நீங்க எப்படி மாத்துறீங்க? சர்ச் வாரன்ட் இல்லாமல் எந்த வீட்டுக் குள்ளும் போலீஸ் போக முடியாது. அதுவும் ராத்திரி பனிரெண்டு மணிக்கு தனியா இரண்டு பெண்கள் மட்டும் இருக்கும் ஒரு குடியிருப்புக்கு பெண் காவலர் இல்லாமல் நுழையக் கூடாது தெரியுமா?''

''அடேங்கப்பா! மேடம் பெரிய சட்ட வல்லுநர் போல இருக்கே? இப்ப எனக்கு சில விபரங்கள் தெரியணும்...''

''என்ன தெரியணும்? எதுவா இருந்தாலும் வாசல் வழியா வராமல்... இப்படி பால்கனியில் கயிறு கட்டி ஏறி வருவது சரி இல்லை சொல்லிட்டேன்...''

''காதலிலும் சண்டையிலும் எல்லாமே சரி தான்.''

''அ..து..க்..கு..?''

''நீ என்னை பனிரெண்டு மணி நேரமா அலைகழித்த தற்கு உனக்கு நான் தண்டனை கொடுத்தே ஆகணும்...''

''என்ன தண்டனை வேண்டுமானாலும் கணக்கு வச்சுக்கோங்க. அப்புறமா நான் கொடுக்கிறேன்.''

''அப்புறமான்ன... எப்போ...?''

''க..ல்..யா..ண..த்..து..க்..கு அப்புறம்...'' அவளின் குரல் திக்கித் திணறியது.

''நமக்கு தான் கல்யாணம் இப்ப ஆகி விட்டதே...''

''கண்ணன்... ப்ளீஸ்... நோ...'', என்ற ராதிகாவின் குரல் தொண்டையை விட்டு வெளியே வரவே இல்லை. அவனிடம் இருந்து விலகி பின்னே நடந்தவள் சுவர் தட்டி நிற்க. அவன் இரண்டு கைகளையும் சுவற்றில் பதித்து நெருங்கினான்.



குனிந்து ஒற்றை விரலால் அவளின் முகவாயை நிமிர்த்தி, கன்னத்தில் இதழ் பதித்த போது எங்கோ தூரத்தில் சர்ச்சில் மணி அடித்தது. அந்த சர்ச் மணி ஓசை, அவன் இங்கே வந்து ஒரு மணி நேரம் ஆகி விட் டதை உணர்த்த, சட்டென்று விலகினாள்.

''கண்ணன். நீங்க வந்து ஒரு மணி நேரம் ஆச்சு. கிளம்புங்க. காலையில் பார்க்கலாம்...''

''என்ன ஆச்சு ரதி?'', என்று மீண்டும் அணைக்க முயன்றவனை உறுதியாக தடுத்தாள்.

''கண்ணன்... போதும்... கிளம்புங்கம்மா... எனக்காக... நான் போனில் பேசுகிறேன்... ப்ளீஸ்...''

''ஹேய். ஓகே... ஓகே...! எனக்குப் புரியுது. எதுக்கு இத்தனை ப்ளீஸ்...? ஆனால் உனக்கு தான் எதையும் வாங்கிக் கொள்ள மட்டும் பிடிக்காதே. உடனே திருப்பி கொடுத்து விட வேண்டுமே? உன்னை கடனாளியா விட்டுட்டு போக எனக்கு மனசில்லையே?'' என்று கண் சிமிட்ட அவள் புன்னகைத்தாள்.

''தி..ரு..டா...'', என்று செல்லமாக திட்டியவள் அவன் கன்னத்தில் பட்டும் படாமல் இதழ் பதித்து விலக அவன் இடுப்பில் கை வைத்து நின்றபடி முறைத்தான்.

''நானா திருடன்? நீதான் திருடி. என்னை ஏமாற்று கிறாய். நான் இப்படியா கொடுத்தேன்? நல்லா கொடு. இல்லை என்றால் ஒழுங்கா கொடுக்கும் வரை நான் இந்த இடத்தில் இருந்து கிளம்பவே மாட்டேன்...'', என்று

செல்லமாக மிரட்ட அவன் முதுகில் ஒரு அடி வைத்து விட்டு அவனின் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்த வளை இறுக்கி அணைத்து கொண்டான் கமலக்கண்ணன்.

''ம்ம்ம்... போதும்...'' என்று விலகியவளின் கன்னத்தில் லேசாக தட்டி விட்டு வந்த வழியே கண்ணனின் உடல் மட்டும் வெளியே போக உள்ளம் இங்கேயே ராதையின் மனச்சிறையில் அழுத்தமாக அமர்ந்து இருந்தது.

மதுரா சிறைச்சாலையில் ஜனித்த கண்ணன் ஆயர் குல மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த கோகுலத்தில் அடி எடுத்து வைத்த நேரம் நள்ளிரவு.

தன் இதயம் திருடிய காதலியின் மனச் சிறையில் விரும்பி ஆயுள் தண்டனை அனுபவிக்க, ஏரி காத்த ராமர் குடிகொண்ட மதுராந்தகத்தில் பிறந்த கமலக்கண்ணன் ராதிகாவின் அறைக்குள் புகுந்த இந்த நள்ளிரவு வேளையும் சுபமாகவே இருக்கும்.

இனி அவர்கள் வாழ்வில் எல்லாம் சுகமே!